திருச்சி மாவட்டம்

TRICHI MĀVAṬṬAM

by

CONNEMARA PUBLIC LIBRARY
25 FEB 1957
MADRAS

MADRAS

ஐந்தாண்டின் சாதனைகள்

(1951-56)

முதற் பதிப்பு : செப்டம்பர் 1956.

விலை அணா : 4

60823

2115165'N56 ← N51
3157

சென்னை அரசாங்க செய்தி விளம்பரத்துறை
வெளியீடு.

CONNEMARA PUBLIC LIBRARY
25 FEB 1957
MADRAS

பொருளடக்கம்

	பக்கம்
நூல் முகம்	5
வளமார் சிராப்பள்ளி	11
நீர் பெருக	15
நிலம் கொழிக்க	27
தொழில் வளர	49
அறிவு வளர	57
நாடு உயர	67
தாழ்வு நீங்க	95
அமைதி நிலவ	111
நலம் சிறக்க	119
எல்லோரும் கூடி இன்புற்றிருக்க	129
முன்னேற்றப் பாதையிலே	141

அட்டைப் படம் :—மலைக் கோட்டையின் அழகிய தோற்றம்.

பின்புற அட்டை :—அகண்ட காவிரியில் ஒரு கவின் மிகு காட்சி.



CONNEMARA PUBLIC LIBRARY
25 FEB 1957
MADRAS

நூல் முகம்

வானத்திலே வட்டமிட்டுத் திரியும் வண்ணப் பறவைகளும் காட்டிலே கவலையற்று வாழும் விலங்குகளும், "நாளை என்ன?" என்பதையே நினையாது வாழ்பவை. இன்று என்ன? என்பது தான் அவைகளின் முதல் எண்ணம். ஆனால் மனிதன் அவ்வாறு வாழ முடியாது. அவ்வாறு வாழ நினைப்பதும் அறிவுடைமை யாகாது.

இன்றைய நாளையும், வரப்போகும் நாளையும் எண்ணி அதற்கேற்ப வாழ்வை வகுப்பதில் தான் மனிதனின் உயர்வும், அமைதியும், பண்பும் விளங்குகின்றன. அப்போதுதான் அவன் கழிந்த நாட்களுக்காகக் கழிவிரக்கம்கொள்ளாமல் அமைதியான வாழ்க்கையை வாழமுடியும். இதனை நம் முன்னோர்கள் நமக்கு நன்கு வலியுறுத்திக் காட்டியுள்ளனர்.

←—திருவரங்கம்

துன்பம் வருவதற்கு முன்னர் அதனை அறிந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளாதவனின் வாழ்வு, எரிகின்ற தீயின் முன்னே இடப்பட்ட வைக்கோல் போரைப் போன்று அழிந்து போய் விடும் என்னும் பொருளுடன், வள்ளுவரும்

“ வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்,”

என்று கூறியுள்ளார்.

வள்ளுவன் வகுத்த அறநெறியிலே நிகழ் காலத்தையும், வருங் காலத்தையும் எண்ணி, நாடு முழுவதும் நலம் பெறும் வகையில் முதல் ஐந்து ஆண்டுத் திட்டம் நம் அரசாங்கத்தால் தீட்டப்பெற்றது

1951-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட்ட இத் திட்டம் 1956-ம் ஆண்டு மார்ச் மாதத்தோடு முடிவடைந்தது. இத் திட்டத்தில் குறிப்பிட்டிருந்த எல்லாப் பணிகளையும் நாம் குறிப்பிட்டிருந்த காலவரையறைக்கு முன்பே முடித்துவிட்டோம். மக்களின் ஒன்றுபட்ட ஒத்துழைப்பினாலும் அரசாங்க ஊழியர்களின் ஆர்வத்தாலுமே நாம் இத் திட்டத்தை வெற்றிகரமான முறையில் சாதிக்க முடிந்தது,

இத் திட்டத்தின் தொடக்க காலத்தில் நம் மாநிலத்திற்குக் கிடைத்த மொத்தத் தொகை 86·43 கோடி ரூபாயாகும்.

தனித்தனியே ஒவ்வொரு துறைக்கும் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆகிய செலவின் விவரத்தைச் சுருக்கமாகக் கீழே காணலாம்:—

சென்னை மாநிலம்

முதல் ஐந்தாண்டுத் திட்டம்

(1951 ஏப்ரல் முதல் 1956 மார்ச் முடிய)

ஒதுக்கப்பட்ட தொகை சுமார் ரூ. 86 கோடி.

செலவாகிய தொகை சுமார் ரூ. 84 கோடி.

துறைகள்	ஒதுக்கப்பட்டது (லட்சத்தில்) ரூ.	செலவானது (லட்சததில்) ரூ.
வேளாண்மை ...	902	857
கால்நடை வளர்ச்சி.	56	43
பால் பெருக்கம் ...	13	16
காடுகள் ...	75	29
கூட்டுறவு ...	17	11
மீன் துறை ...	49	35
கிராம வளர்ச்சி ...	30	77

துறைகள்	ஒதுக்கப்பட்டது (லட்சத்தில்) ரூ.	செலவானது (லட்சத்தில்) ரூ.
நீர்ப்பாசனம் ...	2,019	2,086
மின்சாரம் ...	3,086	3,068
குடிசைத் தொழில்கள் ..	44	52
ஏனைய தொழில்கள் ...	128	113
பாதைகள் ...	358	297
கல்வி ...	494	406
மருத்துவம் ...	248	248
சுகாதாரம் ...	518	475
மனையிடம் ...	190	152
பின்தங்கிய வகுப்புக்கள் ..	416	440
மொத்தம் ...	8,643	8,414

நீர்ப் பாசனத்திற்கும் மின்சாரத்திற்கும் மட்டும் நூற்றுக்கு அறுபது ரூபாய் மேனியில் செலவிட்டு உள்ளோம். இதன் பயனாய் நாலு லட்சம் ஏக்கருக்கு இப்போது நீர் பாய்கிறது. பல கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கி அவைகளை ஒளியுடைய ஊர்களாக்கி உள்ளோம். மற்ற மாநில அரசாங்கங்களைவிட இத் துறையில் நமது சாதனை மிகவும் பெருமைப் படக்கூடிய முறையிலே உள்ளது.

முதல் திட்டத்தோடு நம்முடைய லட்சியங்கள் நிறைவெய்தவில்லை. நாட்டிலே இன்னும் உணவுக்குறைவும், தொழிலிலே பிற்போக்கும், மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டமும் நிலவி வருகின்றன. இவை அனைத்தும் நீங்கினால் ஒழிய நாடு நலம் பெற்றுவிட்டது என்று கூறமுடியாது. மக்களின் வாழ்வும் மேனிலை எய்திவிட்டதாக அமைதி அடையமுடியாது.

இவை அனைத்தையும் போக்குவதற்குத்தான் முதல் ஐந்து ஆண்டுத் திட்டம் முடிந்தஉடனே, இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டம் தொடங்கப் பெற்றுள்ளது. இத் திட்டத்தால் நாடு பெரும் அளவுக்கு வளமடையும். பெரிய பெரிய தொழில்கள் தொடங்கப் பெறும். மக்களின் ஏழ்மையும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும். பஞ்சமும், பிணியும், துன்பமும், துயரமும் அடியோடு அழியும்.

இப் பெரும் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற மக்கள் அனைவரும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பார்களாக! அரசாங்கம் வேறு, மக்கள் வேறு என்று யாரும் எண்ணக்கூடாது. மக்களின்

நல்வாழ்வே அரசாங்கத்தின் இனிய வாழ்வு. அரசாங்கத்தின் பயனே மக்களின் பயன். மக்களின் அரசாங்கம் தழைக்க மக்கள் அனைவரும் ஒத்துழைப்பார்களாக!

CONNEMARA PUBLIC LIBRARY
25 FEB 1957
MADRAS

வளமார் சிராப்பள்ளி

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை யதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி!

பூவார்ந்த சோலையிலே மயில்கள் ஆடின; வண்டுகள் ஆர்த்தன. குயில்கள் குழலிசைக்கும் அப்பொதும்பரின் ஊடே அன்னம் என நடந்தாள் அன்னை காவேரி. மணிப்பூ ஆடையைப் போர்த்து, சோலைகளின் இடையே அவள் வழிநடந்தாள். கரிய கண்ணை விழித்து ஒல்கி நடந்தாள். செவ்வானம் மாறியது. காலைக் கதிரோன் தன் பொற்கரங்களை நீட்டினான். இயற்கை இளநகை காட்டினாள். கடமையில் கருத்தூன்றிய பொன்னி புன்முறுவல் பூத்தாள். வையமெங்கும் வனப்புச் சொரிந்தது.

சிறிய பழியேயாயினும் அதற்குப் பெரிதும் நாணும் சான்ருேர் போல செங்கதிர்களைச் சாய்த்தன கழனிகள். இத்தகு கழனிகளே எங்கும் நிறைந்து, பொன்துகள் நிலமகள் மேனியெங்கும் இறைந்து கிடப்பது போன்ற இனிய காட்சி நல்கியது. மண்மகள் மஞ்சள் நீர் ஆடுகிருள் போலும்! அருள்மிக்க நெஞ்சம் உடையவர், இடனறியாது வழங்கும் கொடைபோன்று எங்கும் வழிந்தோடும் தண்ணிய நீரின் சல சலப்பு, 'மருதப்பண்ணே' என்னும் மயக்க உணர்வூட்டிக் கேட்பார் மனதைக் குளிரப் பண்ணும். நீரின் தன்மையைக் கண்ட ஆரல் மீன்கள் துணிந்து சென்று அதன் அகத்தே துள்ளி விளையாடும். அங்கிலையிலும் அமைதியே வடிவாக, எழில் ஊற்றி, பண் இசைத்துச் செல்லும் அந் நீராளைக் காணும் நாரை ஒன்றுக்கு, ஏனே அது பொறுக்கவில்லை! நீரின் பொறையைத் தவருகப் பயன்படுத்தி அதன் நெஞ்சத்தே நீந்துகிறதே மீன் கூட்டம் என்று அதற்குச் சீற்றம். தனக்கு வந்தாலென்ன? தண்ணீருக்கு வந்தாலென்ன?—உரிமையோடு போர்க்கோலம் பூண்டுவிடுகிறது நாரை. கொட்டமடிக்கும் மீன்களின் தலையில் குட்ட எண்ணித் தவக்கோலத் தோடு அதோ அந்த வரப்பிலே

ஒற்றைக்காலில் நிற்கும் நாரையின் சூழ்ச்சிக்குச் சாணக்கியனும் ஈடாக மாட்டான்!

சான்றோரும், கொடையாளரும், குறும்பரும், அவரைக் குட்டும் சூழ்ச்சித் திறம் மிக்கோரும் பல்கிய இந்த உலகைக் கண்டு நகைக்கும் பொன்னி ஒரு பொய்யாக் குலக்கொடி. ஓயாது புள்ளினங்கள் ஒலிப்பது அவள் வாய்மையை வாழ்த்தித் தானே! அவளது அரவணைப்பிலே வளரும் பொதும்பரோ எண்ணற்ற வண்ணமலர்களை அவள் திருவடிகளில் சொரிந்து மகிழ்கிறது. கடமையில் கருத்தொன்றிய காவிரி அன்னை, 'காலை வந்ததே' என்ற நினைப்போடு உழவரை வாழ்விக்க விரைந்து ஓடுகிறாள்.

இத்தகைய அன்னையால் எழில் பெற்று ஓங்கும் திருச்சி மாவட்டம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகவே உண்டி கொடுத்து உலகை ஓம்பும் இடங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. பண்டு தொட்டு மிகுதியும் சோழர்பால் உரிமை பூண்டிருந்த இந்த மாவட்டம் அவர்களால் வளம்பல பெற்றது. சோழரின் தலைநகர்களுள் ஒன்றாக இருந்து கோழியூர் எனப் பெயர்பெற்றுப்

பொலிவுடன் விளங்கிய உறையூர் இன்று திருச்சிமாநகரின் ஓர் அங்கமாக இருக்கிறது. திருசிராப்பள்ளியும் அரசரால் போற்றப்பட்ட இடமே என்பது புறநானூற்ருல் புலனுகும்.

இத்தகைய சிறப்பும், வளமும் கெழுமிய சிராப்பள்ளி தமிழகத்தின் உணவுத் தேவையைத் தணிப்பதில் இன்று பெரும் பங்கு கொண்டு விளங்குகின்றது. பெரும் பொருளைச் செலவிட்டுப் பல நீர்ப்பாசனத் திட்டங்கள் இங்கு விரிவாக்கப்பட்டும், செப்பனிடப்பட்டும் உள்ளன.

இன்றுள்ள நிலையிலேயே நோக்கினும், பிற மாநிலங்களைக் காட்டிலும் பெருமளவுக்கு ஓர் ஏக்கரில் விளைவிக்கின்ற நாம், இந்த அளவோடு ஆறுதல் அடைய இல்லை. மேன்மேலும் நமது உழைப்பையும் ஆற்றலையும் ஊற்றி இன்னும் மிகுதியான பலனைப் பெறவே முயல்கிறோம். முதல் திட்டத்தின் வெற்றி, இரண்டாவது திட்டத்தில் நமக்கு மேலும் ஊக்கத்தைத் தருகின்றது. புனல் கொழிக்கும் சிராப்பள்ளியிலே, மேன்மேலும் நெல் கொழிக்கப் பண்ணி களிகொள்வோமாக!


நீர்...
பெருக!

“ தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள்தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தோறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாயதன்றே ”

—கம்ப ராமாயணம்.

நீர்...

பெருகு!

புறநானூற்றிலே ஒரு புலவர் பாடியுள்ள பாடல் ஒன்றின் சில அடிகள், மக்கள் யாவரும் மனங்கொள்ள வேண்டியவை. உலகம் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரையில் மாருதிருக்கின்ற ஓர் அடிப்படை உண்மையை, அந்த அடிகளில் அவர் நயம்பட வெளிப்படுத்துகிருர்.

'உண்டி முதற்றே உணவின் பிண்டம், உணவெனப் படுவது நிலத்தொடு நீரே' என்பன அத்தொடர்கள். உணவாலாகிய இந்த உடல் (பிண்டம்) உணவையே நம்பியுள்ளது! அந்த உணவோ நிலத்தையும் நீரையும் பொறுத்தது. நிலமும் நீரும் ஒத்துழைத்தால்தான் உணவுக்கு வழி பிறக்கும். உண்டிக்கு வழி பிறந்தால்தான் இந்தப் பிண்டம் வளரும்; வாழும். நிலமும் நீரும் உயிர்களின் மூலவேர் என்பதை இதனினும் சிறப்பாக விளக்க முடியாது. நிலமும் நீருமே அனைத்தும். நிலமே சிவம்; நீரே சக்தி.

நீர்வளத்தைப் பெருக்குவதைப் பொறுத்ததே நமது நாட்டின் செழுமை. அதிலும் நூற்றுக்கு எண்பது பேராகக்

குடியானவர்கள் நிறைந்து இருக்கின்ற ஒரு நாட்டில், உழவைப் பெருக்கவேண்டுவதன் அவசியத்தைக் கூறத் தேவையில்லை. உழவைப் பெருக்குவதற்கு அடிப்படையாக வேண்டப்படுவது நீர்வளமே. நீரைத் தேக்கிப் பயன்படுத்தும் முறை, தமிழகத்திலே சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றிய ஒரு பழக்கமாகும். கரிகாலன் காவேரிக்குக் கரையமைத்த செய்தி திருச்சி மாவட்ட மக்களுக்குத் தெரியாத ஒன்ருக இருக்க முடியாது. தென்னவன் நீரைத் தடுத்து ஆண்டான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. சோழப் பேரரசர் ஏரிகளை அமைப்பதில் மிகுந்த ஊக்கம் கொண்டு உழைத்தனர் என்பதைக் கல்வெட்டுகளும், இன்று இந்தியாவின் தென் பகுதியிலே காணப்படும் கணக்கற்ற ஏரிகளும் ஒருங்கே பறை சாற்றுகின்றன.

அத்தகைய ஏரிகள் பல கவனிப்பாரற்றுப் பாழடைந்து கிடந்தன. அவைகளைப் புதுப்பித்தும், பல புதிய தேக்கங்களை அமைத்தும் பாசனத்தை அதிகப் படுத்தும் முயற்சியில், கடந்த ஐந்தாண்டுகளாகத் திருச்சி மாவட்டம் நல்ல பலன் கண்டது. வயல்வளம் மிக்க சென்னை மாநிலப் பகுதிகளுள் திருச்சி மாவட்டம் ஒன்ருகும். இங்கு ஆண்டுக்குச் சராசரி மழையளவு 34 அங்குலமே. ஆனல் வற்ருத பொன்னிப் புனல் நீரால் எப்போதும் பசுமை மாருத காட்சி இங்கு காணக் கிடைக்கும். காவேரியால் நிரப்பப் படும் ஆயக் குளங்கள் இங்கு நிரம்ப உள்ளன. நீர்ப் பாசனத்துக்குப் பயன்படும் இங்குள்ள 1,308 ஆயக் குளங்களை ஒழுங்காகப் பார்த்து வரவும் செப்பனிடவுமாக முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆகியுள்ள செலவுத் தொகை ரூ 28,56,973-14-0.

முதல் ஐந்தாண்டுக் காலத்தில் நடைபெற்றுள்ள நீர்த் தேக்க வேலைகளை விரிவாகக் காணுவோம். குளித்தலை வட்டத்தில் கிருஷ்ணராஜபுரம் கிராமத்திலுள்ள ஆயக் குளம்

வடிமுனைக் குழாய்

ஒன்றின் கரை, சில ஆண்டுகளுக்கு முன் நீரில் கரைந்து அழிந்தமையால், அதனுல் பயன் பெற்று வந்த 150 ஏக்கர் ஆயக் கட்டும், போதிய நீர் பெறும் வாய்ப்பை இழந்தன. 84,100 ரூபாய் செலவில் இவ் வாயக்குளம் மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வரப் பட்டது. இதே வட்டத்திலுள்ள புதூர் பெரிய ஏரியும் 50,000 ரூபாய் செலவில் செப்பனிடப் பட்டுள்ளது. அதன் பயனுக, ஏற்கனவே நீர் பாய்ந்து வந்த 120 ஏக்கரோடு, மேலும் 70 ஏக்கர் நிலம் நீர் வசதி பெறுகின்றது.

பெரம்பலூர் வட்டத்தில் மூன்று ஆயக்குளங்கள் செப் பனிடப் பட்டுள்ளன. கைகளத்தூர், கரையானூர், குப்ப

ணேரி ஆகிய பகுதிகளில் அவை மூன்றும் அமைந்துள்ளன. கைகளத்தூர் ஆயக்குளம் மிகவும் அழிவுற்றிருந்தது. எனவே அதன் கரைகள் எடுத்துக் கட்டப்பட்டன ; கழிங்குகள் ஒழுங்கு படுத்தப் பட்டன ; வரத்துக்கால்கள் அகழப்பட்டு நீர் நன்கு தேங்கு வதற்கான பிற எல்லா வசதிகளும் திட்டமிட்டு அமைக்கப் பட்டன. இதன் விளைவாக 350 ஏக்கர் பரப்புள்ள நிலம் பாசன வசதி பெற்றுப் பலனளித்து வருகின்றது.

கரையானூர் நீர்த் தேக்க மட்டம் உயர்த்தப் பட்டது. கழிங்குகள் கூடுதலாக அமைக்கப் பட்டன. சுமார் 150 ஏக்கர் நிலம் இதனால் நலம் பெற்றுள்ளது. உணவு விளைச் சலில் 75 டன் கூடுதலாகி யுள்ளது. இதற்காகிய செலவு சுமார் 54,450 ரூபாயாகும்.

கொளத்தூர் கிராமத்திலுள்ள குப்பனேரிக் குளம் 30,320 ரூபாய் செலவில் செப்பனிடப் பட்டது. இது பாழ டையும் நிலையிலிருந்த ஒரு சிறிய குளமாகும். ஏற்ற இடங் களில் நீரை அணையிட்டுத் தடுத்து இக்குளத்தை விரிவு படுத்தி யுள்ளனர். 15 ஏக்கரே இதன் ஆயக்கட்டாக முன்பு இருந்த நிலைமாறி, மேலும் 65 ஏக்கர் நிலத்திற்குத் தற்போது இங்கு நீர் கிடைக்கிறது. இதன் விளைவாகக் கூடுதலாகியுள்ள விளைச் சல் 32 டன்களாகும்.

உடையார்பாளையம் வட்டத்தில் இருக்கும் ஸ்ரீபுரந்தன் குளத்தின் ஆயக்கட்டில் 440 ஏக்கர் நிலம் நீர் வசதி பெற்று விளைவாகியது. ஆனால் அக் குளத்திற்குப் போதிய நீர் கிடைக்காமல் போன காரணத்தால், நீர்ப் பாசனம் மிகவும் குறைந்தது. எனவே அக் குளத்தைச் செப்பனிட்டு அதற்குப் போதிய நீர் கிடைப்பதற்கான வழிகளையும் அமைப் பதற்காக, ரூ 96,162 ஒதுக்கப் பட்டு, வேலையும் முடிந்து

விட்டது. விளங்குடி ஓடையிலிருந்து நீரை பெறப் போதிய வரத்துக் கால்கள் வெட்டப்பட்டுள்ளன. இன்று 440 ஏக்கர் நிலம் நிலையாக நீர் வசதியைப் பெறுகின்றது.

கன்னகுடிப் பெரிய ஏரி லால்குடி வட்டத்திலுள்ளது. இதனைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 27,700 செலவிடப் பட்டது. இதனால் கூடுதலாகப் பாசன வசதி பெறுகின்ற நிலப் பரப்பு 81 ஏக்கராகும். கூடுதலாகியுள்ள விளைவு 40 டன்கள்.

இதுகாறும் நீர்ப் பாசனத்திற்குப் பயன்படும் ஆயக் குளங்களில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி வேலைகளைப் பற்றிக் கூறினோம். ஆற்று நீரைத் தக்க விடங்களில் தேக்கிப் பயன்படுத்தும் முறையில் ஏற்பட்டுள்ள முயற்சிகளையும் அவற்றின் வெற்றிகளையும் இனிக் காணுவோம்.

ஜேடார்பாளைத்திற்கு அருகே காவிரியின் குறுக்கே ஒரு தேக்கத்திருப்பம் **(Bed regulatur)** ஏற்படுத்தப் பட்டது. அதன் பயனாக 300 ஏக்கர் நிலம் பயனடைந்தது. 6,89,408 ரூபாய் இதற்குச் செலவாகியது.

கட்டளைத் தேக்கத் திருப்பத்திற்கு இறங்கும் கதவு **(Falling shutter)** அமைக்க ரூ 3,22,765 செலவாகியது.

தென்கரைக் கால்வாயில் **(South Bank Canal)** ஐந்து தேக்கத் திருப்பத்திற்கான அணைகள் **(Bed dams)** கட்டப் பட்டிருக்கின்றன. ரூ 43,909 செலவில் இங்கிருந்த ஆயக் கட்டுக்கு நிலையாக நீர் கிடைக்குமாறு செய்யப்பட்டிருக்கின்றது.

புகலூர் கால்வாயிலிருந்து முதலியார் கால்வாய்க்குத் தண்ணீர் தரும் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதன் பயனாக 1,200 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றது. ரூ 4,64,270 இதற்குச் செலவாகலாம் என மதிப்பிடப் பட்டது.

2,10,313 ரூபாய் செலவில் முசிரிக் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது. முசிரி வட்டத்திலுள்ள எவூர், ஆமூர், குணசீலம், 'கொடுந்துறை ஆகிய பகுதிகளிலுள்ள 612 எக்கருக்கு இக்கால்வாய் நீர்ப் பாசன வசதியளிக் கிறது.

உடையார்பாளையம் வட்டத்தில், எளந்தகுடம் கால்வா யிலிருந்து தனியே ஒரு கிளைக் கழிங்கு (Separate supplemental sluice) அமைத்து அதன்மூலம் அன்னிமங்கலம் கிராமத்தில் 380 எக்கருக்குக் கூடுதலாக நீரைப் பாய்ச்சத் திட்டமிடப் பட்டது. இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. இதன் செலவு மதிப்பீடு ரூ 30,060.

உய்யக்கொண்டான் விரிவுக் கால்வாயை மேலும் விரிவு படுத்தியதன் பயனாக விளைவு மிகுந்துள்ளது. 2,108 எக்கர் ஆயக்கட்டுக்கு இது நிலையாக நீர் கொடுக்கிறது. அதாவது பன்னிரண்டு ஆயக் குளங்களை இது வற்ற விடாமல் பாது காக்கிறது. இத்திட்டம் நிறைவேற ஆகிய செலவு ரூபாய் 66,000.

பத்தலபேட்டை, திருநெடுங்குளம் ஆகிய கிராமங்களில் 120 எக்கருக்கு மங்கனம் எரியிலிருந்து நீர்வசதி செய்யப் பட்டுள்ளது. சோழகம்பட்டி வாரிக்கு வலப் புறத்தே இந்த நிலம் இருக்கிறது. சோழகம் பட்டி வாரியின் குறுக்கே ஒரு குழாயை வைத்து நீர் கொண்டு செல்லப் படுகிறது. இதற்கான செலவு ரூ. 12,293. இதனால் கூடுதலாகியுள்ள விளைச்சல் 41.4 டன்கள்.

சோரக்குடி கிராமத்தில் நீர்ப் பாசன வசதியைப் பெருக்குவ் வதற்காக ஒலமுத்து எரியில் ஒரு கழிங்கு அமைத்து வசதி செய்யப்பட்டது. 80 எக்கர் இதனால் நல்ல பயனுறும். இதற்கு ஆகியுள்ள செலவு ரூ 3,522. கூடுதலாகியுள்ள விளைச்சல் 28.5 டன்கள்.



நிலமகளின் அருட்கொடை !

சாயக்குடிக்கும், மற்றும் நான்கு மழையால் நிரம்பும் ஏரிகளுக்கும், நீர்தரும் நோக்கத்தோடு ஒரு திட்டம் வகுக்கப் பட்டது. அதன் மூலம் 464 ஏக்கர் நிலம் மிக்க பயன் அடைந்துள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற ஆகிய செலவு ரூ 3,396.

ஸ்ரீரங்கம் நாட்டு வாய்க்காலின் குறுக்கே ஒரு குழாயை அமைப்பது, திம்மருய சமுத்திரம் நிலங்களிலிருந்து ஒரு கழிவு நீர்க்காலைத் தோண்டுவது, ஆகிய வேலைகளுக்காக ஒரு திட்டம் தீட்டப் பட்டது. இது செயல்பட 12,325 ரூபாய் செலவாகியது. இதன் விளைவாக 84 டன் அரிசி இன்று கூடுதலாகக் கிடைத்தது வருகிறது.

உய்யக் கொண்டான் கால்வாயின் கிளையான புது அய்யன் கால்வாயோடு, பெரிய வாய்க்கால், கரையோரம் வாய்க்கால் ஆகியவற்றின் ஆயக்கட்டை இணைப்பதன் மூலம் பாசன

வசதியைப் பெருக்க முடியும். ஆகவே அதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு செயல்படுத்தப் பட்டது. 14,186 ரூபாய் இதற்குச் செலவிடப் பட்டது. இதனால் கூடுதலாகக் கிடைத்து வரும் விளைச்சல் 43 டன் அரிசியாகும்.

கொள்ளக்காரன் கோயில் கிராமத்திலுள்ள காட்டு வாரியில், நீரில் மூழ்கவிருக்கும் 750 ஏக்கர் நிலத்தை மீட்டு, பயிரிடுவதற்கான திட்டம் போடப் பட்டுள்ளது. செம்மையான கழிவு நீர்க் கால்வாய் ஒன்று உடனடியாக இங்கு அமைக்கப் படவேண்டும். இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 36,300 ரூபாய் செலவாகலாம் என மதிப்பிடப் பட்டிருக்கிறது. இத் திட்டம் விரைவாகச் செயல்பட்டு வருகின்றது.

வடிமுனைக் குழாய்கள் நமது மாநில மெங்கும் இன்று பெரும் பயன் அளித்து வருகின்றன. திட்ட காலத்திற்குள் திருச்சி மாவட்டத்தில் 229 வடிமுனைக் குழாய்கள் அமைக்கப் பட்டன. 227 எண்ணெ இறைப்புக் குழாய்களும், 2 மின்சார இறைப்புக் குழாய்களும் குடியானவருக்கு வழங்கப் பட்டன. இவற்றால் பாசன வசதி பெற்றுள்ள நிலத்தின் பரப்பளவு 1,826 ஏக்கராகும்.

மின்னாற்றல்

இன்றைய நிலை—மின்னாற்றல் இன்று நமது வாழ்வோடு பின்னிக் கலந்த ஒன்றாகிவிட்டது. சென்னை போன்ற நகரங்களில் ஒரு நாளைக்கு மின்னாற்றல் நிறுத்தப்பட்டால் நகரம் எப்படிக் காட்சி தரும் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. மின்னாற்றல் இல்லாமலே தான் எத்தனையோ நாடுகள் நாகரிகம் எய்திப் பின் மங்கி யிருக்கின்றன என்ற நினைவு நமக்கு எழ மறுக்கின்றது. ஹரப்பா, மொகஞ்சோதராவில் வாழ்ந்த பழம் திராவிடரின்

நாகரிகத்தையோ, ஈஜிப்டு அல்லது எகிப்தின் பண்டையப் பெருமையையோ, கிரேக்க ரோம நாடுகளின் இன்பக் கொண்டாட்டத்தையோ வரலாற்றில் படிக்கும்போது, அத்தகைய உயர்வு மின்னுற்றல் இன்றியே எய்தப்பட்ட ஒன்றுதான் என்ற எண்ணம் தோன்ற முடிகிறதா?

நேற்றைய நிலை—இவ்வாறு நமது அன்றாட வாழ்வில் ஒன்றிவிட்ட மின்னுற்றல் சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில் நாட்டுப்புறத்தார் பார்த்தறியாத ஒரு மறை பொருளாகவே இருந்து வந்தது. "இருட்டறையில் உள்ளதடா உலகம்" என்பது அவர்களைப் பொறுத்தமட்டில் பொருந்துவதாக அன்று இருந்தது.

சென்னை அரசாங்கம்—சென்னை மாநிலம் மின்னுற்றலைப் பயன்படுத்துவதில் குறிப்பிடத் தக்க வெற்றியைப் பெற்றுள்ளது. சுமார் 31 கோடி ரூபாயைக் கடந்த ஐந்தாண்டுகளில் மின்னுற்றலைப் பெருக்குவதற்காக மட்டும் நமது அரசாங்கம் செலவழித்திருக்கின்றது. அதற்கேற்பவே நாட்டுப் புறத்தில் மின்னுற்றலைப் பரப்புவதில் நமது மாநிலம் இந்தியாவிலேயே முன்னணியில் நிற்கின்றது.

1951-ல் மின் வசதி பெற்ற ஊர்களின் எண்ணிக்கை, நகரங்கள் உட்பட, 1,613. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முடிவில் இவ்வாய்ப்பினைப் பெற்ற ஊர்கள் 3,543. இன்று மின்னொளி பெற்றுத் திகழும் இடங்கள் இதனினும் மிகுதி. திட்ட காலத்தில் மின்னுற்றல் தரப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை மட்டும் 2,900 ஆகும். 3,000 மின் இறைப்புக் குழாய்கள் சென்ற ஐந்தாண்டுக் காலத்தில் நமது மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. 3,000 கிராமக் கைத்தொழில்கள் புதிதாக மின்னுற்றலைப் பெற்றன. இவ்

வாறு மாநில மெங்கும் வளர்ந்த மின்னுற்றலின் முன்னேற்றம், மக்களின் வாழ்வைப் பல வகையிலும் வளப்படுத்தி ஓம்பியது.

திருச்சி மாவட்டத்தில் வேளாண்மைக்காக 71 இடங்களில் மின்னுற்றல் பயன்பட்டுள்ளது. தொழில் வகையில் மின்னுற்றலைப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்ற தொழில் நிறுவனங்கள் 9. புதிதாக மின்வசதியைப் பெற்ற வீடுகள் 262.

—:o:—

நிலம்...
கொழிக்க!

“ நாடா கொன்ருே காடா கொன்ருே
அவலா கொன்ருே மிசையா கொன்ருே
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே ”

— புறநானூறு 187.

நிலம் . . .

கொழிக்க !

காடுகள்

வையத்தின் வனப்பும் வறுமையின் கோலமும்—காடுகள் இயற்கை அன்னை நல்கிய செல்வம். வையம் தோன்றிய காலந்தொடங்கி அதன் அழகிற்கும், வளத்திற்கும் வற்றாத ஊற்றாக இருப்பவை இவைகளே. தென்றல் காவும், தேனிய நறும் சுனைகளும் தரும் தெவிட்டாத இன்பத்தை நுகர மறுக்கும் விலங்கினைக்கூட இவ்வுலகினில் காண்பதரிது. எனினும் மனிதனின் வறுமை அவன் அழகுணர்ச்சிக்கு அடங்குவதாக இல்லை. அதன் விளைவாகப் பசுவைக் கூறிட்டுப் பாலை நிறையப் பெற நினைப்பதுபோன்ற பேதமை நிறைந்த செயலைச் செய்ய அவன் தயங்கவில்லை. காடுகளின் விளைவைக் கொண்டு தம் வயிற்றை நிரப்ப வியலாத மாந்தர், அதன் வேரையும் அகழ்ந்து எடுக்கத் தயங்கவில்லை. இறுதியில் எஞ்சி நின்றவை குன்றுகளே. பல செறிந்த காடுகளின் பச்சைப் பசேலெனும் துதைந்த தூறுகள் வான் முகட்டை அளந்து கொண்டிருந்த வளமார் இடங்களில் எல்லாம், பாறைகள் சிரிக்கும் அவலக் காட்சியே எஞ்சியது. பொன் கொழித்த வனங்கள் பொட்

டல் வெளிகளாகி கொடிய பாலைக் காட்சியை நல்கின. ஆடல் பாடல் அழகு என்னும் அனைத்தாலும் சிறந்து, பண்புடன் இணைந்து திகழ்ந்த மாதவியாம் பெண்கொடி, இகவாழ்வை நீத்துத் துறவுக் கோலம் பூண்டதைக்காட்டி லும், வளமார்ந்த மண்பூண்ட வறுமைக் கோலம் கொடுமை மிக்க தல்லவா ?

இருதலைக் கொள்ளி—நிலக் கொழுமைக்கு நேர்ந்துள்ள முதற் பெருங் கேடு காடுகளின் அழிவே என்பதை உணர்ந்த அரசாங்கம், நாடு உரிமை அடைந்த காலந்தொட்டே அந் நிலையைப் போக்குவதற்கான முயற்சிகளில் இறங்கிவிட்டது. அதிலிருந்த ஒரு பெருந்தொல்லை என்னவென்றால், காடு

காடுகள் இயற்கையின் எழிற்கூடம் !

களைக் காவலிட்டுப் பாதுகாக்கும் அதே சமயத்தில் விறகு விலை ஏறுமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். எப்படியோ நிலைமையைச் சீர்ப்படுத்தி பெருங்காடுகள் பாழாகா வண்ணம் காப்பாற்றியதுடன், வறிய குன்றுகள் பலவற்றின் மேலும் பறவைகள் ஒலிக்கு தண்ணறுஞ் சோலைகளைக் காணும் விருப்புடன் பல திட்டங்களையும் நம் அரசாங்கம் தீட்டியது. தீட்டியவைகளைச் செயல்படுத்தி பெரு வெற்றியும் பெற்று வருகிறது.

மாநில மெங்கும் உள்ள குன்றுகளின் மண்ணை வளப்படுத்தி மரங்களை அங்கே நட்டு வளர்க்கும் அரிய வேலை மேற்கொள்ளப் பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 75 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டது. இரண்டாவது திட்டத்திலோ இதைப் போல இரண்டு மடங்குத் தொகை செலவாக இருக்கின்றது. 146.20 லட்சம் ரூபாயும் பயன்படுத்தப்படும் நிலையில்—1961 ஆம் ஆண்டில்—இங்கு சங்க காலக் குறிஞ்சி வளப்பத்தையே மீண்டும் காணப் பெறுவோம் என்பதில் ஐயமுண்டோ ?

திருச்சி மாவட்டத்தில் சவுக்கு உற்பத்தி பெரும்பரப்பில் மேற்கொள்ளப்பட்டது. 1,463 எக்கர் நிலத்தில் சவுக்கு வளர்க்கப்பட்டது. இத் தோப்புகளை உண்டாக்குவதில் ஏற்பட்ட செலவு ரூ. 1,23,772.

விறகுக்குத் தேவையான மரவகைகளைப் பெருக்கும் முயற்சியும் இந்த மாவட்டத்தில் வெற்றியுடன் நிறைவேறி இருக்கின்றது. 2,334 எக்கரில் அதற்கான மரவகைகள் வளர்க்கப்பட்டன. மொத்தம் 62,590 முளைகள் ஊன்றப்பட்டு இருக்கின்றன.

காடுகளின் செறிவு குறைந்து வளம் மங்காமல் இருப்பதற்காக, மலைச்சரிவுகளில் மரங்களைப் பெருக்கும் பணியை மேற்கொண்டனர். 173 எக்கர் பரப்பில் இந்த வேலை மேற்கொள்ளப் பட்டது. இதற்குச் செலவாகியுள்ள தொகை 6,870 ரூபாய் ஆகும்.

மெல்லிய மர வகைகள் நெருப்புக் குச்சி செய்வதற்கு மிகவும் பயன்படும். 78 ஏக்கரில் இம்மர வகைகள் வளர்க்கப்பட்டுள்ளன. 1,799 ரூபாய் இதற்குச் செலவிடப்பட்டுள்ளது.

290 ஏக்கர் நிலத்தில் முந்திரி விளைவிக்கப்பட்டு வருகிறது. தேக்கு உற்பத்திக்கு இடம் வாய்ப்பானதா இல்லையா என்பதைக் கண்டறிய 6 ஏக்கரில் தேக்கு பயிரிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

வேளாண்மை

'நாஞ்சில் அல்லது படையும் அறியார்'

கலப்பைக்குப் பழந்தமிழில் நாஞ்சில் என்ற பெயரும் உண்டு. நாட்டு மக்கள் மன்னனின் செங்கோல் மேன்மையினால் எத்தகைய இடையூறும் இல்லாமல் அமைதியாக வாழ்க்கையை நடத்துகின்றனர் என்பதைக் கூற வருகின்ற ஒரு புலவர் கலப்பையைத் தவிர அவர்களுக்கு வேறு படைக் கருவியே தெரியாது என்று கூறுகிறார். அவர்கள் போரிட மாட்டாத கோழைகள் என்று பொருள் கொள்ளக் கூடாது. போரிடவேண்டிய தேவை, வளங் கொழிக்க வாழ்ந்த அந் நாளில் ஏற்படவில்லை. எனவே அந்நாளைய ஆடவர் தோளில் ஏந்திச் சென்ற பொருள் கலப்பை ஒன்றுதான். அதைத்தான் புலவன் அழகாகப் பாடியுள்ளான். அதைப் படைக் கருவியோடு ஒப்பிட்டுக் கூறியது மிகவும் இனிமையாக உள்ளது.

கலப்பையைப் படையாகக் கொண்டு மண்மகளோடு போரிட்டுத் தனக்கு வேண்டியதைப் பெற்ற முதல் மகன் தமிழனே எனப் பல அறிஞர் கூறுவதற்கேற்ப இந்தப் பாடல் அமைந்துள்ளது. இத்தகைய வளமிக்க உழவு பன்னெடுங் காலமாக நம்மை உண்பித்து வந்தது. ஆனால் வரவர நிலம் தன் வளப்பத்தை இழப்பதாலும், மக்கள் தொகை பெருகுவதனாலும் நம் நாடு பற்றுக் குறைக்கு ஆளாக வேண்டிய நிலையும் நேர்ந்தது. இன்று அந்த நிலை மாறிவிட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிலத்தைச் செழிக்கச் செய்வதிலே சிறப்பாகக் கவனம் செலுத்தியது. ஏனெனில் நாட்டின் வறுமைப் பேயை ஓட்டிய பின்னரே மற்ற இன்பத் துறைகளில் முழு முன்னேற்றத்தைக் காண முடியும். எனவே பல நீர்ப்பாசனத் திட்டங்கள் மாநிலமெங்கும் மேற் கொள்ளப்பட்டன. நீர் வசதியை நிலையாகப் பெற்று பயி ராகிய நிலங்களில், புதுமுறை உழவும் புதிய நடவு முறையும் மேற்கொள்ளப்பட்டன. ரசாயன எருவிடப்பட்டது. தழையுரம் இடுதலும் அதிகரிக்கப்பட்டது. பொறுக்கு விதைகள் மிகு தியாகப் பயன்படுத்தப் பட்டன. மேலும் பயிர் வளர்ந்த நிலையில் பூச்சிகளுக்கு இரையாகாவண்ணம் பலவித மருந்து களால் அவை காப்பாற்றப்பட்டன. இத்தகைய முயற்சி களினால் விளைச்சல் மிகுந்தது. நாட்டின் நிலைமையும் இன்று சீர்ப்பட்டுவிட்டது.

'நாஞ்சில் அல்லது படையும் அறியார்!

திருச்சி மாவட்டத்தில் தரிசாகக் கிடந்த பல பகுதிகள் விளை நிலமாக்கப் பட்டிருக்கின்றன. யந்திரக் கலப்பைகள், புல்டோசர் முதலியவை அதற்குப் பயன்பட்டன. ஐந்து புல்டோசர்களும் 12 யந்திரக் கலப்பைகளும் குடியானவருக்குக் குறைந்த வாடகையில் உதவப்பட்டன. 7,889 ஏக்கர் நிலம் இவற்றால் பண்படுத்தப் பட்டுள்ளன. இதன் விளைவாகக் கூடுதலாகியுள்ள தானியம் 2200·5 டன்களாகும். பண்படுத்திய நிலத்திற்கு எருவூட்டி வளமளித்தனர். சுமார் 27,000 டன் அம்மோனியம் சல்பேட்டு 750,000 ஏக்கர் நிலத்திற்குப் பயன்பட்டது. அதன் விளைவாக 54,000 டன் தானியம் கூடுதலாக விளைந்துள்ளது.

திருச்சி மாவட்டத்தின் மொத்தப் பரப்பு 3,499,620 ஏக்கராகும். இதில் விளை நிலப்பரப்பு 1,790,679 ஏக்கர். பயிர் வகைகளும் அவை பயிராகும் நிலத்தின் பரப்பளவும் கீழ் வருமாறு :—

நெல்	4,40,939
சோளம்	2,34,738
கம்பு	2,36,713
ராகி	53,198
நிலக்கடலை	2,16,307
எள்	8,423
தென்னை	7,884
பருத்தி..	23,531
மிளகாய்	23,720
வாழை	12,232

நெல், கரும்பு, வாழை, பருத்தி இவைகளின் வளர்ச்சிக்கு இம்மாவட்டத்தின் வெப்ப நிலை மிகவும் ஏற்புடையதாக இருக்கின்றது.

புதிய உழவு முறைகளைக் கையாண்டு ஒவ்வொரு ஏக்கரின் விளைவையும் மிகுப்பதில் சென்னை மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றது. இங்குள்ள மாவட்டம் ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு இத்துறையில் முன்னேற்றத்தைக் காண்பித்துள்ளன. திருச்சி மாவட்டத்தில் பொறுக்கு விதையின் துணை கொண்டு மட்டும் கூடுதலாக்கியுள்ள நெல் விளைவு **13,150** டன்களாகும். இதைப் போலவே தினையும் **449** டன்கள் கூடுதலாக விளைந்துள்ளது.

ஜப்பானிய முறைச் சாகுபடி மிகப் பயன்தருவது என்பதை நமது உழவர் மேன்மேலும் உணர்ந்து பயன் பெற்று வருகின்றனர். லட்சம் ஏக்கரிலேனும் நெற் பயிரை இம்

ஜப்பானிய முறை சாகுபடி





இவர் செலுத்துவது ரதமல்ல ! கலப்பை

முறையில் நட்டு வளர்க்க வேண்டுமென முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எண்ணினர். இறுதியில் கணக்கிட்டுப் பார்த்ததில் எதிர் பார்த்ததற்கு அதிகமாகவே இந்த மாவட்டத்தில் ஜப்பானிய முறைச் சாகுபடி மேற்கொள்ளப் பட்டிருப்பது தெரிய வந்தது.

எவ்வளவோ அல்லல்பட்டு பேணி வளர்த்த பயிரைப் பாழும் பூச்சி வந்து பலி கொண்டு போய் விடுதல் உண்டு. புழு பூச்சிகளால் பயிர் கெடாமல் பாதுகாக்கப் படவேண்டும். அதனால் எராளமான தானியம் சேதமாகாமல் காப்பாற்றப் படுகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இம் மாவட்டத்தில் பயிர்ப் பாதுகாப்புக்காக 1,40,000 ரூபாய்

பெறுமான மருந்து பயன்படுத்தப் பட்டுள்ளது. இதன் மூலம் 91,280 எக்கர் பயிர் சிறிதும் சேதமின்றி பாதுகாக்கப் பட்டுள்ளது. 13,733 மரங்களும் பாதுகாப்புப் பெற்றன. இத்தகு உதவிகளைப் பெற்ற உழவர் பெரும்பயன் அடைந்தனர் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

உழவருக்கு வேண்டிய அறிவுரைகளைக் கூறவும், உதவிகளை அளிக்கவும், கிராமங்களிலும் பிறவிடத்தும் வேளாண்சங்கங் கள் அமைந்திருக்கின்றன. இரு கோட்டத்திற்கு (Firkas) ஒன்றாக இம்மாவட்டத்தில் 21 வேளாண் கிடங்குகள் நிறுவப்பட்டன. உழவருக்குத் தேவையான கருவிகள் யாவும் அங்கு என்றும் கிடைக்கும். அவர்களுக்கு புதிய முறைகளை கற்பிப்பதற்காக மாவட்டமெங்கும் உழவு முறை விளக்குவோ ரும் (Agricultural Demonstrators) இவர்களுக்குக் கீழே உழவரிடையே கலந்து பழகி அவர்களுக்கு ஆவன செய்து வரும் பகுதிக் கண்காணிப்பாளரும் (Fieldmen) பிறரும் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். இம்மாவட்டத்திலுள்ள ஐந்து தேசிய வளர்ச்சி வட்டாரங்களுக்குத் தனியே ஐந்து உழவுத் துறை அலுவலாளர்கள் உள்ளனர்.

உழவு முறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் படங் களுடன் எளிமையாக விளக்கிக் காட்டும் பல ஏடுகள் இல வசமாக உழவருக்கு வழங்கப்படுவதோடு, வேளாண்மை யைப் பற்றிய பத்திரிகைகளை, கற்றறிந்த உழவர் பெற்றுப் பயனடைவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. உழவருக்கு அறிவூட்டும் முறையில் நடந்த மிகவும் குறிப்பிடத்தக்க மற் றொரு முயற்சி பொருட்காட்சி. 17 பெரிய பொருட்காட்சி களும், 59 சிறு கண்காட்சிகளும் இம்மாவட்டத்தில் ஐந் தாண்டுகளிலும் நடந்தேறி இருக்கின்றன. இத்தகைய முயற்சிகள் உழவைப் பல துறையிலும் வளப்படுத்தி ஓம்பி வருகின்றன.

மருதூரிலுள்ள தென்னை வளர்ப்புப் பண்ணை சிறந்த தென்னம் பிள்ளைகளை வளர்த்து உழவருக்கு வழங்கியுள்ளது. சுமார் 21,815 தென்னங் கன்றுகள் இவ்வாறு சென்ற ஐந்தாண்டுகளில் அளிக்கப் பட்டிருக்கின்றன.

நிலக்கடலைக்குச் சுமார் 131 ஏக்கர் நிலத்தில் விதைப் பண்ணை அமைக்கப்பட்டிருக்கிறது. கரும்புக்குத் தனிப்பட்ட முயற்சி எடுக்கப்பட்டது. அதற்கெனப் பல அலுவலாளரை அரசாங்கம் நியமித்திருக்கிறது. இம்மாவட்டத்தில் கரும்பு எங்கெங்கு பயிராகிறதோ அங்கெல்லாம் புதிய முறையிலேயே அது பயிரிடப்படுகிறது. இது ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியாகும். குண்டூர் மிளகாய் குடியானவருக்கு விதைக்காகத் தரப்படுகிறது. சுமார் 2,000 ஏக்கர் நிலத்தில் தக்க முயற்சிகளோடு இது பயிராகியது.

காய்கறித் தோட்டங்களின் வளர்ச்சி, நமது நாட்டிற்கு இன்றைய நிலையில் மிகவும் தேவைப்படும் ஒன்ருக இருக்கின்றது. உணவுப் பற்ருக்குறையை ஓரளவு நிரப்புவதோடு காய்கறி, பழங்கள் ஆகியவை சத்துள்ள உணவாகவும் இருந்து உடலுக்கு உறுதி யூட்டுகின்றன. 279 பவுண்டு காய்கறி விதைகள் வழங்கப் பட்டுள்ளன. இடையருது செய்து வந்த பிரசாரத்தின் பயனுக, முன்பு காய்கறி பயிராகி வந்த நிலத்திற்கு 110 ஏக்கர் கூடுதலாகவே இப்போது அது பயிராகி வருகின்றது. உற்பத்தி யாகியுள்ள காய் கறிகளின் அளவு சுமார் 440 டன்களாகும். பள்ளித் தோட்டங்களில் பயிரிடுவதற்காக 29,310 முளைகளும், கன்றுகளும் வழங்கப் பட்டுள்ளன. தோட்டத்தில் பயிரிடுவதற்காக அளிக்கப்பட்ட செடிகள் 19,999. இன்னும் 25,000 முளைகள், கன்றுகள் முதலியவையும் நடப்பட்டன.

பயிரிடுவதற்கு முன் நிலத்தைப் பண்படுத்தி தக்க உரமூட்டுவதைப் பொறுத்தே விளைவு உண்டாகும். பலவகைப்

பட்ட எருவை நிலத்தின் தன்மைக்கேற்பப் பயன்படுத்த உழவரை ஊக்குவதோடு மட்டும் அமைந்து விடவில்லை நம் அரசாங்கம். அதைப் பெறுவதற்குப் போதிய கடனுதவியும் செய்து உழவர்களைத் தூண்டியது. செறிந்த உரமிடும் திட்டத்தின் கீழ் உழவருக்குத் தழையுரத்திற்காகத் தரப்பட்ட கடன் தொகை ரூ. **21,53,739** ஆகும். விதைக்காகவும் எருவிற்காகவும் அளிக்கப்பட்ட ரூ. **3,34,490**-ம் உழவுக் கருவிகள் வாங்குவதற்காகத் தரப்பட்ட ரூ. **6,860**-ம் தக்காவிக் கடன்களாகும். நிலத்திற்கு இடப்பட்ட பல்வகை எருவின் விவரம் வருமாறு :

அம்மோனியம் சல்பேட்டு	..	**1,885** டன்.
அம்மோனியம் பாஸ்பேட்டு	..	**11** டன்.
சூபர் பாஸ்பேட்டு ..	..	**360** டன்.
குப்பையை மக்கச் செய்த எரு	..	**38,519¼** டன்.

தழையுரத்திற்கான விதை—**99** டன், **408** பவுண்டு.

மக்கிய குப்பை எரு **13,420** ஏக்கருக்குப் பயன்பட்டது. இதனால் கூடுதலாகிய விளைவு **857** டன். தழையுரத்தால் பயனடைந்த பரப்பு **2,11,816** ஏக்கர்.

புதுக்கோட்டைப் பகுதியில் புயலால் பெரிய அழிவு நேர்ந்திருந்தது. வேறு சில இடங்களிலும் பல சேதங்கள் ஏற்பட்டிருந்தன. அவற்றைப் புதுப்பிக்கவும் வளப்படுத்தவும் பல முயற்சிகள் அங்கு மேற்கொள்ளப் பட்டன. **37** டன்னே **700** பவுண்டு நெல் இனமாகவும், **5** டன்னே **2,117** பவுண்டு நெல் விலைக்கும் அங்குள்ள உழவருக்கு விதைக்காகத் தரப்பட்டது. இவ்வாறே எருவும் அளிக்கப்பட்டுள்ளது. இனமாக வழங்கப் பட்ட அம்மோனியம் சல்பேட்டு **185** டன்னே **24** பவுண்டாகும். **1,825** பவுண்டு தழையுரம் விலையின்றியும், **25** பவுண்டு எரு பாதி விலைக்

கும் தரப்பட்டது. பதினாறு எக்கருக்கு மேற்பட்ட நிலத்தின் பாசனத்திற்காக இரண்டு எண்ணெ இறைப்பு யந்திரங்கள் பாதி வாடகைக்கு விடப்பட்டன. இவ்வாறே புல்டோசரும் குறைந்த வாடகையில் வேலை செய்தது. எக்கரிட்டுக் கிடந்த 4 எக்கர் நிலத்தைத் துப்புரவு படுத்த 240 ரூபாய் மட்டுமே பெற்றுக்கொள்ளப் பட்டது. சாதாரண வாடகையில் இது மூன்றில் ஒரு பங்கே. மேலும் 165 டன்னே 90 பவுண்டு அம்மோனியம் சல்பேட்டு அளிக்கப்பட்டது. இந்தகைய உதவிகள் மட்டுமன்றி சுமார் 54,360 ரூபாய் வரையில் கடன் உதவியும் செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் நிறைவேறிய பணிகள், வரிசையாகக் கீழே தரப் படுகின்றன :

(1) யந்திரங்களைப் பயன் படுத்திப் பயிரிடுதல், எண்ணெ மின்சார இறைப்புக் குழாய்களை அமைத்து நீர்பாய்ச்சுதல் ஆகியவற்றால் 192 டன் தானியம் கூடுதலாக விளைந்துள்ளது. 384 எக்கருக்கு இவ்வசதிகள் அளிக்கப்பட்டன.

(2) இறைப்புக் குழாய் முதலிய யந்திர வசதிகளுடன் பயிராகிய நிலப்பரப்பு 2,134 எக்கர். இதனால் கூடுதலாகியுள்ள விளைச்சல் 1,067 டன்.

(3) மத்திய வேளாண்மைப் பொறியியல் கிடங்கு, கருவிகளை வழங்கும் நிலையம் இவற்றின் துணை 276 எக்கருக்குக் கிடைத்தது. 180 டன் தானியம் இதன் பயனாகக் கூடுதலாகியுள்ளது.

(4) யந்திரக் கலப்பையின் மூலம் உழுதும், எருவிட்டும் சத்திழந்த நிலத்தைச் செப்பனிட்ட வகையில் 7,889 எக்கர் நல்ல விளைவைத் தந்தது. 2,200.5 டன் தானியம் கூடுதலாகக் கிடைத்துள்ளது.



பொட்டல் வெளி பொன் கொழிக்கும் புலமாகிறது.

(5) எருவுக்கு உதவியாக வழங்கப்பட்ட பாஸ்பேட்டு உரம் 2,661 டன்களாகும்.

(6) 7,47,876 ஏக்கருக்கு அம்மோனியம் சல்பேட்டு போடப் பட்டது. 53,470 டன் தானியம் அதனுல் கூடுதலாகியது.

(7) சுமார் 99 டன்னுக்கு மேற்பட்ட பசுந்தழை எருவுக் கான விதை வழங்கப்பட்டது. அவற்ருல் பயனுற்ற நிலப் பரப்பு 2,11,816 ஏக்கராகும். இதனுல் 18,042 டன் தானிய யத்தைக் கூடுதலாகப் பெற முடிந்தது.

(8) அரசாங்க உதவியுடன் தயாரிக்கப்பட்ட மக்கிய எரு 38,519½ டன்களாகும். இது 13,420 ஏக்கருக்கு பயன் பட்டது. இதன் மூலம் 957 டன் தானியம் கூடுதலாகக் கிடைத்தது.

(9) நெல், சோளம் வகையில் பெரும் அளவில் பொறுக்கு விதைகளை விதைத்தனர். 3,339 டன் நெல்லை வித்தியதில் 9,835 டன் நெல் கூடுதலாக விளைந்துள்ளது. இவை விளைந்த நிலத்தின் பரப்பு 211,816 ஏக்கராகும். இவ்வாறே சுமார் 36·89 டன் உயர்தரத் தினையை வித்தாக இட்டதில் 448 டன் தினை கூடுதலாக விளைந்தது. 7,995 ஏக்கரில் இது பயிராகியது. பருத்தியிலும் இவ்வாறே பொறுக்கு விதைகளைப் பயன் படுத்தி விளைவை மிகுத்தனர். 7,295 மணங்கு உயர்தரப் பருத்திக் கொட்டை விதைக்கப்பட்டது.

(10) பாழாகக் கிடந்த 2,425 ஏக்கர் நிலம் பண் படுத்தப் பட்டுள்ளது.

(11) வடிமுனைக் குழாய்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 229 வடிமுனைக் குழாய்கள் பொருத்தப் பட்டுள்ளன.

தீஞ்சுவைக் கன்னல்.

நிலத்தில் தழையுரம் சேர்த்தல்.

தீவிர எரு விடும் திட்டத்தின் கீழ்(**Intensive Manuring Scheme**) ஒவ்வோராண்டும் உழவருக்குப் பெருந்தொகை கடனாக அளிக்கப்பட்டு வந்தது. புதிய உழவு முறைகளிலும், ரசாயன எரு தழையுரம் போன்றவற்றை நிலம் பயிர் இவற்றிற்குத் தக்கவாறு மிகுதியாகப் பயன் படுத்துவதிலும் நமது உழவர் முன்னேறுவதற்கு உறுதுணையாக இருப்பது அரசாங்கம் நல்கும் கடன் உதவியே யாகும். முதல் ஐந் தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட **35,45,779** ரூபாயும் ரசாயன எருவுக்கே பயன்படுத்தப் பட்டுள்ளது.

வேறு வகையான சில திட்டங்களின் கீழும் உழவருக்குக் கடன் தரப்பட்டது. இம்மாட்டத்தில் முதல் திட்ட காலத் தில் **30,84,039** ரூபாய் அந்த வகையிலும் உழவருக்குக்

கிடைத்துள்ளது. எனவே இம்மாவட்டக் குடியானவர் கடனாக மட்டும் பெற்றுள்ள தொகை சுமார் 66 லட்சத்திற்கு மேலாகும். இதுவும் ஐந்தாண்டுக் காலத்தில் மட்டும் பெற்ற தொகை என்பதை நாம் நினைவில் வைத்துக் கொண்டால் உழவர் எந்த அளவுக்குத் தம் தொழிலின் வளர்ச்சியில் ஊக்கம் அடைந்திருக்கின்றனர் என்பது புலனாகும். எனவேதான் நாம் பெரும்பாலும் எல்லாப் பயிர் வகைகளிலும் மற்ற மாநிலங்கள் ஓர் ஏக்கராவுக்குப் பெறுவதைக் காட்டிலும் அதிகமாகவே விளைவைப் பெறுகிறோம்.

கால்நடை வளர்ச்சி

அடிப்படைக்கும் அடிப்படை— நிலத்தின் வளம் எருப் போடுவதில் மட்டும் அடங்கி இருக்கவில்லை. பயிரின் செழிப்பு விதை ஒன்றிலேயே ஒடுங்கி இருப்பதும் இல்லை. அதற்கு நீர் வேண்டும்; காற்று வேண்டும்; இவை இரண்டும் விதைக்குப் பயன்படத்தக்க நல்ல உழவு வேண்டும். உழவே அனைத்திற்கும் அடிப்படை. அதனால்தான் போலும் வள்ளுவர், பயிரிடுவார் உலகத்திற்கு ஆணி என்று சொல்லாமல், "உழுவார் உலகத்திற்கு ஆணி" என்று உழவைக் குறிப்பிட்டுக் கூறியிருக்கின்றனர். "ஏர்ப் பின்னது உலகம்" என்னும் தொடரும் இந்தக் கருத்தையே பின்னும் வலியுறுத்துவதாக உள்ளது. எங்கும் உழவுக்கே சிறப்பு அளிக்கப்படுகிறது. காரணம், அதுவே வேளாண்மைக்கு அடிப்படை. ஆனால் இந்த அடிப்படைக்கும் அடிப்படை எது? மாடுகளே அல்லவா?

கால்நடைக்கு எங்கும் எந்தக்காலத்திலும் பெருஞ் சிறப்பு இருந்து வந்திருக்கிறது. பயிர்த்தொழிலை அறியாத முது பழங்கால மக்களும் மாடுகளை மேய்த்துக் காலத்தைக் கடத்தக் கற்றிருந்தனர்.

பழந்தமிழ் இலக்கியத்தில் மூவினம் என்ற ஒரு சொல் கால் நடைகளைக் குறிக்க வழங்குகிறது. முல்லை நிலத்திலே வாழ்ந்த இடைக்குல மக்களின் சிறப்பான தொழில் மூவினம் மேய்த்தலேயாகும். இந்துக்களால் சிறப்பாகப் போற்றப்படும் ஆயர்பாடிக் கண்ணன் ஒரு மேய்ப்பனே அல்லவா ? கால் நடைகளுக்குத்தான் எத்தனை சிறப்பு !

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கால் நடையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு 56 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இரண்டாவது திட்டத்தில் 236 லட்சம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அளவுக்கு கால் நடைகளைப்-பேணுவதால்தான் நாம் படிப்படியே உழவைப் பெருக்க முடிகின்றது.

சாதிக்காளைகளும், ஆட்டுக் கடாய்களும் இன வளர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படுபவை. திருச்சி மாவட்டத்தில் 11 காங்கயம் காளைகளும், 2 சிந்திக் காளைகளும், 6 முர்ரா எருமைகளும், 3 மேச்சேரி கடாய்களும் வாங்கப்பட்டன. செலவில் செம்பாதி உதவியாகக் கிடைத்தது. திட்டக் குழுவின் நிதியிலிருந்து [Planning Committee Funds] இதற்கு நல்கப்பட்ட தொகை ரூ, 9,866. இதில் கோழிப் பண்ணைகளின் வளர்ச்சிக்காக 560 ரூபாய் செலவழிக்கப் பட்டுள்ளது.

கால்நடைச் செல்வத்தைப் பேணும் நோக்கத்துடன் புதுக் கோட்டையில் ஒரு கால்நடைப்பண்ணை திறக்கப்பட்டுள்ளது. கால் நடைகளின் செழிப்பிற்கு பொலிக்காளைகளைக் கொண்டு இன வளர்ச்சி செய்வது மிகவும் இன்றியமையாதது என்பதை முன்னரே கூறினோம். இந்த மாவட்டத்தில்

ஐந்தாண்டுகளிலும் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட பொலி காளைகள் 223 ; ஈனப்பட்டுள்ள கன்றுகள் 5,216.

கால்நடைகள் பிணிப்புருமல் அவைகளைக் காப்பாற்றுவது மிகவும் அவசியம். அதுவும் அசோகனது அற ஆழியை மணிக்கொடியிலே பொறித்துக் கொண்டுள்ள நமக்குக் கால் நடைகளின் நலத்தில் உள்ள அக்கறைக்கு அளவு காண முடியாது.

திருச்சி மாவட்டத்திலுள்ள கால்நடை மருத்துவ சாலை களில் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மருத்துவம் பெற்ற கால்நடைகளின் எண்ணிக்கை 1,42,084 ; காயடிக்கப்பட் டவை 31,953 ; ஊசி போடப்பட்ட கால்நடைகள் 2,87,548.

தற்காலிகமாக முசிரியில் வேலை செய்துவந்த மருத்துவ சாலை நிலையானதாக ஆக்கப்பட்டது. இந்த மாவட்டத்தில் நடமாடும் சாலைகளாக [touring billets] இருந்த எட் டினை சிறிய மருத்துவ சாலைகளாக ஆக்கினர். இம் மருத் துவ சாலைகள் மக்களிடையே செல்வாக்குப் பெற்று வரு கின்றன. அங்கங்குள்ள குடியானவர்களுக்கு இவைகளால் நிலையான உதவி கிடைக்கின்றது.

புதுக்கோட்டையிலுள்ள மாவட்டக் கால்நடைச் செல்வப் பண்ணையில் மருந்தாய்வுக்களம் [Clinical laboratory] ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மேலும் இங்குள்ள மருத்துவச் சாலையில் கோழிப்பண்ணை பற்றிய விளக்கம் தருவதற்கான அமைப்பு ஒன்று புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. செயற் கைக் கருத்தரிப்பு நிலையம் ஒன்று இந்த மாவட்டத்தில் ஒழுங்காக வேலை செய்துவருகிறது.

தோலுரிப்புக் கிளை நிலையம் [flaying sub-centre] ஒன்று 1–8–1954–லிருந்து திருச்சியில் வேலை செய்து வரு

கின்றது. விஞ்ஞான முறையில் தோலை உரிக்கும் வகை பற்றிய பயிற்சியை 33 பேர் இவ்விடத்தில் அடைந்திருக்கின்றனர்.

நாட்டுப் புற வளர்ச்சி வட்டாரங்களில் கால்நடை கண்காணிப்பு மிகவும் சிறந்திருக்கிறது. கரூர், பெரம்பலூர், முசிறி, ஆலங்குடி, வெள்ளியானை ஆகிய ஐந்து வட்டாரங்களிலும் இதனைக் கவனிப்பதற்கு எனத் தனி அலுவலாளர்கள் இருக்கின்றனர்.

—:o:—


தொழில்...
வளர!

“ ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்,
ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்,
ஓயுதல் செய்யோம், தலை சாயுதல் செய்யோம்,
உண்மைகள் சொல்வோம், பல வண்மைகள் செய்வோம் ”

—பாரதியார்.

தொழில்...

வளர!

இன்றைய உலகம் தொழில் உலகமாக இருக்கின்றது. உழைப்பால் உயர்கின்ற நாடுதான் இங்கு வாழமுடியும். பழங்காலத் தமிழகத்தில் இந்த நிலை இருந்தது. உழைக்காதவன் வாழ்வு உடையவன் என்றே அன்று கருதப் படவில்லை. முன்னோர் ஈட்டிய பொருளை வைத்து இன்ப வாழ்வு நடத்தியவன் அன்று செத்தவனாகவே மதிக்கப் பட்டான். "உள்ளது சிதைப்போர் உளரெனப் படார்" என்பது குறுந்தொகைப் பாட்டு ஒன்றில் வருகின்ற தொடர். இத்தகைய மனப்போக்கும், ஊக்கமும் இன்று மனித வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்க வேண்டியவை.

தொழிலைப் பெருக்குவதிலே மேலை நாடுகளுக்கு மிகவும் பின் தங்கி இருந்தோம் என்றாலும், கடந்த சில ஆண்டுகளிலே நாம் முன்னேறியுள்ள வேகத்தைப் பார்க்கும்பொழுது, மேலை நாடுகளை எட்டிப் பிடிக்க நீண்ட காலம் செல்லும் என்று தோன்றவில்லை. தொழில் வளருகிறது; தொழில் நுட்பம் அதிகரிக்கிறது; கூட்டு முயற்சிகள் நல்ல வெற்றி அளித்து வருகின்றன.

60823 3211517,5'N56—N51 31J7

இந்த நிலையில் நமது ஐந்தாண்டுத் திட்டம் தோன்றி நமக்குப் பெரு வெற்றியைத் தந்துள்ளது. நமது மாநிலத்தில் ரூ. 172 லட்சம் இத்துறையின் வளர்ச்சிக்கு ஒதுக்கப் பட்டது. இரண்டாவது திட்டத்தில் குடிசைத் தொழில்களுக்கும் நடுத்தரத் தொழில்களுக்குமாக ரூ. 1,520 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் நலனுக்காகத் தனியே ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 1½ லட்சமும் தொழிலை வளர்க்கப் பயன்படுவதே என்பது சொல்லாமலே விளங்கும். மேலும் கல்விக்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 1,425 லட்சத்தில், தொழில் கல்வியும் சேர்த்தே கணக்கிடப் பட்டுள்ளது. எனவே இரண்டாவது திட்டத்தில் மின்சாரம், நாட்டுப்புற வளர்ச்சி ஆகிய இரண்டுக்கும் அடுத்த நிலையில் உள்ள தொழில் வளர்ச்சி சிறந்து ஓங்குமென்பது உறுதி.

முதல் திட்டகாலத்தின் தொடக்கத்தில் 158 மாணவருக்குத் தொழில் நுணுக்கக் கல்வி [Technical Education] தந்து வந்த இடத்தில், வசதியைப் பெருகச் செய்து, அதன் மூலம் திட்டத்தின் இறுதியாண்டில் 342 மாணவருக்கு அந்த வாய்ப்பு கிடைக்குமாறு அரசாங்கம் செய்தது. தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத அடிப்படைகளுள் ஒன்று, தொழில் நுட்பம் தெரிந்த ஆட்களைப் போதுமான அளவு பெறுவதே அல்லவா ?

நாட்டுப்புறத்தைத் தொழில்மய மாக்குவதில் திருச்சி மாவட்டம் சிறந்து விளங்கியது. 23 கிராமத் தொகுதிகளில் [Village Groups] இத்திட்டம் அமுல் நடத்தப் பட்டது. பல்வேறு குடிசைத் தொழில்கள் பேணி வளர்க்கப் பட்டன. கோரைப்பாய் பின்னுவோரின் நலனுக்காக காட்டுப்புத்தூரில் ஒரு கூட்டுறவுச் சங்கம் துவங்கப் பட்டது. ஆமதாபாத்து, பம்பாய் போன்ற இடங்களில் இங்கு செய்யப்படும் பண்டங்கள் நன்கு விலை போகின்றன. மாதம்

ஒன்றுக்கு ரூ. 500 பெறுமான சிமெண்டுப் பீப்பாய்களை உண்டு பண்ணும் அமைப்பு ஒன்று ஆமூரில் உருவாக்கப் பட்டிருக்கிறது.

குடிசைத் தொழில்களுக்காக உதவியும் கடனும் கேட்டு வந்த விண்ணப்பங்களில் 42-க்குப் பரிந்துள்ளனர். [சிபார்சு செய்துள்ளனர்].

தொழிலைத் திறம்படச் செய்வதற்கு ஏதுவாகப் பல புது முறைக் கருவிகள் கம்மியர் முதலிய கையுள் வினைஞருக்கு [Artisans] இனமாக வழங்கப்பட்டன. முசிரி, ததையங்கார்பேட்டை ஆகிய கோட்டங்களில் [firkas], நாட்டுப்புறத் தொழில்மயத் திட்டத்தின் கீழ் 4,700 ரூபாய் பெறுமான கருவிகள் இவ்வாறு வழங்கப்பட்டு இருக்கின்றன. 6,106 ரூபாய் பெறுமான கருவிகள் 104 கிராமக் கையுள் வினைஞருக்குக் கொடுக்கப்பட்டன. இம்மாவட்டத்தில் உண்டாக்கப்படும் குடிசைத்தொழில் பண்டங்கள் யாவும் திருச்சியிலுள்ள குடிசைத்தொழில்கள் மியூசியத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

வேளாண்மை, தொழில், ஊருணி ஆகியவற்றிற்காக அரசாங்கத் தொழில்துறை, குழிக்கும் [Boring] பணிகள் பலவற்றை மேற்கொண்டது. வேளாண்மைக்காக 186 இடங்களிலும், தொழில்களுக்காக 44 இடங்களிலும், ஊருணிகளுக்காக 171 இடங்களிலும் ஆக மொத்தம் 401 இடங்களில் இந்த வேலை நடைபெற்றது. இவற்றில் 371 இடங்களில் முழு வெற்றி கிடைத்தது. போடப்பட்ட குழிகளின் மொத்த ஆழம் 27,263 அடி. இதில் 11,294 அடிகள் பாறை நிலத்தில் போடப்பட்டவை. மீத முள்ளவை வாய்ப்பான மண்ணில் தோண்டப் பட்டவை ஆகும்.

தொழில் துறையின் கீழ் மேற்கொள்ளப் பட்டிருக்கும் மற்றொரு சிறப்பான பணி இறைப்புக் குழாய்கள் பற்றி

யது. கடந்த ஐந்தாண்டுகளிலும் சுமார் 130 இறைப்புக் குழாய்களை இங்கு நிலையாக வைத்துப் பராமரித்துள்ளனர். இதன் மூலம் உழவர் மிக்க நன்மை அடைகின்றனர்.

வட்டாரங்களில் தொழில் வளர்ச்சி சிறப்பாகக் கவனிக்கப் பட்டது. முசிரி வட்டாரத்தில் 2 வார்தாச் செக்கு உள்ளது. கிராம மக்களுக்கு இதன் மூலம் எண்ணெ இறக்கும் வகை பற்றிய பயிற்சி தரப்படுகிறது. முசிரி வட்டத்திலுள்ள புலிவலம் கிராமத்தில் பொம்மைகள் செய்வதற்கான தொழிற் சாலை ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது. தோல் சம்பந்தமான வேலைகளில் பயிற்சி தருவதற்காக முசிரி வட்டாரத்தில் ஒரு பயிற்சி நிலையமும் உள்ளது. புதுமுறைக் கருவிகளைக் கையாண்டு தோலிலிருந்து பல பண்டங்களையும் செய்ய சக்கிலியர் இங்கு பயிற்சி பெறுகின்றனர்.

கரூர் வட்டாரத்தில் குடிசைத்தொழில் முன்னேற்றங்கருதி 102 பேருக்கு 17,100 ரூபாய் கடனுதவி அளிக்கப்பட்டது. முசிரி வட்டத்தில் இரண்டு வார்தாச் செக்குகளும், சேந்தர் பட்டியில் மூன்றும் உள்ளன. புலிவலம் என்னுமிடத்தில் காகிதப் பொம்மைகள் செய்யப்படுகின்றன. தும்பலம் என்னுமிடத்தில் தோல் பதனிடுஞ்சாலை ஒன்றும், ஆமூரில் எழுதுகோல், மரச்சாமான் ஆகியவை செய்யும் சாலையும் எற்படுத்தப்பட இருக்கின்றன.

காதி

காதிக்கு உரிய சிறப்பு மென்மேலும் வளருவதற்கான முயற்சிகள் யாவும் குறைவின்றிச் செய்யப்பட்டன. ஆலைகள் பல்கிவரும் இருபதாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் ஒரு நாடு காதிக்கு வாழ்வளிப்பது எளிதான காரியமல்ல.

வட்டாரங்களில் இத்தொழில் பெருமளவுக்கு முன்னேறியுள்ளது. குறைந்த விலையில் கிராம மக்களுக்கு சர்க்கா வழங்கப் படுகின்றது. ஒவ்வொரு வட்டாரத்திலும் நூற்பு

அமைப்பாளர்கள் (Spinning Organisers) உள்ளனர். இவர்களின் துணையோடு மாவட்டத்திலுள்ள காதி கண் காணிப்பாளர் (Khadi instructor) இத்தொழிலைச் செம் மையாக வளர்த்து வருகிறார். ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தது ஆயிரம் சர்க்காவேனும் சுழல வேண்டுமென் பது அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது.

கரூர் வட்டாரத்தில் ஒன்று $7\frac{1}{2}$ ரூபாய் பெறுமான 319 சர்க்கா, மூன்று ரூபாய் மேனியில் விற்கப்பட்டன. மக்களை இத்தொழிலில் மிகுதியும் ஈடுபடச் செய்வதே இதன் நோக்கம். 10,000 ரூபாய்க்கு இங்கு கதர் விற்பனை ஆகியுள்ளது.

பெரம்பலூர் வட்டாரத்தில் 900 சர்க்கா இன்று சுழல் கின்றன. நூற்போர் 1,200 பேர் உள்ளனர். ரூ. 40,000 பெறுமான சிட்டங்கள் இங்கு உற்பத்தி ஆகியுள்ளன.

மாடு ஒன்று குறைவதுடன் வேலையும் விரைவில் நடக்கும்



போக்குவரத்து

பண்டங்கள் நடமாட்டத்திற்குப் போக்குவரத்து வசதிகள் மிகவும் இன்றியமையாதவை. தொழில் வளர்ச்சி பண்டங் களின் நடமாட்டம் இல்லாமல் நடைபெருத ஒன்ருகும். எனவே தொழிலின் ஆக்கத்திற்குப் போக்குவரத்து வசதிகள் பெரிதும் துணைபுரிவன வாகும்.

போக்கு வரத்துக்கேற்ற சிறந்த பாதைகள் அமைக்கும் முயற்சியில் மாவட்ட ஆட்சிமன்றமும், மாநிலப்பாதைத் துறையும் ஒருங்கே இணங்கி உழைக்கின்றன.

மாவட்ட ஆட்சி மன்றத்தின் கீழ் 15¼ மைல் கிராமப் பாதைகள் செப்பனிடப் பட்டுள்ளன. 418½ மைல் நீளத் திற்குப் புதிதாகக் கிராமப் பாதைகள் போடப் பட்டுள்ளன. பாலங்கள் அமைக்கும் பணியிலும் நாட்டுப்புறமே மிகுதியான கவனத்தைப் பெற்றுள்ளது. மொத்தம் நான்கு மைல் நீளத்திற்குப் பெரிய பாலங்கள் பல நிறுவப் பட்டிருக் கின்றன.சிறு பாலங்களின் மொத்த நீளம் 4½ மைல்.

இவை யாவுமாகச் சேர்ந்து கிராமத் தொழில்களின் ஆக்கத் திற்கு மிகுந்த உதவி அளிப்பதுடன், நாட்டுப்புறங்களேப் புறவுலகோடு தொடர்பு கொள்ளச் செய்து அவற்றின் வளர்ச் சிக்குப் பெரிதும் உதவுகின்றன.

மாநிலப் பாதைத் துறையின் கீழ் 140 மைல் நீளத்திற் குப் புதிதாகப் பாதைகள் போடப்பட்டுள்ளன. 7 மைல் நீளத்திற்குப் புதிதாகக் கல்லிட்ட கெட்டிப்பாதை அமைக்கப் பட்டது. கான்கிரீட் பாதை ஒன்று போடப்பட்டிருக்கிறது. புதிதாக நிறுவப்பட்டுள்ள மதகுகள், பாலங்கள் ஆகியவை 26. புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் 147.

—(o)—


அறிவு
வளர!

“ வீடுதோறும் கலையின் விளக்கம்,
வீதிதோறும் இரண்டொரு பள்ளி,
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்கள் எங்கும் பலபல பள்ளி ”

—பாரதியார்.

அறிவு...

வளர!

"கைப்பலமே மெய்ப்பலம்" [Might is right] என்ற காலம் மலையேறி நெடுங்காலமாயிற்று. மூளைபலமே இன்று மெய்யான பலமாக உள்ளது. அறிவைக் கூர்மைபடுத்தும் மனிதனும், அத்தகைய மனிதர்களை நிறையக் கொண்டுள்ள நாடுகளும்தான் இன்றைய உலகின் முன்னணியில் நிற்கின்றன. அறிவு பலங்கொண்டவன் தன் அறிவைக்கொண்டு மற்ற யாவற்றையும் ஆட்டிப் படைக்க முடியும்; அவ்வாறு செய்துவருவதைக் கண்கூடாகவும் காண்கிறோம். ஒரு நாட்டின் முன்னேற்றம், பாதுகாப்பு இரண்டுமே அறிவினுள் அடங்கி இருக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் குடியரசு பெற்றுத் திகழ்கின்ற நாம், நமது முன்னேற்றத்திற்கு அடிப்படையாகச் செய்ய வேண்டியது என்ன என்பதைப்பற்றி அறிந்தே இருக்கிறோம். கல்வி வளர்ச்சி, அரசாங்கம் உடனடியாக மேற்

கொள்ள வேண்டிய தலையாய கடமைகளுள் ஒன்றாகும். அதற்கேற்பவே பல திட்டங்களும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எனினும் நெடுங்காலமாக இத்துறை புறக்கணிக்கப் பட்டுக் கிடந்ததால் நாம் மிகவும் பின்னுக்குத் தங்கி இருக்கின்றோம். 1951–ஆம் ஆண்டின் கணக்குப்படி நமது மாநிலத்தில் நூற்றுக்குச் சுமார் 20 பேர்களே கல்வியறிவு பெற்று இருந்தனர். ஆனால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பட்ட வளர்ச்சி மிகவும் விரைவானது. திட்டமிட்டுச் செயலாற்றியதன் பயனாகக் கல்விக் கூடங்களும் கற்போர் தொகையும் பல்கிப் பெருகியுள்ளன. கல்வித்துறையும், நாட்டுப்புற வளர்ச்சி, உள்ளூர் வளர்ச்சி, தாழ்த்தப்பட்டோர்

விளையாட்டு தரும் படிப்பை வெறும் ஏடு தராது

முன்னேற்றம் ஆகிய பல திட்டங்களும் கல்வியைப் பெரிதும் வளர்த்துள்ளன. கல்வித் துறையின் கீழ் நடைபெற்ற பணிகளைக் குறித்து மட்டும் இங்கு விளக்கமாகக் காணுவோம்.

திருச்சி மாவட்டத்தில் திட்டத்தின் தொடக்க காலத்தில் 1,260 தொடக்கப் பள்ளிகளே இருந்தன. இவற்றுள் 76 பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகும். இவற்றுள் பயின்ற சிறுவர்களின் எண்ணிக்கை 93,781 ; சிறுமிகளின் எண்ணிக்கை 42,484. கல்வி பெறாத சிறுவரின் தொகையும் மிகுதியாகத்தான் இருந்தது. அதற்குப் பல காரணங்கள் உண்டு என்றாலும் சிறப்பாகப் பள்ளிகள் போதாமையும் ஒரு காரணமாகும். எனவே போதிய பள்ளிகளை எழுப்புவது, உள்ளவற்றையே விரிவுபடுத்துவது, ஆசிரியர்களை மிகுப்பது ஆகிய செயல்களை விரைவாக மேற்கொண்டதன் விளைவாக கல்விகற்கும் வாய்ப்பைப் பெறும் பிள்ளைகளின் தொகை குறிப்பிடத்தக்க வகையில் வளர்ந்தது. திட்டத்தின் முடிவில் கல்விப்பயிற்சி பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை கீழ் வருமாறு உள்ளது :

சிறுவர்கள்—1,30,663.
சிறுமிகள்— 64,360.

பள்ளிகளின் எண்ணிக்கை 1,439 ஆக அதிகரித்துள்ளது. இவற்றுள் 56 பள்ளிகள் தொடக்கப் பள்ளிகளாகவிருந்து நடுநிலைப்பள்ளிகளாக மாற்றப்பட்டவை. ஏற்கனவே யிருந்த பள்ளிகளையும் சேர்க்க மொத்த நடுநிலைப் பள்ளிகள் 132 ஆகும். ஆசிரியர்களின் எண்ணிக்கை நிலைமை :

ஆண்டு.	1951	1956
ஆண்பாலர்	2,999	3,831
பெண்பாலர்	1,194	1,885

இங்கு குறித்துள்ள எண்ணிக்கை பயிற்சிபெற்ற ஆசிரியர்களை மட்டும் குறிப்பதாகும். பயிற்சிபெறாத ஆசிரியர்களும்



இவனினும் சிந்தனைச் சிற்பி உளரோ ?

நிரம்ப உள்ளனர். திட்டத்தின் இறுதிக்காலத்தில் இம்மா வட்டத்தில் பணியாற்றிய பயிற்சிபெறாத ஆசிரியர்கள் 433 பேராவர்.

ஓராசிரியர் பள்ளித்திட்டம் நமது மாநிலத்தில் ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சியுற்ற குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதனால் இரண்டு சிறப்பான பயன்கள் விளைந்தன. ஒன்று, மூலை முடுக்குகளி லெல்லாம் பள்ளிகளைத் திறந்து, பள்ளியைக் கனவுகாண முடியாத நிலையிலிருந்த ஆயிரக்கணக்கான நாட்டுப்புறச் சிறுவருக்குக் கல்வியளிக்க முடிந்தது. இரண்டாவது, வேலையின்றித் தெருத் தெருவாக அலைந்து கொண்டிருந்த பல படித்த இளைஞர்களுக்கு வேலை தர முடிந்தது. அவ்வகையில் இம்மாவட்டம் நல்ல வெற்றி பெற்றது. சுமார் 600 இளைஞர்கள் அலுவல் பெற்றனர்.



அடிப்படைக் கல்விப் பயிற்சிப் பள்ளியிலே....

அடிப்படைக் கல்வி மற்ருெரு குறிப்பிடத்தக்க **வளர்ச்சி** யாகும். ஆங்கிலேயர் இங்கு நிறுவிய கல்விமுறையின் அடிப்படை இன்று நம் நாட்டு வளர்ச்சிக்கு ஒவ்வாதது. எழுத்தர்களை [Clerks] உண்டுபண்ணுவதைத் தவிர வேறு நோக்கம் அன்று நாட்டை ஆண்டவர்க்குப் பெரும்பாலும் இல்லை. வெறும் எட்டுக்கல்வி நாட்டுக்கு உதவாது என்பதை அண்ணல் காந்தியடிகள் வற்புறுத்தித் தொழில் பயிற்சியும் கலந்த ஒரு புதுமுறைக் கல்வித் திட்டத்தை வகுத்தார். அந்த அடிப்படையில் செயல்பட்டு வருவதுதான் அடிப் படைக் கல்வித்திட்டம். தொடக்கப் பள்ளிகள் யாவற்றையும் அடிப்படைப் பள்ளிகளாக [Basic Schools] மாற்றவேண் டும் என்பதே நம் அரசாங்கத்தின் நோக்கம். ஆனுல் அது

நினைத்தவுடனே செய்துவிடக் கூடியதல்ல. அதற்குப் போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேண்டும். ஆசிரியர்கள் கிடைப்பதற்கேற்ப தொடக்கப் பள்ளிகளை அடிப்படைப் பள்ளிகளாக்கும் பணி நமது மாநிலத்தில் நடைபெற்று வருகின்றது.

திருச்சி மாவட்டத்தில் திட்டகாலத்தில் தொடங்கப்பட்ட ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் நான்கனுள் இரண்டு, அடிப்படை ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளே ஆகும். திட்டத்தின் தொடக்க காலத்தில் மூன்று அடிப்படைப் பள்ளிகளே இருந்தன. திட்டமுடிவிலோ அவை **41** ஆகப் பெருகியுள்ளன.

திட்டத்தின் தொடக்க காலத்தில் **12** இடைநிலைப் பள்ளிகள் **[Middle Schools]** இருந்தன. அப்போதிருந்த உயர்நிலைப் பள்ளிகள் **40.** ஐந்தாண்டுகளில் **14** உயர்நிலைப் பள்ளிகள் புதிதாக எழுந்தன. நான்கு இடைநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டன. உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடன் பலவிடங்களில் புதிய பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டன.

இங்கு விளக்கப் பட்டவை போக எஞ்சி நிற்கும் ஒன்று உண்டு. அது யாவற்றிலும் முக்கியமானதும் சிக்கல் நிறைந்தது மாகும். அதுவே முதியோர் கல்வித் திட்டம். அல்லும் பகலும் உழைத்து வயிற்றைக் கழுவும் வயது வந்தவர்களைப் பிடித்து பள்ளியிலே உட்காரவைத்துப் பாடஞ் சொல்வது எளிதான காரியமா ? எனினும் அதைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். வயது வந்தோருக்கும் ஓரளவு கல்வியறிவைப் புகட்டினாலன்றி நமது குடியரசு உண்மையான குடியரசாக இலங்குதல் அருமை. எனவே முதியோர் கல்வித்திட்டம் முழு முயற்சியுடன் நமது மாநிலத்தில் செயல்படுத்தப் படுகின்றது. திருச்சி மாவட்டத்



முதியோருக்குக் கற்பிக்கு முன் இவர்கள் கற்றாக வேண்டும் !

தில் 1951–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 63 முதியோர் பள்ளிகள் இருந்தன. ஐந்தாண்டுகளில் மேலும் 60 பள்ளிகள் புதிதாகத் தோன்றின. இவை சிறப்பாக நாட்டுப்புற வளர்ச்சி வட்டாரங்களிலேயே அமைக்கப்பட்டன.

நடமாடும் சமூகக் கல்விக் கூடம் [Social Education Mobile van] நாட்டுப்புற மக்களின் பொது அறிவை வளர்ப்பதில் நல்ல பணியாற்றி வருகின்றது. இது நாட்டின் பல வேறு ஆக்கத் திட்டங்கள் பற்றியும், புதுமுறை உழவு பற்றியும், சுகாதாரம் பற்றியும் பல அரிய கருத்துரைகளைப் படங்கள் மூலம் மக்களுக்கு விளக்கிக் காட்டுகின்றது.

Tir.—5A


நாடு...
உயர!

" மழை தொழில் உதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய
நிலனும் மரனும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்கு விளங்க"

—மதுரைக்காஞ்சி.

நாடு...

உயர!

நாடு என்பது இந்திய நாட்டைப் பொறுத்த வரையில் நாட்டுப்புறமே. எனவே நமது நாட்டின் வளர்ச்சியும் உயர்வும் ஒரு சில நகரங்களின் வளர்ச்சியில் மட்டும் இல்லை. நூற்றுக்கு 82·7 பேரைக்கொண்டுள்ள பெரும்பகுதி முன்னேறினால்தான் நமது நாடு முன்னேற முடியும். ஏனெனில் அழகிய நகர்களைத் தாங்கி நிற்கும் மூலைக்கற்களாக இருப்பவை நாட்டுப்புறங்களே. அவையே உறுதியற்றவை ஆகுமானால் பிறகு கட்டிடம் எங்கே ?

நமது மாநிலத்தின் மக்கள் தொகை 35,734,489(1951 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கின்படி). இதில் நிலத்தை நம்பி வாழ்வோரின் எண்ணிக்கை 21,990,710. இன்னும் நெசவு, பிற குடிசைத் தொழில்களைச் செய்வோரும் கிராமங்களில் நிறைய இருக்கின்றனர். நூற்றுக்குச் சுமார் 78 பேர், நமது மாநிலத்தில், நாட்டுப்புற மக்களாவர். இங்குள்ள ஊர்களின் எண்ணிக்கை 19,491 ; பேரூர்கள் (Towns) 293.

எனவே நாடு உயர, "ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்" எனப் பாரதியார் அடுக்கிக் கொண்டே போகும் அந்த மக்களின், வழ்வு உயர வேண்டும். அவர் களின் உலர்ந்த உடல்களிலே பசுமை தோன்ற வேண்டும். இதனை நன்கு உணர்ந்து செயல்பட்டு வருவதனால்தான் நமது நாடு இன்று படிப்படியே முன்னேறி வருகின்றது. சில துறைகளிலே வியக்கத்தக்க அளவுக்கு வளர்ந்திருக் கின்றோம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப்போலவே தொடர்ந்து வரும் பிற திட்டங்களும் நாட்டுப் புறங்களை மிகவும் உயர்த்தப் பயன் படும் என்பதில் ஐயமில்லை.

நாட்டுப்புறத்தை முன்னேற்றுவதில் உள்ள இடர்ப்பாடுகள், அங்கு நிலவும் அறியாமையும் வறுமையுமே. எனவே அவர்

புகலூர்ப் பாலம்



களோடு உடன் இருந்து அவர்களுக்கு வழிகாட்டும் வகையிலும், போதிய பண உதவி செய்து ஊக்குவிக்கும் முறையிலும் சிறந்த ஒரு திட்டத்தை நமது அரசு வகுத்தது. சமுதாய நலத்திட்டம், சமூக வளர்ச்சித் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம் எனப் பல வேறு பெயர்களில் இன்று அது செயல் பட்டு வருகின்றது. ஐந்தாண்டுத் திட்டத்தின் நாடி என்று சொல்லத் தக்கவை இவைகளே. ஒவ்வொரு மாவட்டத்திலும் விரைந்து தொழிலாற்றி வரும் இவை, இன்னும் முழு நிலையில் பணியாற்றி, நாட்டிலே மிகப் பெறும் மாறுதலை உண்டுபண்ண இருக்கின்றன. அதற்கேற்பவே, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 77 லட்சம் ரூபாயைச் செலவிட்ட நமது மாநிலம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,710 லட்சம் ரூபாயை இத்துறையில் செலவிட இருக்கின்றது.

திருச்சி மாவட்டத்தில் நாட்டுப்புற வளர்ச்சித் திட்டங்களின் கீழ் சுமார் 1,150 சதுர மைல் பரப்புள்ள பகுதி நல்ல பயனை அடைந்து வருகிறது. மூன்று சமுதாய வளர்ச்சித் திட்ட வட்டாரங்களும், இரண்டு தேசிய வளர்ச்சி வட்டாரங்களும் இங்கு உள்ளன. இவற்றுள் அடங்கிய மக்களின் தொகை 5,20,000. மீதமுள்ள பகுதிகளில் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் வேலை செய்து வருகிறது. தேசிய வளர்ச்சி வட்டாரங்களிலும், சிறப்பாகக் குடி நீர்த் திட்டங்கள், உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் உதவியைப் பெறுகின்றன.

நாட்டுப்புறத்தின் சிறப்பான தொழில் உழவே. ஆகையினால் இந்த வட்டாரங்கள் மேற்கொண்ட ஆக்க வேலைகளும் அதற்கேற்பவே அமைக்கப் பட்டன. பொறுக்கு விதைகளைப் பயன் படுத்துதல், தழையுரம் ரசாயனஉரம் முதலியவற்றை இடுதல், புதிய முறைகளில் பயிரிடுதல், புதிய உழவு முறை முதலிய பலவற்றிலும் உழவருக்குத் துணையாக நின்று அவர்களை ஊக்குவதே இந்த வட்டாரங்களில்

நிகழ்ந்துவரும் தலையாய பணிகளாகும். புதிய உழவு முறையைப்பற்றிப் பல இடங்களில் உழவருக்குச் செய்முறையில் விளக்கிக் காட்டப்பட்டது. இத்தகைய உழவை மேற்கொள்ளப் போதிய கருவிகளும், அவைகளை வாங்கத் தேவையான பண மும் கடனாகக் கொடுத்து உதவுவதோடு, உழவரை ஊக்கு வித்து அவர்களுக்கும் நாட்டுக்கும் பயன்தரும் வகையில் வேளாண்மை வளர்க்கப்பட்டு வருகிறது.

கால்நடை வளர்ச்சி, கல்வி, சுகாதாரம், மருத்துவம் முதலிய எல்லாத் துறைகளிலும் நோக்கம் செலுத்தவும் வட்டாரங்கள் தவற வில்லை. வட்டாரங்களின் நோக்கம், அவைகளின் எல்லைக்குள் அடங்கிய மக்களின் முன்னேற்றத் திற்கான எல்லாத் துறைகளிலும் பணியாற்றுவதே யாகும்.

வேளாண்மை

வேளாண்மையைப் பற்றி முன்னரே விளக்கமாகக் கூறப் பட்டது. எனினும் அங்கு உழவுத்துறையின் திட்டங்களும் அவற்றின் வெற்றிகளும் மட்டுமே சுட்டிக் காட்டப்பட்டன. நாட்டுப்புற வளர்ச்சித் திட்டங்களின்கீழ் இத்துறையில் மேற் கொள்ளப்பட்ட முயற்சிகளையும் அவற்றின் விளைவுகளையும் இங்கு காணுவோம்.

3,800 மணங்கு பொறுக்கு விதை இந்த வட்டாரங்களில் விதைக்காகப் பயன்பட்டுள்ளது. விதையைப் போலவே எரு விடுதலும் போதிய கவனத்தைப் பெற்றுள்ளது. 4,400 மணங்கு ரசாயன எரு திட்டகாலத்திற்குள் இந்த வட்டாரங் களில் செலவழிந்துள்ளது. 1,000, மணங்கு தழையுரமும் பயன்படுத்தப் பட்டது.

நாட்டுப்புறங்களில் குப்பையைச் சரியாக மக்கச் செய்யாமல் வீணாக்கி விடுகின்றனர். அதைத் தடுப்பதற்காக எருக்குழிகள்

தோண்டும் வேலை நடை பெற்றுள்ளது. 3,000 எருக் குழிகள் இவ்வட்டாரங்களில் தோண்டப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் ஊட்டம் மிக்க மக்கிய உரத்தைப் பெறமுடியும். தமது குப்பையிலே குண்டுமணி மட்டு மல்ல—வைர மணியும் கிடைக்கும் என்பதை உழவர் தெரிந்து கொண்டால் பின்னர் அதனைக் கைவிடார்.

பழைய கருவிகள் சிறந்தவையே என்றாலும் புதிதாகத் தோன்றியுள்ள எத்தனையோ உழவுக் கருவிகள் உழைப்பை எளிதாக்குவதோடு, செலவையும் குறைப்பனவாக உள்ளன. விளைவை மிகுப்பதற்கும் துணைபுரிகின்றன. எனவே அவைகளை உழவருக்கு வழங்குவதில் இவ்வட்டாரங்கள் பெரிதும் ஊக்கங்காட்டுகின்றன. 190 கருவிகள் இதுவரையில் உழவருக்குத் தரப்பட்டுள்ளன. 680 பகுதிகளில் குடியானவருக்குப் புது முறை உழவும், புதிய கருவிகளைப் புழங்கும் வகையும் விளக்கிக் காட்டப்பட்டது. புதிய முறையின் எல்லையற்ற பயனை உழவர் இன்று நன்கு அனுபவிக்கின்றனர்.

யந்திர உழவின் மூலம் 1260 எக்கர் நிலம் பண்படுத்தப் பட்டது. இதில் 1,000 எக்கருக்கு மேலாக பெரம்பலூர் வட்டாரத்தில் உள்ளது.

பழங்களும் காய்கறிகளும் தெம்புள்ள உணவாவதோடு உணவுப் பற்றுக்குறையை நிரப்ப நமக்கு மிகவும் துணை புரிவனவும் ஆகும். இவ்வட்டாரங்களில் வளர்க்கப் பட்டுள்ள 2,505 பழமரங்கள் மிகுந்த பயன் தருவன. 420 எக்கர் நிலம் காய்கறி, பழம் ஆகியவற்றின் விளைச்சலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. மேலும் தழையுரம் தரும் மரவகைகளும் போதிய அளவு பயிரிடப் பட்டுள்ளன. 53,600 மரங்கள் தழையுரத்திற்காக மட்டும் வட்டாரங்களில் வளர்க்கப் பட்டுள்ளன.

பயிர்ப் பாதுகாப்பு வேலைகள் சிறப்புடன் நடந்துள்ளன. கிருமிகளைக் கொன்று விளைச்சலைக் காப்பாற்றுவது மிக முக்கியம். இல்லையேல் வெண்ணை திரளும்பொழுது தாழி உடைந்த கதையாகிவிடும். பூச்சிகளை அழிப்பதற்கான மருந்துகளை உழவருக்கு நிறைய வழங்கியதோடு, அவற்றைப் பயன் படுத்தும் வழிவகையையும் அவர்களுக்குப் பல இடங்களில் விளக்கமாக வேளாண்மைத் துறை செய்து காட்டியது.

கால்நடை வளர்ச்சி

நமது நாட்டில் கால் நடைகளின் தொகை மிகுதி. ஆனால் தரம் குறைவு. உழவனின் கண் கண்ட தெய்வமாக இருக்கும் கால் நடைகளின் வளர்ச்சி உழவனின் நலத்திற்கு அடிப்படையானது. மேலும் இன்றுள்ள நிலையில் நாம் பருகும் பாலின் அளவு மிகவும் குறைவு. நமது அன்றாட உணவில் இன்னும் நிறையப் பால்சத்து சேரவேண்டும் என்று யாவரும் கூறுகின்றனர். ஆனால் நமது ஆக்கள் சொரிந்த பாலோ, ஆழாக்குக்குச் சற்று அதிகம் என்று சொல்லத்தக்க நிலையில் இருந்தது.

எனவே இவற்றைக் கண்காணிப்பதில் வட்டாரங்கள் போதிய நோக்கம் செலுத்தலாயின. நல்ல இனவூக்கம் மிக்க சாதிக் காளைகளை வளர்த்து அவற்றின் மூலம் கால் நடைகளின் தரத்தை உயர்த்துவது, நோய் வராமல் கால் நடைகளைக் காப்பாற்றுவது, பிணிப்பு உறுகின்றவைகளுக்கு மருத்துவம் செய்வது முதலிய பல பணிகளும் மேற்கொள்ளப் பட்டன.

ஐந்து வட்டாரங்களிலும் திட்டகாலத்திற்குள் 44 சாதிக் காளைகளும், 500 கோழி முதலிய சாதிப் பறவைகளும் அளிக்கப் பட்டுள்ளன. 2,800 தெம்பற்ற காளைகள் காயடித்து விடப்பட்டன. அங்கங்கே வட்டாரங்களிலுள்ள கால்நடை



உழவனின் கண்கண்ட தெய்வம்

மருத்துவர், கால்நடைகளின் சுகாதாரத்தைப் பேணுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பர். அநேகக் கால் நடைகளுக்குத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன. நோய் வாய்ப் பட்டவைகளுக்கு மருத்துவம் செய்யப்பட்டது. இத்தகைய முயற்சிகளின் பயனாகக் கால்நடைகளின் தரம் படிப்படியே உயர்ந்து வருகிறது. அவ்வப்பொழுது நடத்தப்படும் கால் நடைக் கண்காட்சிகளும் கால் நடைகளின் வளர்ச்சியில் மக்களை ஊக்குவிக்கின்றன. ஒவ்வொரு வட்டாரத்திலும் இக்காட்சி நடைபெறுவதோடு, சிறந்த கால் நடைகளுக்குப் பரிசுகளும் வழங்கப் படுகின்றன.

இவ்வாறு மூவினங்களைப் பேணுவதன் மூலமும், உழவு முறையைச் சிறப்படையச் செய்வதன் மூலமும் வேளாண்மை சிறந்து, குடியானவரின் வாழ்வும் படிப்படியே நலமடைந்து

வருகின்றது. உழவருக்குத் தேவையான பணம் தாராளமாகக் கடனுக வழங்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் உள்ள வட்டாரங்களில் திட்ட காலத்திற்குள் 400 எக்கர் பரப்பு புதிதாக நீர்ப்பாசன வசதியைப் பெற்றுள்ளது.

சுகாதாரம்

மக்களின் நல் வாழ்வு உண்டியால் மட்டும் சிறப்பதில்லை. வாழ்வில் இன்பம் ஊற, நாட்டின் நலம் பெருக வேண்டும். சுகாதாரம் நலத்தின் மூலவேர். எனவே சுகாதாரம் பற்றிய எச்சரிக்கைகள் பலவற்றை இந்த வட்டாரங்கள் மேற்கொண்டன. மக்களுக்குச் சுகாதார வழிகளை விளக்கிக் காட்டினுல் மட்டும் போதாது. அதற்கான வாய்ப்புகளேயும் உண்டாக்கித் தரவேண்டும். எனவே இவ்விரண்டையும் மேற்கொண்ட வட்டாரங்கள், கிராம மக்களின் ஒத்துழைப்புடன் கழிவுநீர்க் கால்கள் வெட்டுவது, மலக் கழிவிடங்கள் கட்டுவது முதலிய தொண்டுகளை ஆற்றியுள்ளன. 33,000 அடி நீளத்திற்குக் கழிவுநீர்க் கால்கள் (drainage) வெட்டப் பட்டுள்ளன. ஆலங்குடி வட்டாரத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் (Primary Health Centre) உள்ளது. வெள்ளி யானை வட்டாரத்தில் மற்றொன்று திறக்கப்பட இருக்கின்றது.

பெரம்பலூர் வட்டாரத்திலும் கரூர் வட்டாரத்திலுமாக இரண்டு குட்டநோய் மருத்துவ நிலையங்கள் உள்ளூர் மருத்திவர்களின் துணையோடு நடத்தப்பட்டு வருகின்றன. பெரம்பலூர் வட்டாரத்திலுள்ள பூலம்பாடி கிருஷ்ணபுரம் ஆகிய இடங்களிலும், கரூர் வட்டாரத்தைச் சேர்ந்த தும்பிவாடியிலும், குட்டத்தால் உழலும் நோயாளிகளுக்கு வாரம் இரு முறை மருத்துவம் செய்யப்படுகின்றது.

கரூர் வட்டாரத்திலுள்ள சின்ன தாராபுரத்தில் ஒரு மருந்தகம் (Dispensary) உள்ளது. முசிரி வட்டாரத்தி

லுள்ள ஆமூரில் சுகாதாரக் கூட்டுறவுக் கழகம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இதன் உறுப்பினர், மருத்துவத்தை உதவியாகப் பெறுவதோடு, உரிய விலைக்கு மருந்தும் பெறு கின்றனர்.

பெரம்பலூர், கரூர் வட்டாரங்களில் படுக்கைகளோடு கூடிய ஆறு மருந்தகங்கள் நிறுவும் எண்ணம் உள்ளது. பொது மக்களின் உதவிபெற்று, பதினொரு தாய் செய் நல விடுதி கள், இந்த மாவட்டத்திலுள்ள வட்டாரங்களெங்கும் அமைக் கப் பட்டுள்ளன.

கல்வி

கண்ணிலார் எது இருந்தும் இல்லாதவரே அல்லவா? அறியாமை இருட்டிலிருந்து மக்களை மீட்கும் பணிக்கு எல்லா வற்றையும் விட சிறப்பான இடம் தரப்படுகிறது. கண்ணைக் கொடுத்த பிறகுதான் அவர்களுக்குக் கைகொடுக்க முடியும். நூறு பள்ளிகளுக்கு மேல் புதிதாக இந்த வட் டாரங்களில் திறக்கப்பட்டிருப்பது ஒன்றே இத்துறையில் நிறை வேறியுள்ள பணிகளின் அளவைக் குறிக்கப் போதியதாகும்.

சாதாரணப் பள்ளிகளாக இருந்த பதினைந்து பள்ளிகள் அடிப்படைப் பள்ளிகளாக (Basic schools) மாற்றி அமைக்கப் பட்டுள்ளன. பள்ளிகள் அனைத்தையும் அடிப் படைப் பள்ளிகளாக மாற்றுவதே நமது அரசாங்கத்தின் நோக்கம். பள்ளிகள் பலவற்றிற்குப் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டன. செலவில் பாதியை உள்ளூர் மக்களே அளித் தனர். ஐம்பத்தோரு ஆரம்பப் பள்ளிகளுக்கும், ஏழு நடுநிலைப் பள்ளிகளுக்கும், ஒரு உயர்நிலைப் பள்ளிக்கும் திட்ட காலத்திற்குள் கட்டிடங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. இன்னும் பல கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன,

முதியோர் கல்விக்கு நல்ல ஊக்கம் அளிக்கப்படுகிறது. நூற்றைம்பது முதியோர் கல்வி நிலையங்கள் வேலை செய்து வருகின்றன. நாலாயிரத்திற்கு மேற்பட்ட முதியோர், கல்விப் பயிற்சி பெற்று வருகின்றனர். சமுதாய மன்றமோ (Community hall) அல்லது பொழுது போக்கு நிலையமோ (Recreation centre) தத்தம் ஊர்களில் நிறுவப்படவேண்டும் என்பதில் எல்லா ஊர் மக்களும் ஆவல் கொண்டுள்ளனர். எனவே மக்களின் உதவியுடன் அநேக ஊர்களில் புதிய கட்டிடங்கள் எழுந்துள்ளன. பல ஊர்களில் படிப்பகங்களும், பூங்கா்க்களும் உள்ளன. திட்டகால எல்லைக்குள் கட்டி முடிக்கப் பட்டுள்ள சமுதாய மன்றங்கள் 36 ; பொழுதுபோக்கு நிலையங்கள் 38 ; படிப்பகங் கள் 34.

போக்கு வரத்து

நாட்டுப்புறத்தின் வளர்ச்சிக்குத் தேவையானவை எனக் கருதப் படுவன வற்றுள் பாதைகளுக்கு ஒரு சிறந்த இட முண்டு. புறவுலகத்தின் தொடர்பு இல்லாமலே நாட்டுப் புறத்தை முன்னேற்ற முயல்வது, இறக்கை முளைக்கு முன் னமே புறுவைப் பறக்க விடுவதற்கு ஒப்பாகும்.

எனவே இத்துறையில் நாட்டுப்புறத்தில் பெரிதும் நோக்கம் செலுத்தப்பட்டு வருகிறது. ஹெலிகாப்டரில் சென்றுல்தான் உண்டு என்ற நிலையிலிருந்த எத்தனையோ ஊர்கள் இன்று வண்டியில் சென்று அடையக் கூடியவையாய் இருக்கின்றன. திருச்சி மாவட்டத்தில் உள்ள வட்டாரங்களால் 40 மைலுக்குப் பக்காப் பாதையும் 160 மைலுக்குக் கச்சாப் பாதையும் போடப் பட்டுள்ளன. பாதைகளை வெள்ளம் அரிக்காமல் தடுப்பதற் காகவும், போக்குவரத்து ஒழுங்காகத் தடையின்றி நடைபெறு வதற்காகவும், தேவையான இடங்களில் மதகுகள் அமைக் கப்பட்டன. திட்ட காலத்தில் சுமார் 50 மதகுகள் கட்டப் பட்டுள்ளன.

உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அநேக கிராமங்களில் நல்ல பாதைகள் அமைத்து, அவைகளை மாவட்டத்தில் உள்ள பல முக்கிய பாதைகளோடு இணைத்துள்ளனர். அதன் விளைவாக நாட்டுப்புற மக்கள் நகரங்களுக்கும் பேரூர்களுக்கும் எளிதில் போய்வர முடிகிறது. புறவுலகோடு அவர்கள் கொள்ளும் தொடர்பும் நெருங்குகிறது. இதனால் கிராம மக்களின் நோக்கத்திலேயே பெரு மாறுதல் உண்டாகி வருகின்றது. பல புதுமைகளை அவர்களின் உள்ளம் பற்றத் தொடங்கி விட்டது. மொத்தத்தில் எண்பத்தாறு கிராமப் பாதைகளும், பதினொரு பாலங்களும், ஒன்பது மதகுகளும் அமைக்கப் பட்டுள்ளன.

கரூர் தேசிய வளர்ச்சி வட்டாரம்

பொதுவாக நாட்டுப்புறத்தில் தேசிய வளர்ச்சித் திட்டமும், சமுதாய நலத் திட்டமும் ஆற்றியுள்ள பணிகளைச் சுருக்கமாக விளக்கினோம். மக்களின் ஒத்துழைப்பும் பணமும் இந்த வட்டாரங்களின் வெற்றிக்குச் சிறிது உதவின என்றாலும், அரசாங்கம் கடனாகவும் உதவியாகவும் கொடுத்துள்ள தொகை மிகப்பெரிது. இத்துறையில் அதன் ஊக்கமும் நோக்கமும் மிக அதிகம் என்பதும், அதற்கான காரணங்களும் யாவரும் அறிந்ததே. இந்த ஐந்து வட்டாரங்களில் மட்டும் திட்டகால எல்லைக்குள் 15 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

ஒவ்வொரு வட்டாரத்திலும் தனித்தனியே ஆகியுள்ள செலவையும், நிறைவேறியுள்ள பணிகளையும் தெளிவாகக் காணுவோம்.

1953-ஆம்ஆண்டு அக்டோபர்மீ 2உ-யில் திறக்கப்பட்ட இந்த வட்டாரம் 1956-ம்ஆண்டு ஏப்ரல்மீ 1உ-யில் சமுதாய நல வட்டாரமாக மாற்றப்பட்டது.

1953–54

ஐம்பது ரூபாய் பெறுமான விதை இனமாகத் தரப்பட்டது. பூச்சிகளைக் கொல்லும் வகை குறித்து விளக்கம் தரும் முறையில் 300 ரூபாய் செலவாகியது. அறுநூறு ரூபாய் பெறுமான பூச்சி மருந்து உழவருக்குப் பாதி விலைக்கு அளிக்கப் பட்டது.

1954–55

ஆயிரத்து நூற்று இருபத்திரண்டு ரூபாய் செலவில் 52 எக்கர் நிலம் யந்திரக் கலப்பையால் உழப்பட்டது. குடியானவர் இதில் 510 ரூபாயைத் தாம் ஏற்றுக் கொண்டனர்.

நானூற்று இருபது ரூபாய் பெறுமான தென்னங் கன்றுகள் பாதி விலைக்குத் தரப்பட்டன. ஆயிரம் ரூபாய் பெறுமான மருந்து பாதி விலைக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. அதேபோல் 250 ரூபாய் பெறுமான காய்கறி விதைகளும் பாதி விலைக்கு அளிக்கப்பட்டன.

1955–56

முந்நூறு ரூபாய் பெறுமான தேன் கூடுகள் பாதி விலைக்கு விற்கப்பட்டன. இதேபோல 2,858 ரூபாய் பெறுமான பொறுக்கு விதையும் செலவழிந்தது. மாதிரிப் பண்ணைகளுக்கு நூறு ரூபாய் பெறுமான பொறுக்கு விதையும், ஐம்பது ரூபாய் பெறுமானமுள்ள தென்னங் கன்றுகளும் அளிக்கப்பட்டன.

ஆயிரம் ரூபாய் பெறுமான தென்னங் கன்றுகள் பாதி விலைக்குத் தரப்பட்டுள்ளன. மேலும் சுமார் 800 கன்றுகள் சேவா சங்கங்களுக்கு உதவப் பட்டன.

தென்னங் கன்றுகள், காய்கறி விதைகள், பிற வித்துக்கள், புதிய உழவுக் கருவிகள், உரம், மருந்து முதலிய

பலவற்றிற்குமாகத் தேசிய வளர்ச்சித் திட்டகாலத்தில் இந்த வட்டாரத்தில் 5,182 ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

7 காங்கயம் பொலிக் காளைகளை 5,500 ரூபாய் கொடுத்து வாங்கி யுள்ளனர். இதில் பாதித் தொகையை உழவர் உதவி யாகப்பெற்றனர். பொலிக் காளைகள் வாங்குவோருக்கு ரூபாய் 500 மேனியில் கடன் தரப்பட்டது. முர்ரா எருமைக்கடா ஒன்று இனவிருத்திக்காக இனமாக வழங்கப்பட்டது. இன்னும் பல ஆடுகளும் பிறவும் பதினேரு கிராமங்களில் அளிக்கப்பட்டுள் ளன. அதற்கான ரூபாய் 4,787-ல் பாதித்தொகை உதவித் தொகையாகும். ஆயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபாய் பெறுமான சேவல்களும், பெட்டைக் கோழிகளும் இவ்வாறே வழங்கப்பட்டுள்ளன.

மருதப்பட்டியில் ஒரு முதலுதவி நிலையம் உள்ளது. இடம் மாறும் மருத்துவர் ஒருவர் அங்கங்கே சென்று கால் நடைகளுக்கு மருத்துவம் செய்து வருகிறார்.

52 மைலுக்கு மண்பாதையும் 10 மைலுக்கு கல் பாதையும் போடப்பட்டுள்ளது. பொது மக்கள் உதவியுடன் ரூபாய் 54,000 செலவில் 12 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

46 குடிநீர்க் கிணறுகள் புதிதாகத் தோண்டப்பட்டுள் ளன. பத்து மலக் கழிவிடங்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஆயிரத்து ஐந்நூற்று ஐம்பதடி நீளத்திற்குக் கழிவுநீர்க் கால் வாய் வெட்டப்பட்டது. முந்நூற்று இருபத்தெட்டு குட்டை கள் தூர்க்கப்பட்டன. முப்பத்தேழு சிறுநீர்க் கழிவிடங்கள் அமைக்கப் பட்டுள்ளன. மலக்கழிவுக்கான தொட்டிகள் ஐம்பது கவை (sets) இனமாக வழங்கப்பட்டிருக்கின்றன. இரண்டாயிரத்து நானூறு ரூபாய் செலவில் எட்டு ஊர்களில்



'கூழானாலும் குளித்துக்குடி'

தாழ்த்தப் பட்டோருக்காக குளிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. 4112 வயது வந்தவர்களுக்கும், 425 சிறு பிள்ளைகளுக்கும் ஊசிப்போடப்பட்டது. மூன்று கிராமங்களில் மருத்துவ மனைகள் அமைந்துள்ளன. சின்ன தாராபுரத்தில் ஒரு மருத்துவ விடுதி உள்ளது. மருத்துவத்திற்காக ரூபாய் 42,959 செலவிடப்பட்டுள்ளது.

20 ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப் பட்டிருக்கின்றன. மக்களின் உதவியுடன், பள்ளிக் கட்டிடங்கள் எழுப்புவதற்காக 9 ஊர்களில் 22,000 ரூபாய் செலவாகியது. சின்ன தாராபுரம் இடைநிலைப்பள்ளிக்கு ரூ. 19,350 செலவில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டது. இதில் மக்களின் பங்கு ரூ. 10,680.

14 இடங்களில் சமுதாய நிலையத்திற்கான கட்டிடங்கள் 27,500 ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இதில் ரூ. 13,500 மக்களின் பங்காகும்.

20 இடங்களில் புத்தக நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதற்குச் செலவாகிய பணம் ரூ. 2750. இதில் மக்களின் பங்கு 1,026 ரூபாயாகும். 17 கிராமங்களில் 2,200 ரூபாய் செலவில் சமுதாயக் கல்வி நிலையங்கள் நிறுவப் பட்டுள்ளன. 4,880 ரூபாய் செலவில் 13 இடங்களில் வானொலியைக் கேட்பதற்கான ஏற்பாடுகள் அமைக்கப் பட்டுள்ளன. இச் செல வில் 2,480 ரூபாயை மக்களே மனமுவந்து நல்கினர். 15 இடங்களில் கலை நிகழ்ச்சிகளுக்கு வேண்டிய நிலையங்கள், இசைக்கருவிகளோடும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. 1,800 ரூபாய் இவைகளுக்குச் செலவாகியுள்ளது. இதில் மக்களின் பங்கு ரூ. 300. 2,500 ரூபாய் செலவில் ஐந்திடங்களில் பூங்காக் கள் அமைக்கப் பட்டுள்ளன. சின்ன தாராபுரத்திலும், நம்ப கவண்டனூரிலும் உள்ள நாடக மன்றங்களுக்கு 200 ரூபாய் நன்கொடையாகத் தரப்பட்டது. 1,100 ரூபாய் செலவில் நான்கு இடங்களில் மாதர் நல மன்றம் நிறுவப்பட்டுள்ளது. வெங்கடாபுரத்திலுள்ள நிலையத்திற்கு மாதர் நலத்துறை 500 ரூபாயை உதவியாகக் கொடுத்துள்ளது.

20 இடங்களில் முதியோர் கல்வி நிலையங்கள் திறக்கப் பட்டுள்ளன. சின்னதாராபுரத்தில் கிராமத் தலைவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பல பெரியோர்கள் அங்கு உரை நிகழ்த்தினர். உழவு, கால்நடை வளர்ச்சி முதலியவை பற்றிய உண்மைகளை கிராமத் தலைவர்கள் நன்கு அறிவதற் காக அவர்களை மாநிலத்தின் பலவிடங்களுக்கும் அழைத்துச் சென்று காட்டினர். அதற்காக ரூபாய் 11,654 செலவிடப் பட்டது.

பெரம்பலூர் வட்டாரம்

2—10—1953-ல் தேசிய வளர்ச்சி வட்டாரமாகத் தொடங் கிய இது, 1—4—1955-லிருந்து சமுதாய வளர்ச்சி வட்டார

மாகப் பணியாற்றத் துவங்கியது. இந்த வட்டாரத்தில் நடந்தேறியுள்ள வேலைகளையும் அதற்காகியுள்ள செலவுகளையும் விளக்கமாகக் காணுவோம்.

பன்னிரண்டு டன் விதை வழங்கப்பட்டுள்ளது. விதைப் பண்ணைகளின் கீழ் 3,500 ஏக்கர் நல்ல பயன் பெற்றது. ஆயிரத்து எண்ணூறு ஏக்கரில் தழையுரம் பயிரடப்பட்டது. இருநூறு ஏக்கரில் வரப்புகளிலும், ஐம்பது மைல் நீளத்திற்குப் பாதை யோரத்திலும் தழையுரம் வளர்க்கப்பட்டது. அறுநூற்று அறுபதைந்து டன் ரசாயன உரம் போடப்பட்டுள்ளது. இரண்டாயிரம் டன் மக்கிய உரம் தயாரிக்கப்பட்டுள்ளது. 1,500 எருக்குழிகள் செப்பனிடப்பட்டும், ஐந்நூறு குழிகள் தோண்டப்பட்டும் இருக்கின்றன.

ரசாயன உரமிடுவது, தழையுரம் போடுவது, புதிய கருவிகளைப் பயன்படுத்தி உழுவது ஆகிய முறைகளை அநேக இடங்களில் விளக்கிக் காண்பித்தனர். ஜப்பானிய முறையில் 5,000 ஏக்கரில் நெல்லும், 2,500 ஏக்கரில் தினையும், 1,000 ஏக்கரில் பருத்தியும் பயிரிடப்பட்டது. நூற்று இருபத்தெட்டு புது வகைக் கலப்பைகள், மருந்தடிக்கும் கருவிகள் போன்றவற்றை உழவருக்கு அளித்துள்ளனர். 12,400 ஏக்கர் பயிர் பூச்சிகளுக்கு இரையாகாமல் பாதுகாக்கப் பட்டுள்ளது.

ஐந்நூறு ஏக்கரில் காய்கறிகள் விளைகின்றன. நூற்றைம்பது பவுண்டு காய்கறி விதைகள் விநியோகிக்கப் பட்டுள்ளன. ஆறுயிரத்து இருநூற்று அறுபத்திரண்டு பழச்செடிகளும், நாலாயிரம் தென்னங் கன்றுகளும் நடப்பட்டுள்ளன.

அறுநூற்று ஐம்பது ஏக்கர் களர்நிலம் விளைவுக்கு ஏற்றதாகப் பண்படுத்தப் பட்டுள்ளது. இருநூறு ஏக்கரில் மண்ணின் வளம் பேணப்பட்டுள்ளது.

ஐம்பது தேன்கூடுகள் நாட்டுப் புறத்தார்க்குச் சிறு வருவாய் தரப் பயன்படுகின்றன. ஆயிரத்து ஐந்நூறு ஏக்கரில் பருத்தி விளைவிக்கப்பட்டது. விளைச்சல் போட்டி வைத்துப் பரிசுகள் வழங்கப்பட்டன. வேளாண்மைச் சங்கங்கள் நிறுவப்பட்டுச் சிறப்புடன் இயங்கி வருகின்றன.

இருபது உழவர் அரசாங்கப் பண்ணைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். விளைச்சலை அதிகரிப்பதற்கான புதிய வகைகள் அங்கு அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன. பதின்மூன்று பொருட்காட்சிகள் நடந்தன. நாலாயிரத்து ஐந்நூறு ரூபாய் பெறுமான புதுவகைக் கருவிகள் உழவருக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன.

ஐந்நூறுக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய எல்லா ஊர்களிலும் பள்ளிகள் திறக்கப்பட்டன. கைத்தொழில் கற்பதற்கான கருவிகளும், பிள்ளைகளின் உடலுக்குத் தெம்பூட்டக் கூடிய பால்பொடி, மீன் எண்ணெ, வைடமின் குளுகைகள் முதலியவைகளும் பள்ளிகளுக்குத் தரப்படுகின்றன. மூன்று பள்ளிக்கூடங்கள் பழுது பார்க்கப் பட்டுள்ளன. புதிதாக ஒன்பது கட்டிடங்கள் கட்டப் பட்டுள்ளன. இதற்காகிய செலவு ரூபாய் 26,901.

முப்பத்தைந்து மாலை நேரப் பள்ளிகள் முதியோருக்குக் கல்வியறிவை ஊட்டி வருகின்றன. இருபத்தெட்டு இடங்களில் வானொலியைக் கேட்பதற்கான வசதிகள் செய்துகொடுக்கப் பட்டிருக்கின்றன. முப்பத்தைந்து பொழுதுபோக்கு நிலையங்கள் உள்ளன. இங்குள்ள புத்தக நிலையங்கள், படிப்பகங்கள் ஆகியவை 35. சமுதாயக் கல்வி தருவதற்காக 20 கிராம நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இருபத்திரண்டு படிப்பகங்களும், சமுதாய மன்றங்களும் கட்டப்பட்டுள்ளன.

குட்டநோய் மருந்தகங்கள் பல திறக்கப்பட்டுள்ளன. அறு நூறு பேருக்கு மருத்துவம் பார்க்கப் பட்டுள்ளது. இரண் டாயிரத்து நானூற்று' எண்பத்தாறு ரூபாய் செலவில் மருத் துவமனை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. பதினேழு மலக்கழி விடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 6 மலக்கழி விடங் கள் 3,291 ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. நாலாயி ரத்து எண்ணூறு அடி நீளத்திற்குக் கழிவுநீர்க் கால் [drainage] அமைக்க 49,881 ரூபாய் செலவிடப்பட்டது. தெரு வில் மின்விளக்கிட 5,000 ரூபாய் செலவிடப் பட்டிருக் கிறது. பதினாறு குளிப்பறைகளைக் கட்டி முடிக்க ரூபாய் 5,096 பயன்பட்டது. எழுபத்திரண்டு குப்பைத் தொட்டிகள் 1,080 ரூபாய் செலவில் ஊராட்சி மன்றங்களுக்கு வழங்கப் பட்டன. புதுக்கிணறுகள், பழுது பார்த்தல், தொட்டி தாங்கி கள் ஆகிய வேலைகள் 15 நடைபெற்றுள்ளன. ரூபாய் 18,316 இதற்குச் செலவாகியுள்ளது. ரூபாய் 37,035 செல வில் 43 புதுக் கிணறுகள் தோண்டப் பட்டுள்ளன.

மாலைக்கண் படைத்த 25 பிள்ளைகள் மருத்துவம் பெற் றுள்ளனர்.

ஐம்பத்துநான்கு மைல் நீளத்திற்குப் பாதைகள் போடப் பட்டுள்ளன. இதற்காகிய செலவு ரூபாய் 75,152-ல் பாதி யைப் பொது மக்கள் ஏற்றுக் கொண்டனர். ரூபாய் 19,965 செலவில் எட்டு பாதைகள் போடப்பட்டுள்ளன. பாதைகளை நீரரிக்காமல் காப்பதற்காக எட்டு மதகுகள் ரூபாய் 6,880 செலவில் கட்டப்பட்டன. ரூபாய் 1,100 செலவில் இரு பூங் காக்களை அமைத்துள்ளனர்.

ஆயிரத்து நானூற்று எண்பத்தாறு கால் நடைகளுக்கு மருத்துவம் செய்யப்பட்டது. ஊசிகுத்தப் பட்டவை 7,066 காயடிக்கப்பட்டவை 411. பத்து பொலிகாளைகள் இங்கிருக் கின்றன.

இவ்வட்டாரத்தில் அளிக்கப்பட்ட கடன்பற்றிய விவரம் :

வேளாண்மை வளர்ச்சிக்காக	..	ரூ.	1,63,300
நாட்டுப்புறத்தில் மனைகள் எழுப்ப	..	ரூ.	25,350
தொழில்கள்	..	ரூ.	1,900
			1,90,550

முசிரி வட்டாரம்

தாழ்த்தப்பட்டோருக்காக மூன்று பள்ளிகளும், மற்றும் முப்பத்தெட்டு பள்ளிகளும் இங்கு கட்டப்பட்டு இருக்கின்றன. மேட்டுப்பாளையத்தில் உள்ள இடைநிலைப்பள்ளியைச் செப்பனிட ரூபாய் 10,000 செலவாகியது. பதினெட்டு சமுதாய மன்றங்கள் கட்டப்பட்டன. இவைகளைக் கட்ட ரூபாய் 48,900 செலவாகியது. தலைமைப் புத்தக நிலையம் ஒன்றும், பல படிப்பகங்களும் நிறுவப் பட்டுள்ளன.

தண்ணீர் தாங்கி



ஊருக்கு உழைப்போர்

முப்பத்தாறு ஓராசிரியர் பள்ளிகள் தொடங்கப்பட்டுத் திறம்படச் செயலாற்றி வருகின்றன. இந்த வட்டாரத்திலுள்ள மொத்த ஆரம்பப் பள்ளிகள் 110. மற்றும் 20 சமுதாயக் கல்வி நிலையங்களும், 35 முதியோர் பள்ளிகளும், பதினெட்டு பொழுது போக்கு சங்கங்களும், 29 வானொலி கேட்பதற்கான இடங்களும், 14 சமூகச் சேவைக் கழகங்களும், மூன்று கிராம மகளிர் சங்கங்களும், 20 குழந்தைகளுக்கான பூங்காக்களும், 12 செய்தி தரும் அமைப்புகளும் இந்த வட்டாரத்தில் தோன்றி யுள்ளன. விளையாட்டு, நூற்பு போட்டிகளும், நாடகங்களும் நடந்துள்ளன. புத்தகம், சர்க்கா ஆகியவை வாங்க பண உதவி தரப்படுகிறது.

எழுபத்திரண்டு குடிநீர்க் கிணறுகள் தோண்ட அரசாங்கம் ரூபாய் 60,245 உதவியது. புதிதாகப் பதினாறு மலக் கழிவிடங்கள் அமைந்துள்ளன. கக்கூசுகள் கட்ட நூற்றுப் பதினான்கு பேருக்கு ரூபாய் 1,632 கொடுக்கப்பட்டது. 10,990, அடி நீளத்திற்குக் கழிவு நீர்க்கால் தோண்ட அரசாங்கம் ரூபாய் 19,632 உதவியது. ஐந்தாயிரம் ரூபாய்ச் செலவில் ஐம்புமடையில் ஒரு மருத்துவ மனையும், ரூபாய் 10,000 செலவில் மேட்டுப்பாளை

யத்தில் ஒன்றும் கட்டப் பட்டுள்ளன. இவை யிரண்டுக்கும் மருந்து வாங்குவதற்காக முறையே ரூபாய் 1,500-ம், ரூபாய் 600-ம் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டது. முசிரியிலுள்ள மருத்துவ விடுதிக்கு ரூபாய் 3,000 வழங்கப்பட்டது. கண் மருத்துவத்திற்கு உதவியாக அரசாங்கம் ரூபாய் 600 தந்தது. ஐம்பத்திரண்டு முதலுதவிப் பெட்டிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. டி. புதூரில் ஒரு சுகாதார நிலையமும், மருத்துவ விடுதியும் திறக்கப் பட்டுள்ளன. அறுபதினாயிரம் கிராம மக்களுக்குப் பயன்படும் வகையில் மூடுவண்டி [Van] ஒன்றும் வாங்கப்பட்டுள்ளது. ஆமூரில் கூட்டுறவு மருத்துவ விடுதி ஒன்று தொடங்கப்பட்டது. ரூபாய் 500 பெறுமான குளுகைகள் இங்கு மருத்துவ விடுதி வழங்கப் பட்டுள்ளன.

நடமாடும் மருத்துவ வண்டி



நாற்பத்தாறு கிராமங்களில் விதைக் கிடங்குகள் அமைக்கப் பட்டன. எழுபத்து ஏழாயிரத்து முந்நூற்று இருபத்தாறு பவுண்டு செஸ்பேனியாவும் பிற விதைகளும் அளிக்கப் பட்டன. ஐந்நூற்று அறுபத்தி மூன்று எருக்குழிகள் தோண்டப்பட்டன. இவற்றில் உண்டாக்கப்பட்ட மக்கிய எரு 615 டன். தழையுரமும் ஏராளமாகப் பயிரிடப் பட்டது. 512 டன் ரசாயன உரம் செலவாகியது.

காய்கறி பழ வகைகள் சுமார் 120 ஏக்கரில் விளைவிக்கப் பட்டன. 112 ஏக்கரில் பருத்தி விளைவிக்கப்பட்டது. 3,367 பவுண்டு பருத்திக் கொட்டை வித்துக்காக வழங்கப்பட்டிருக்கிறது. 20 மாதிரிப்பண்ணைகள் அமைக்கப் பட்டுள்ளன. ரூ 27,025 தக்காவிக் கடனாகத் தரப்பட்டுள்ளது. எரு விடுவதற்கெனப் பணம் தரும் திட்டத்தின் கீழ் 5,000 ரூபாய் கடனாகத் தரப்பட்டுள்ளது. ஜப்பானிய முறையில் 27,500 ஏக்கர் பயிரிடப்பட்டது. அதன் பயனாக விளைச்சலில் நூற்றுக்குச் சுமார் 20 பங்கு அதிகரித்திருக்கிறது.

தேன் கூடுகள் 22-ம், மருந்தடிக்கும் கருவிகள் 7-ம் தரப்பட்டன. 14 கலப்பைகளும், 7 கவலைகளும் மூன்றில் ஒரு பங்கு விலைக்கு விற்கப்பட்டன. 414 தென்னங் கன்றுகள் பாதி விலைக்கும், 360 தென்னங் கன்றுகள் இனாமாக வும் வழங்கப்பட்டன. 3,338 ஏக்கர் நஞ்சை நில வரப்பு களில் செஸ்பேனியா நடப்பட்டது. பயிரை வளர்க்கும் முறை பற்றிய விளக்கங்கள் பொருட்காட்சிகள், மூலமும் படக் காட்சிகள் மூலமும் செய்யப்பட்டன.

இடம் மாறிக்கொண்டே இருக்கும் கால்நடை மருத்துவ சாலைகள் நான்கு உள்ளன. 21 பொலி காளைகளும், 1,000 மீன்குஞ்சுகளும், மற்றும் பிறஜாதிக் கோழிகள், பறவைகள் முதலியனவும், ஒரு ஆட்டுக்கிடாயும் கால்நடைச் செல்வத்தைப் பேண உள்ளன. 39கோழிப்பண்ணைகள் இங்கு இருக்கின்றன.



சுகாதார முறைப்படி அமைந்த குடி நீர்க் கிணறு

13,647 கால்நடைகளுக்கு மருத்துவமும், 2,650 காளைகளுக்கு காயடித்தலும் நடைபெற்றுள்ளன. இரு கால்நடைக் கண் காட்சிகள் நடந்தன.

குடிநீர் வசதி செய்வதற்காக 60,245 ரூபாய் செலவாகி யுள்ளது. இன்னும் பல துறைகளிலும் ஆகியுள்ள செல வின் விவரம் வருமாறு:

	ரூபாய்.
நிர்வாகம்	95,855
பள்ளிகள், பாதைகள், பொதுச் சுகாதாரம் முதலியவற்றிற்காக உதவித் தொகை	1,58,842
சமுதாயக் கல்வி	11,393
உதவி	14,398
நீர்ப்பாசனத்தைப் பெருக்கக் கடன்	45,250
குறைந்த காலக் கடன்	2,41,195
மொத்தம் ..	5,66,933

புதுக்கோட்டை வட்டாரம்

1954-ஆம் ஆண்டு அக்டோபர்மீ 2ஆந் தேதி யிலிருந்து இந்த வட்டாரம் வேலைசெய்யத் தொடங்கியது.

457 எருக்குழிகள் மூலம் மக்கிய உரம் தயாரிக்கப்பட்டது. 4,874 மணங்கு ரசாயன உரம் பயன்படுத்தப்பட்டது. மொத்தம் 131 மணங்கு பொறுக்கு விதை, நெல்லுக்கும் பருத்திக்குமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. 135 பழ மரங்கள் நடப் பட்டுள்ளன. 20 ஏக்கரில் காய் கறி பயிரிடப்பட்டது. 11,867 மரங்கள் வளர்க்கப்பட்டன. 101 ஏக்கரில் தழையுரம் உண்டாக்கப்பட்டது. 4 புது முறை உழவுக் கருவிகள் வழங்கப் பட்டன. 126 பகுதிகளில் குடியானவருக்கு உழவு முறை விளக்கப் பட்டிருக்கிறது. 3 ஏக்கர் களர் நிலம் பயிரிடத் தக்க தாக ஆக்கப்பட்டது. 60 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

135 கால்நடைகளுக்குக் காயடிக்கப்பட்டது. 2635-க்கு ஊசி போடப்பட்டது. 42 சாதிப் பறவைகளும், 12 சாதிக் கால் நடைகளும் இனவிருத்திக்காகத் தரப்பட்டுள்ளன. 392 கால்நடைகள் மருத்துவம் பெற்றன. 2,000 மீன் குஞ்சுகள் வளர்ப்புக்காக வழங்கப் பட்டிருக்கின்றன.

வடவளம், செம்பத்தூர் ஆகிய ஊர்களில் தெருக்களுக்கு மின் விளக்குகள் போடப்பட்டன. 20 மருத்துவ நிலையங்களுக்கு மருந்து வாங்கி அளிக்கப்பட்டது. மலக்கழி விடங்கள் அமைப்பதற்காக 21 கழிவு நீர்த் தொட்டிகள் வழங்கப் பட்டன. மூன்று ஒதுக்கிடக் குழிகள் [Soakage Pits] தோண்ண்டப்பட்டன. தலைமைச் சுகாதார நிலையம் ஒன்றும், அதற்கு மூன்று கிளை நிலையங்களும் இருக்கின்றன.

36 ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டன. 7 பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. மேலும் 39 கட்டிடங்கள் எழும்பி வருகின்றன. ஏழைப் பிள்ளைகளுக்கு எழுது பலகைகள், எழுது கோல்கள் முதலியனவாங்க ரூ. 420

செலவாகியது. இங்குள்ள முதியோர் கல்வி நிலையங்கள் 25. இவைகளில் பயிற்சிபெற்று வருவோர். 725 பேர்

22 மைல் நீளத்திற்குக் கச்சாபாதை போடப்பட்டுள்ளது. 11 மதகுகள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

கைத்தறி வாரத்தில் 500 ரூபாய் பெறுமான கைத்தறித் துணிகள் தாழ்த்தப்பட்டோருக்கு உதவப் பட்டுள்ளன.

வெள்ளியானை வட்டாரம்

1-10-55ல் தான் இந்த வட்டாரம் தொடங்கப்பட்டது. எனவே முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் சில மாதங்களே இது வேலை செய்துள்ளது.

19 எக்கர் விதைப் பண்ணைக்காக ஒதுக்கப்பட்டது. 40,008 பவுண்டு நெல், தினை முதலியவை விதைக்காக கொடுக்கப் பட்டன. 1,726 எக்கரில் செஸ்பேனியா பயிரிடப்பட்டது. 20 எக்கரில் பிற தழையுரம் உண்டாக்கப் பட்டது. எருவுக்குப் பயன்படும் தழை தரும் மரங்கள் 1700-ம், மற்றும் அதற்கான விதைகளும் நிரம்பப் பயிரிடப்பட்டுள்ளன. எவ்வாறு ரசாயன உரமிடுவது என்பது பற்றிச் சுமார் 60 இடங்களில் விளக்கிக் காண்பிக்கப் பட்டது. 138 டன் ரசாயன உரம் அளிக்கப்பட்டு இருக்கிறது. 470 டன் மக்கிய எரு தயாரிக்கப் பட்டுள்ளது. ஜப்பானிய முறையில் 2,025 எக்கரில் நெல்லும், 320 எக்கரில் பருத்தியும், 10 எக்கரில் கரும்பும் பயிரிடப்பட்டது. 60 பழ மரங்கள் நடப்பட்டுள்ளன. 140 எக்கர் நிலம் யந்திரக் கலப்பையால் உழவு பெற்றது. விளைச்சல் போட்டியும் வைக்கப் பட்டது. தீவிர எருவிடும் திட்டத்தின் (intensive manuring scheme) கீழ் 8260 ரூபாய் கடனாகத் தரப்பட்டுள்ளது.

3 காங்கயம் எருதுகளும், 9 ஆட்டுக் கடாய்களும், 50 கன்னிவெடைகளும் வழங்கப்பட்டன. 37 கால்நடைகளுக்கு மருத்துவம் செய்யப்பட்டது. காயடிக்கப்பட்டவை 18 ; ஊசி போடப்பட்டவை 167.



செய்தி அலைகளை எதிர் நோக்கி .....

11 ஓராசிரியர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. 20 சமுதாயக் கல்வி நிலையங்கள் பணி புரிகின்றன. 5,955 ரூபாய் செலவில் மூன்று பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டு உள்ளன. 10 பள்ளிகளுக்குத் தேவையான சாமான்கள் வாங்க 1,912 ரூபாய் செலவாகியது. நான்கு இடங்களில் புத்தக நிலையங்கள் திறக்கப்பட்டன. அதற்கான செலவு ரூ. 600. குழந்தைகளுக்கான நான்கு பூங்காக்கள் 1,166 ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளன. சமூகமேடைகள் நான்கும், சமுதாய மன்றங்கள் மூன்றும் உள்ளன. முறையே ரூ. 600-ம், ரூ. 4,300 இவற்றிற்குச் செலவாகியுள்ளது. ஆறு இடங்களில் வானொலியைக் கேட்பதற்கான வசதிகள் செய்ய 1,740 ரூபாய் செலவிடப்பட்டது.

குடிநீர் வசதிக்காக ரூ. 6,177 செலவாயிற்று. கிராமத்திற்கு இரண்டு மேனியில் சுகாதார நிலையங்களை நிறுவி அங்கு வைடமின் குளுகைகளை விநியோகிக்கின்றனர். 1,213 ரூபாய் இதற்கு ஆகியுள்ளது. பாதையில் பள்ளமாகக் கிடந்த இரண்டு இடங்களை ஒழுங்குபடுத்த 450 ரூபாய் செலவாகியது.

தாழ்வு... நீங்க!

" சாதிக் கொடுமைகள் வேண்டாம் ;—அன்பு
தன்னில் செழித்திடும் வையம் ;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம் ;—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம் ".

—பாரதியார்.

தாழ்வு...

நீங்க!

மனிதனை மனிதன் பார்க்கக் கூசுவதும், பட்டால் தீட்டென்று விலகி ஓடுவதும் இந்த நாட்டிலே வேரூன்றி இருந்த ஒரு பழக்கமாகும். இது நமது நாட்டு வரலாறு தோன்றிய காலத்திலேயே தோன்றிய ஒரு கொடிய வழக்கம் எனலாம். மனித இனத்தைச் சேர்ந்த ஒரு பகுதியைத் தாம் இழிவு படுத்துவதன் மூலம் மனிதர் தம்மைத்தாமே அவமதித்துக்கொண்டனர். எல்லா நாடுகளிலும் இத்தகைய கொடுமை பெரும்பாலும் பலவேறு வடிவங்களில் இருந்து வந்திருக்கிறது. இன்னும் சில நாடுகளில் இருந்து வருகிறது.

நமது நாட்டில் அரசியல் புரட்சியைத் தோற்றுவித்த நல்லறிவாளர்களின் கண்களில் இக்கொடுமை பட்டது. இப்புலை வழக்கத்தை ஒழித்துச் சமுதாயத்தைச் சீர்ப்படுத்தி னலன்றி, நல்ல ஆட்சி நிறுவுதல் இயலாது என்பதையறிந்து, தீண்டாமை ஒழிப்பைத் தமது அன்றைய முக்கிய போராட்டங்களுள் ஒன்ருகக் கொண்டனர். அண்ணல் காந்தி யடிகள் இக்கொடுமையை நினைந்து சிந்திய கண்ணீரையும், பட்ட இடர்களையும் உலகம் அறியும். தீண்டப்படாத அம்மக்களை

"அரியின் மக்கள்" என்று அழைத்து, நாட்டிலே அவ்வாறே பேசவும் தொடங்கினார். பல இடுக்கண்களுக்கு இடையே அம்மக்களோடு கலந்து உறவாடினார். அவர்களைத் தம் சுற்றத்தினும் மேலாகக்கொண்டு அல்லும் பகலும் உழைத்தார். காந்தியென்னும் அந்த எழுஞாயிறு கண்டு, மூடு பனி ஓடி ஒளிந்தது. மக்கள்மனம் விரைவாக மாறத் தலைப்பட்டது. இன்றோ சட்டத்தின் மூலமே தீண்டாமை தடை செய்யப்பட்டு விட்டது. மக்கள் எல்லோரும் உரிமை வாழ்வு பெற்று இன்புறுகிறோம்.

இந்திய அரசும் மாநில அரசாங்கங்களும், ஒருமனதோடு தாழ்த்தப்பட்டோரின் நலத்துக்கான திட்டங்களைத் தீட்டுவதில்

அறிவுக் கதிர் பரவ ....



முனைந்து நின்றன. தாழ்த்தப்பட்ட மக்களின் இன்னல் களுக்கெல்லாம் மூலகாரணம் என்று சொல்லத்தகுவது, அவர்களின் பொருளாதாரப் பிற்போக்கே. பொருள் இல் லாதவர்க்கு இந்த உலகில் இடமில்லையென்ற பெரிய உண் மையினை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே வள்ளு வர் சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஏதோதோ மாறுபாடு போல மேலாகத் தோன்றுவதை யெல்லாம், துருவிப்பார்த் தால், அவை பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் விளைவே என்பது நன்றாகப் புலனாகும். எனவே தாழ்த்தப்பட்டோரின் வாழ்க்கை நிலை உயருவதற்கான எல்லா முறைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

முதல் ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் தாழ்த்தப்பட்டோ ரின் நிலையை உயர்த்த 440 லட்சம் ரூபாய் நமது மாநிலத் தில் செலவிடப்பட்டது. இருப்பிட வசதிகள், கல்வி வசதி, குடிநீர், போக்குவரத்து முதலிய பலவற்றிற்குமாக இப்பொ ருள் செலவிடப்பட்டது. சிறப்பாக அறிவுத்துறையில் பெருங் கவனம் செலுத்தப்பட்டது. 117 பள்ளிகள் தாழ்த்தப்பட் டோருக் கெனவே நிறுவப்பட்டுள்ளன. அரிமக்களின்—ஹரி ஜனங்களின்—சிறுவருக்குத் தங்கிப்படிக்க இடம், உண்ண உணவு, உடுக்க உடை முதலியவைகளும் உதவப்படுகின்றன. புத்தகம் முதற்கொண்டு யாவும் அரசாங்கத்தால் அவர்க ளுக்கு அளிக்கப்படுகிறது.

அவர்கள் மற்ற உயர் குடும்பப் பிள்ளைகளிடமிருந்து பிரிந்து வாழ்வதைக் காட்டிலும், அவர்களோடு கலந்து வாழ்வது கள்ளமறியாச் சிறுவரிடையே ஒரு நல்ல கூட்டுறவை உண் டாக்கும். தாழ்மையகலப் பெரிதும் அது துணைபுரியுமாத லின், பொதுப் பள்ளிகளிலேயே தாழ்த்தப்பட்ட பிள்ளைகளுக் கும் கற்பதற்கு வேண்டிய எல்லா வாய்ப்புகளும் தரப்படு கின்றன. அரசாங்கக் கல்லூரிகளில் நூற்றுக்கு 16 இடம்

தாழ்த்தப்பட்டோரின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்காக இருக்கும். தகுதியிருந்து சேருவதானல் அதற்குமேலும் சேரலாம். அவர்களுக்கெனவே ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் மட்டும் பதினறு.

திருச்சி மாவட்டத்தில் இத்துறையில் நிறைவேறியுள்ள பணிகளைத் தெளிவாகக் காணுவோம். ஐந்தாண்டில் நிறைவேறிய பல வேலைகளையும் ஆண்டுவாரியாகக் கூறிச் செல்லுவோம். கல்வி, சுகாதாரம், பொருளாதார வாய்ப்புகளைப் பெருக்குதல் எனப் பல முறையிலே திட்டம் செயல்பட்டது.

1951-52

திட்டத்தின் தொடக்க ஆண்டில் இம்மாவட்டத்தில் தாழ்த்தப்பட்டோருக்கென 13 பள்ளிகள் இருந்தன. மேலும் ஒரு பள்ளி இவ்வாண்டின் இறுதியில் கட்டப்பட்டது. தொடக்கத்தில் 285 ஆக இருந்த ஆசிரியர் எண்ணிக்கை, பின்னர் 312-ஆக உயர்ந்தது. 6,280 மாணவரும் 2,835 மாணவியரும் பள்ளிகளில் பயின்றனர். தாழ்த்தப்பட்டோர் அல்லாத மாணவரும் சிறு தொகையினராக இப்பள்ளிகளில் இருந்தனர். மாணவருக்கு நடுப்பகல் உணவு அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. அதற்காக 1,74,872 ரூபாய் இந்த ஒரு ஆண்டில் மட்டும் செலவாகியுள்ளது.

2,442 ரூபாய் செலவில் ஐந்து பள்ளிக்கூடங்கள் பழுது பார்க்கப் பட்டுள்ளன. பிரகம்பியிலுள்ள கிராமப் பள்ளிக் கட்டிடம் ஒன்று புதிதாகக் கட்டப்பட்டதாகும். அதற்காகிய செலவு ரூ. 1,678. மேலும் ஓதல் உதவி [Scholarship] தருவதற்காக 56,784 ரூபாய் இவ்வாண்டில் ஒதுக்கப்பட்டது. பரிசுகள் வழங்குவதற்கு 440 ரூபாயும், உடுப்புகள் நல்குவதற்கு 374 ரூபாயும், தேர்வுக் கட்டணத்திற்கு 1,347 ரூபாயும் போக எஞ்சிய பணம், 918 மாணவர்களுக்கு உதவப் பட்டுள்ளது.

இவைபோக உணவு விடுதிகளுக்கெனத் தனியே பணம் செலவிடப்பட்டது. இவ்வாண்டில் உதவிபெற்ற மாணவரில்லங்கள் பதின்மூன்று இருந்தன. பிற்பட்ட வகுப்பு மாணவரும் அங்கிருந்தனர். எல்லோருக்குமாகச்சேர்த்து 50,755 ரூபாயை இவ்வில்லங்கள் உதவித் தொகையாகப் பெற்றுள்ளன. உதவிபெறும் மாணவியர் இல்லம் ஒன்று தான் உள்ளது.

முதல் மூன்று வகுப்புகளிலுள்ள ஏழை அரிஜனப் பிள்ளைகளுக்கு உடுப்புகள் இனாமாக வழங்கப்பட்டன. 374 ரூபாய் இதற்குச் செலவாகியது.

அரியின்மக்கள் வாழ் இடம்



4 குடிநீர்க் கிணறுகள் புதிதாகத் தோண்டப்பட்டன. 8,669 ரூபாய் இதற்குச் செலவாகியது. ஒன்பது பழைய ஊருணிகளைப் புதுப்பிக்க 4,581 ரூபாய் செலவிடப்பட்டது. அதிராபாளையம், செம்பட்டு ஆகிய இடங்களிலுள்ள விளையாட்டிடங்களுக்கு வேலியிட முறையே ரூ. 700-ம், ரூ. 900 மும் செலவாகியுள்ளது.

1952-53

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் இர்ண்டாவது ஆண்டில் 132 அரிஜனப் பள்ளிகள் இங்கு நடத்தப்பட்டன. இவற்றில் 7,252 மாணவர்களும் 3,217 மாணவிகளும் பயின்று வந்தனர். பிள்ளைகளுக்கு நடுப்பகல் உணவுக்ர்கச் செலவாகிய தொகை ரூ. 2,08,700. மூன்று பள்ளிக்கட்டிடங்கள் இவ்வாண்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. 14 பள்ளிக்கூடங்கள் பழுது பார்க்கப் பட்டுள்ளன. இந்த வகையில் 14,780 ரூபாய் செலவழிந்துள்ளது.

ஓதல் உதவிக்காக [Scholarship] வழங்கப்பட்ட தொகை ரூ. 34,863. தேர்வுக் கட்டணமாக அளிக்கப்பட்ட தொகை ரூ. 1,131. பள்ளிச் சம்பளத்திற்கும் துணிவாங்குவதற்குமாகத் தரப்பட்ட தொகை ரூ. 500. பரிசு வழங்கும் வகையில் 1,307 ரூபாய் செலவாகியது.

மானியம் பெற்று 11 மாணவர் இல்லங்கள் இம்மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. தாழ்த்தப்பட்ட இன மாணவர்களுக்காக ரூ. 51,779-ம், பிற்பட்ட வகுப்பினரின் பிள்ளைகளுக்காக ரூ. 2,519-ம் இந்த ஆண்டில் மானியமாகத் தரப்பட்டுள்ளது.

திருச்சியில் அரிஜன மாணவியருக்கெனத் தனியே ஒரு விடுதியை அரசாங்கம் நடத்துகின்றது. இவ்வாண்டில் அங்கிருந்த பெண்கள் 28 பேர். 5,368 ரூபாய் இவ்விடுதிக்கு இந்த ஆண்டில் செலவாகியுள்ளது.

இவ்வாண்டிலும் 500 ரூபாய்க்கு அரிஜனப் பிள்ளைகளுக்குத் துணி வாங்கித் தரப்பட்டுள்ளது.

பதினெட்டு கிணறுகள் ரூ. 25,170 செலவில் பழுதுபார்க்கப் பட்டுள்ளன. குப்பம், மேலப்பாளையம், காருடியாம்பாளையம் ஆகிய இடங்களில் விளையாட்டு இடம் அமைக்க முறையே ரூ. 1,070-ம், ரூ. 1,610-ம், ரூ. 1,420-ம் செலவிடப்பட்டன.

தாழ்த்தப்பட்டோர் நலக்குழு [அரிஜன நலக் கமிட்டி] இவ்வாண்டிலும் ஒன்பது தடவை கூடி, பல நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1953–54

1953–54-ஆம் ஆண்டின் சாதனைகளைக் காணுவோம். மலை யாளப்பட்டியில் மாவட்ட ஆட்சி மன்றத்தின் கீழிருந்த பள்ளி யையும் சேர்த்து 133 அரிஜனப் பள்ளிகள் இருந்தன. 7,370 மாணவர்களும், 3,942 மாணவிகளும் இவற்றில் கற்று வந்தனர். அம் மாணவர்களுக்கு நடுப்பகல் உணவு அளிப் தற்காக ஆகியுள்ள செலவு ரூ. 1,28,334.

பள்ளிக்கூடங்களைப் பழுது பார்ப்பதற்காக 2,130 ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. 4,250 ரூபாய் செலவில், பொய் கைப்பட்டியில், புதிதாக ஒரு பள்ளிக்கட்டிடம் கட்டப் பட்டுள் ளது.

தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், பிற்பட்ட வகுப்பினரின் பிள்ளைகளுக்கும் ஒவ்வோராண்டும் போலவே இந்த ஆண்டிலும் ஓதல் உதவி [Scholarship] தரப்பட்டது. சுமார் ஒரு லட்சம் ரூபாய் இதற்காக வழங்கப்பட்டுள்ளது. தேர்வுக் கட்டணத்திற்கென அளிக்கப்பட்ட தொகை ரூ. 1,240. துணி மணிகள், பரிசுகள் ஆகியவை பிள்ளைகளுக்கு வழங்கப்

பட்டன. சுமார் 1,500 ரூபாய் இவ்வகையில் செலவிடப்பட்டுள்ளது. உணவு இல்லங்களுக்கு இவ்வாண்டில் சுமார் பத்தாயிரம் ரூபாய் செலவழிந்துள்ளது.

திருச்சியிலுள்ள அரசாங்கத்தைச் சேர்ந்த பெண்கள் இல்லத்தில் 30 பேர் இருந்தனர். இதன் செலவுகளுக்குச் சுமார் 7,645 ரூபாய் வரையில் இவ்வாண்டில் தேவைப்பட்டது.

17 குடிநீர்க் கிணறுகள் செப்பனிடப்பட்டு உள்ளன. அதற்கான செலவு ரூ. 17,140. முசிரி வட்டத்தைச் சேர்ந்த சிவசமுத்திரம் வாய்க்காலுக்குக் குறுக்கே ரூ. 3,817 செலவில் ஒரு சிறிய பாலம் அமைக்கப்பட்டது. ரெட்டிமாங்குடி அகரம் ஆகிய இடங்களில், விளையாட்டு இடங்களுக்காக முறையே ரூ. 1,670-ம், ரூ. 1,680-ம் செலவாகியுள்ளது.

தீண்டாமை ஒழிப்பிற்கான முயற்சிகளில் இம் மாவட்டம் நல்ல வளர்ச்சியுற்றது. இந்திய அரசின் உதவியுடன் 33 கிராமங்களில் சமுதாய மேடைகள் இவ்வாண்டில் அமைக்கப்பட்டுள்ளன. 12,475 ரூபாய் இதற்காகச் செலவிடப்பட்டது. மாங்கோட்டை கிராமத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு சுடுகாட்டு நிலம் வாங்குவதற்கென 109 ரூபாய் தரப்பட்டது.

பிற்போக்கு வகுப்பினராகிய 14 மலையாளிகளுக்கு, கல்வி நடுப்பகல் உணவு முதலியவற்றிற்கான வசதி செய்து தரப்பட்டுள்ளது.

1954–55

1954–55 ஆம் ஆண்டில் நிறைவேறிய பணிகளைக் காணுவோம். இவ்வாண்டில் தாழ்த்தப்பட்டோருக்கான பள்ளிகளின் எண்ணிக்கை 135 ஆக உயர்ந்தது. 7,545 மாணவர்களும், 3,986 மாணவிகளும் கல்வி கற்கும் வசதிகளைப் பெற்றனர். பாய்பின்னும் முறைகளைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்டார். நடுப்பகல்



குடிநீர் வசதி

உணவுக்கு இவ்வாண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ. 21,165. புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், பழையவற்றையே செப்பனிடுவதற்குமாக ஆகியுள்ள செலவு ரூ. 11,814.

ஓதல் உதவிக்காக இவ்வாண்டில் 67,327 ரூபாய் செலவிடப் பட்டிருக்கிறது. தேர்வுக் கட்டணத்திற்கும், பரிசுகள் வழங்கு வதற்குமாக 1,300 ரூபாய் அளிக்கப் பட்டிருக்கிறது. புத்த கங்கள் வாங்குவதற்காக 895 ரூபாய் வழங்கப்பட்டது.

ஏற்கனவே இருந்த 13 மாணவரில்லங்களோடு இன் னும் இரண்டு இல்லங்கள் இவ்வாண்டில் புதிதாகத் திறக் கப்பட்டன. இவை யாவுமாகச் சேர்ந்து இவ்வாண்டில் பெற்ற தொகை ரூ. 67,646. திருச்சியிலுள்ள பெண்கள் இல்லம் சிறப்புடன் நடந்து வந்தது. 7,261 ரூபாய் இந்த ஆண் டில் அதற்குச் செலவாகியுள்ளது.

பதினேரு ஊருணிகள் பழுது பார்க்கப் பட்டுள்ளன 1,388 ரூபாய் இதற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

புரத்தாகுடி, பாடாலூர், பெரம்பலூர், அன்னவாசல் முதலான இடங்களில் விளையாட்டு இடங்கள் அமைப்பதற்காக 5,500 ரூபாய் செலவாகியுள்ளது.

தாழ்த்தப்பட்டோர் நலக்குழு கலெக்டர் தலைமையில் இவ்வாண்டில் மூன்றுமுறை கூடி, தாழ்த்தப்பட்டோரின் நல்வாழ்வுக்கான பலவற்றைப் பற்றியும் ஆராய்ந்தது.

மலையாளப்பட்டியில், மாவட்ட ஆட்சி மன்றத்தின் கீழிருந்த பள்ளி, தாழ்த்தப்பட்டோர் நலத்துறையினுல் எடுத்துக்கொள்ளப்பட்டமையின், அங்குள்ள மலையாளிப் பிள்ளைகள் நடுப்பகல் உணவை அரசாங்கத்தின் செலவில் பெறுகின்றனர்.

1955-56

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டை எட்டிப் பிடித்துவிட்டோம். இவ்வாண்டில் பள்ளிகளின் எண்ணிக்கை 136 ஆக மாறியது. மாணவிகளின் எண்ணிக்கை 4,068 ஆக உயர்ந்தது. பள்ளிப் பிள்ளைகளுக்கு நடுப்பகல் உணவு அளிக்கும் வகையில் செலவாகியுள்ள பணம் ரூ. 2,070,95.

சிறுகளூர், பெருவளநல்லூர் ஆகிய இடங்களில் 9,600 ரூபாய்ச் செலவில் பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. தேசிய விரிவுத் திட்டத்தின்கீழ் மகாதேவி, நெய்குப்பை, மலையாளப்பட்டி, சிக்கத்தம்பூர் பாளையம் ஆகிய இடங்களிலும் பள்ளிக்களுக்கான கூடங்கள் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.

தாழ்த்தப்பட்டோரும், பிற்பட்ட வகுப்பினருமாக 1,985 பேர் ஓதல் உதவி பெற்றனர். 41,676 ரூபாய் அவர்

களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மற்றும் 1,217 ரூபாய், புத்த கங்கள் வாங்கிக் கொள்ளுவதற்காக 152 மாணவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

3 புதிய மாணவர் இல்லங்கள் திறக்கப்பட்டன. தாழ்த் தப்பட்ட மாணவர்களுக்காக ரூ. 84,897-ம், பிற்பட்ட வகுப் பின மாணவர்களுக்காக ரூ.25,513-ம் இந்த ஆண்டில் நல்கப்பட்ட உதவிப் பணமாகும். இதன் மூலம் 568 தாழ்த்தப்பட்டோரின் பிள்ளைகளும், 178 பிற்பட்டோரின் பிள்ளைகளும் நன்மை உற்றனர். திருச்சியிலுள்ள பெண் டிர் இல்லத்திற்கு இவ்வாண்டில் 6,604 ரூபாய் செலவாகி உள்ளது.

54 சேரிகளில் ஊருணிகள் பழுது பார்க்கப் பட்டுள்ளன. இதற்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 31,153. திருச்சி வட்டத்தில் 11 கிணறுகளும், லால்குடி வட்டத்தில் பத்தும், பெரம்பலூர் வட்டத்தில் பன்னிரண்டும், கரூர் வட்டத்தில் பதினைன்கும், குளித்தலை வட்டத்தில் நான்கும், முசிறி வட்டத்தில் மூன்றும் பழுது பார்க்கப் பட்டுள்ளன. மேலும் திருச்சி வட்டத்தில் நான்கும், குளித்தலை வட்டத்தில் இரண்டும், கரூர் சமுதாய வளர்ச்சித் திட்டதின் கீழுள்ள கிராமங்களில் ஆறும் ஆக 12 குளிப்பறைகள் கட்டப்பட்டு இருக்கின்றமை மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். தாழ்த்தப்பட்டோருக்கென இந்த ஆண்டில் கட்டப்பட்டுள்ள இவைகளுக்கு ஆகியுள்ள செலவு 2,821 ரூபாய் ஆகும்.

தீண்டாமை ஒழிப்பு பிரசாரத்திற்கெனவே சில அதிகாரி கள் நியமிக்கப் பட்டுள்ளனர். சுமார் 5,000 ரூபாய்க்கு மேலாக இவ்வகையில் செலவிடப்பட்டுள்ளது.

குற்ற பரம்பரையினரின் முன்னேற்றத்திற்கான சீரிய பல முயற்சிகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன. மூன்று

மாணவர் இல்லங்கள் அவர்கள் நலனுக்காக அரசாங்கத்தால் நடத்தப்பட்டன. புதுக்கோட்டையில் ஒன்றும், திருச்சியில் இரண்டும் உள்ளன. திருச்சியிலுள்ள இரு இல்லங்களில் ஒன்று பெண்டிருக்காகத் தனியே உள்ளதாகும். இந்த இல்லங்கள் யாவும் 1956-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஏற்படுத்தப்பட்டவையே. 6,300 ரூபாய் வரையில் இவைகளுக்காகச் செலவழிக்கப் பட்டுள்ளது. ராம்ஜி நகர், திருவரம்பூர் ஆகிய இடங்களில் இவ்வில்லங்களில் உள்ள மாணவர்களுக்காகப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. 465 ரூபாய் அதற்காகச் செலவிடப்பட்டது.

புதுக்கோட்டைப் பகுதியில், வண்டி மாடு கலப்பை முதலியன வாங்குவதற்காகக் குற்ற பரம்பரையினருக்கு 6,700 ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. மற்றும் குறவர் தங்கி வாழ்வதற்கேற்ற மனைகள் எழுப்பும் வகையில் ரூ. 10,000 ஒதுக்கப்பட்டு உள்ளது. திருச்சி வட்டத்திலும் இவ்வாறே இவர்கள் உதவி பெறுகின்றனர். உதவியில் பாதி கடனாக அளிக்கப்படுகின்றது. பெண்களுக்கு ஆடைகள் வாங்கித் தருவதற்காக 480 ரூபாய் ஒதுக்கப்பட்டது. இவர்களுக்குக் கைத்தறி நெசவுக்கான கருவிகளும் வாங்கி வழங்கப்படுகின்றன. இதற்காக ரூபாய் 680 ஒதுக்கப்பட்டுள்ளது.

அதவத்தூரில் வண்டி மாடு கலப்பை இவை வாங்க ரூ. 2,000 ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டு வருகிறது. ராம்ஜி நகரிலும் 3,000 ரூபாய் செலவில் இத்தகைய முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இங்கும் அதவத்தூரிலும் ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளில் பாதிப் பணம் கடனாகக் கொள்ளப்படும். இவ்வகுப்பு மாணவர் ஒருவர் 250 ரூபாய் செலவில் கைத்தொழில் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பிற்பட்ட வகுப்பினருக்காக இருக்கின்ற மலையாளப்பட்டி பள்ளிக்காக 2,540 ரூபாய் செலவாகியுள்ளது. 1,865 ரூபாய் செலவில் 3 மலையாளி மாணுக்கர் வீார்தாக் கல்விப் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் மலையாளிப் பிள்ளைகளுக்கு வேண்டிய உடை, புத்தகம், எழுதுபலகை முதலியவை வாங்க 1,010 ரூபாய் செலவழிந்துள்ளது.

ஐந்தாண்டிலும் நிகழ்ந்துள்ள ஆக்கப்பணிகளை விளக்க மாகக் கூறினேம். இத்தகைய பணிகளின் விளைவாகத் தாழ்த்தப்பட்டோரின் நிலை படிப்படியே உயர்ந்து வருகின்றது. தாழ்த்தப்பட்டோர் நலத்திற்கென ஒவ்வொரு மாதக்கடைசி யிலும் கொண்டாடப்பட்டு வரும் விழாக்கள், மக்களின் மனதிலிருக்கும் சாதிப்பகைமையை அகற்றுவதற்குப் பெரி தும் துணைபுரிகின்றன. அரசாங்க அலுவலாளர்கள் முன் னின்று இவ்விழாக்களை நடத்துவர். தாழ்த்தப்பட்டோரை கோயில்களுக்கு அழைத்துச் செல்லுதல், உணவு விடுதி களுக்கு இட்டுச் செல்லுதல் முதலிய செயல்கள் அன்று நடைபெறும். நிலை படிப்படியே மாறி அவர்களும் இந் நாட்டு மன்னராக விளங்கும் பொன்னுள் விரைவிலே மலருவதாக !

—×—

அமைதி...
நிலைவ!

" ஆற்ற நல்லறம் அல்லது இலாமையால்
ஏற்றம் அன்றி இழித்தகவு இல்லையே"

—கம்பராமாயணம்.

அமைதி . . .
நிலவ !

அமைதி என்பது துறவிக்கு மட்டும் வேண்டிய ஒரு மன நிலை அல்ல. ஆரவாரத்திலேயே எந்நேரமும் மூழ்கிக் கிடக்கும் மனிதனுக்கும் சிறிது நேரமாவது அமைதி தேவைப் படத்தான் செய்கின்றது. அதுவும் இன்றைய உலகச் சூழ் நிலையில் ஒவ்வொரு மனிதனும் அமைதிக்காகத் தவங் கிடக்கிறான் என்று சொல்லலாம்.

இந்திய நாடு என்றுமே அமைதியை விரும்பிய நாடு. அக அமைதியிலே மேலோங்கிய அதன் புறத்திலும் இன்று அமைதி காணப்படுகின்றது. நிலம் கொழித்து, நீர் பெருகி, நலஞ் சிறந்து, நாடு உயர்ந்து எங்கும் அமைதி தவழ் கிறது. இந்தச் சூழலில் தொழில் வளம்பெற்று வரு கிறது. தாழ்வு நீங்கி மக்களின் அறிவு ஓங்கி வளருகிறது. எல்லோரும் இந்திய மக்களாகக் கூடி இன்புற்றிருக்கும் நிலையினை இன்று எங்கும் காண்கிறோம்.

இதற்குக் காரணம் இன்று நமது நாட்டில் பல துறை களிலும் ஏற்பட்டு உள்ள முன்னேற்றமே. திருச்சி மாவட்டத்

தில் ஒவ்வொரு துறையின் கீழும் நிறைவேறியுள்ள பணிகளைக் கண்டோம். இன்னும் எஞ்சியுள்ள சிலவற்றை இங்கு காணுவோம்.

தனக்கென ஒரு வீடு

முதலாவதாகக் குடியிருப்பு வசதிகளைக் குறித்து விளக்குவோம். கூட்டுறவின் அடிப்படையில் வீடு கட்டும் பணியில், எல்லா மாவட்டங்களையும் போலவே திருச்சியும் விரைந்து முன்னேறி யுள்ளது. எத்தனைதான் இருந்தாலும் தனக்கென்று ஒரு வீடு இல்லாவிட்டால் மனித மனம் நிறைவு பெறாது. திருவள்ளுவர் இந்தக் கருத்தை நயம்பட ஓரிடத்தில் விளக்குகின்றார். தன்னுடைய வீட்டிலே இருந்து தான் ஈட்டிய பொருளைப் பிறரோடு பகிர்ந்து உண்பதிலே ஏற்படுகின்ற இன்பத்தைக் காதல் இன்பத்தோடு அவர் ஒப்பிடுகிறார். "தம்மில் இருந்து" என்பது அவர் வாக்கு.

நாட்டுப்புறத்தில் மனை அமைத்துக்கொள்ள ஆள் ஒன்றுக்கு ரூ. 750 வரை கொடுக்கப்பட்டது. இத்தகைய கடனுதவி, நல வளர்ச்சி வட்டாரங்களிலே தான் சிறப்பாகத் தரப்பட்டது. இத்திட்டம், பழைய தடத்திலேயே சென்று கொண்டிருக்கும் நாட்டுப் புறத்தின் போக்கினை முற்றிலும் மாற்றி அமைக்க ஓரளவு துணைபுரிகிறது. மேலும் நாட்டுப் புற மக்களுக்கு வேலை தரவும் இத் திட்டம் பயன்படுகின்றது. கட்டிடத் தொடர்பான பல தொழில்கள் இதனால் வளர முடிகின்றது. கரூர் வட்டாரத்தில் 48 மனைகளும், வெள்ளியானை வட்டாரத்தில் 3 மனைகளும், பெரம்பலூர் வட்டாரத்தில் 4 மனைகளும், திட்ட காலத்திற்குள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. மற்றும் அநேக மனைகள் எல்லா வட்டாரங்களிலும் கட்டப்பட்டு வருகின்றன.

நகரச் சுற்றுப் புறங்களில் உள்ள வீடு கட்டும் சங்கங்கள் 14. 1667 பேரை உறுப்பினராகவும் 11,56,155 ரூபாயைப்

பங்குத் தொகையாகவும் கொண்டுள்ள பெரிய வீடுகட்டும் சங்கம் ஒன்றும் உள்ளது. இச்சங்சத்தால் வீடு கட்டுவதற்குக் கடனுக வழங்கப் பட்டுள்ள தொகை ரூ: 32,78,890. அர சாங்கம் கொடுத்திருக்கும் கடன் ரூ. 33,41,911. 393 வீடு கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. 228 மனைகளில் வேலை நடந்து கொண்டிருக்கின்றது.

13 நாட்டுப்புற வீடு கட்டும் சங்கங்கள் புதிதாக அமைக்கப் பட்டுள்ளன. 11 மனைகள் இதுவரையில் இவற்றின் கீழ் கட்டப்பட்டு இருக்கின்றன.

மகளிர் நல மன்றம்

குடும்ப நலனும், சமுதாயத் தொண்டுமே மகளிர் நல மன்றத்தின் முக்கிய நோக்கங்களாகும். எனவே குடும்பங் களோடு கலந்து உறவாடி அவர்களுக்குத் தேவையான உதவிகளை அளித்தல், அடிப்படைக் கல்வி புகட்டுதல், தாழ்த் தப்பட்ட பெண்டிரின் நலத்தைப் பேணுதல் முதலிய செயல் களை இம்மன்றம் மேற்கொண்டு, திறம்பட நடத்தி வரு கின்றது.

திட்டகாலத்திற்குள் பெரம்பலூர் வட்டத்திலுள்ள கடம்பம், பெரியம்ம பாளையம், மேட்டூர், தழுதலை ஆகிய இடங்களில் மகளிர் மன்றங்கள் நிறுவப்பட்டன. கரூர் வட்டத்தில் வேங்கடபுரம், புதுப்பாளையம் ஆகிய இரண்டு இடங்களிலும், முசிரி வட்டத்தில் மொருப்பட்டி, காரிஹலி ஆகிய இடங் களிலும் மகளிர் மன்றங்கள் உள்ளன.

பயிற்சி மிக்க சங்கப் பொறுப்பாளர்களும், செவிலிய ரும், குடும்பப் பெண்களுக்கு வேண்டிய எல்லா உதவி களையும் அறிவுரைகளையும் தாமாகச் சென்று நேரில் அளிக்கின்றனர்.

கணவரால் கைவிடப்பட்டோரும், கைம்பெண்டிரும் சென்னையில் உள்ள மகளிர் இல்லத்தில் சேர்க்கப்படுகின்றனர். இவ்வில்லத்தில் நன்கு பயிற்சி பெற்ற சில மகளிர் மன்றத்திலே பொறுப்பேற்று திறம்படச் செயல் ஆற்றுகின்றனர். பெரம்பலூர் வட்டாரத்திலுள்ள பூலம்பாடியில் நூற்பு அமைப்பாளராக (Spinning organiser) இன்று இருப்பவர் முன்பு மகளிர்இல்லத்தில் இருந்தவரே ஆவர்.

சில வீடுகளில் இன்று சர்க்கா சுழலவும், மற்றும் சில வீடுகளில் தையல் பொறிகள் ஒலிக்கவும், இன்னும் சில இல்லங்களில் எந்நேரமும் பெண்கள் பின்னல் வேலைகளில் மூழ்கி இருக்கவும் காரணமாக இருந்ததும், இன்றும் இருந்து வருவதும் இந்த மகளிர் நல மன்றமே யாகும். சேரிப் பெண்டிருக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுப்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு பணியாகும்.

வாரத்திற்கு மூன்று முறை பலவிடங்களில் மாதிரி நிலையங்களை (Model centres) அமைத்து, மகளிருக்குத் தொழில் கற்றுக் கொடுக்கிறார்கள். கிராமப் பெண்டிர் அங்கு குழுமி பின்னல், தையல், நூற்பு முதலிய கைத்தொழில்களைப் பயிலுகிறார்கள். சிலர் இதன் மூலம் மாதத்திற்கு ரூ. 30–லிருந்து ரூ. 60 வரை வருவாய் பெறுகின்றனர். யாவற்றுள்ளும் மிகச் சிறப்பான கைத் தொழிலாகப் பயன்படுவது நூற்பு. சராசரி மாதத்திற்கு 100 ரூபாய் வரையில் ஒருவர் இதன் மூலம் சம்பாதிக்க முடிகின்றது. அப்பளத் தொழிலும் மகளிர் நல மன்றத்தின் துணையுடன் நடக்கின்றது.

முதியோர் கல்வி சிறப்பாகச் சேரிகளில் மேற்கொள்ளப்படுகிறது. முதல்நிலை அடிப்படை வகுப்புகள் (Pre-basic classes) 2 முதல் 7 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு



துயர் துடைக்கும் பணியிலே மகளிர் மன்றம்.......

இங்கு நடத்தப் படுகின்றன. 100-க்கும் மேற்பட்ட குழந்தைகள் மகளிர் மன்ற அமைப்பாளர்களின் கண்காணிப்பின் கீழ் வளருகின்றனர்.

புயலுக்குப் பின்......

வாழ்க்கைக்கு வேண்டிய யாவும் வாய்த்து மக்கள் மன நிறைவுடன் வாழ்வதைக் காணப் பொருதவள் போல, இயற்கை சிலபோது நம்மீது சீற்றம் கொள்கிருள். நமது இன்ப அமைதியைச் சிதைத்து நம்மைத் துன்பக் கேணி யில் தள்ளி விடுகிருள். அத்தகைய நிகழ்ச்சிகளுள் ஒன்று தான் நமது மாநிலத்தில் முன்பு தலை காட்டிய புயல்.

புயலால் சேதமுற்ற பகுதிகளில் திருச்சி மாவட்டமும் ஒன்றாகும். இப்பகுதிகளில் வாழ்விழந்த மக்களின் வாழ்வைப் புதுப்பிக்கும் தொண்டு தீவிரமாக மேற்கொள்ளப் பட்டது. இம்மாவட்டத்திலுள்ள புதுக்கோட்டைப் பகுதியில் 37 டன்னே 700 பவுண்டு விதைநெல் உதவியாகத் தரப்பட்டது. 5 டன்னே 2,117 பவுண்டு விதைநெல் குறைந்த விலைக்கு விற்கப்பட்டது. இவ்வாறே 185 டன்னே 24 பவுண்டு அம்மோனியம் சல்பேட்டும் 1,825 பவுண்டு தழையுர வித்தும் உதவியாக வழங்கப்பட்டும், 25 பவுண்டு தழையுரம் பாதி விலைக்கு விற்கப்பட்டும் இருக்கின்றன.

இரண்டு எண்ணெய் இறைப்புக் குழாய்கள் பாதி வாடகைக்குத் தரப்பட்டன. $\frac{2}{3}$ உதவித் திட்டத்தின் ($\frac{2}{3}$ **subsidy scheme**) கீழ் ஒரு புல்டோசர் 60 மணி நேரம் வேலை செய்துள்ளது. எக்கரிட்டுக் கிடந்த நான்கு ஏக்கர் நிலம் செப்பனிடப்பட்டது. இதற்காகிய செலவு 720 ரூபாயில், ரூ. 240 மட்டுமே நிலத்துக்கு உடையவரிடம் பெற்றுக் கொள்ளப்பட்டது. 54,360 ரூபாய் வரை கடன் கொடுக்கப் பட்டது. 165 டன்னே 90 பவுண்டு அம்மோனியம் சல்பேட்டு அளிக்கப்பட்டது.

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடை, உறையுள் வசதிகளுக்காக ஒன்பதேகால் லட்சம் ரூபாய்களுக்கு மேல் செலவிடப் பட்டிருக்கிறது. இது போகப் புயலால் பாதிக்கப் பட்டோருக்கெனத் தனியே அளிக்கப்பட்ட கடன் தொகை பதினாறரை லட்சம் ரூபாய்களுக்கும் மேலாகும். சுமார் எட்டு லட்சம் பெறுமான நிலவரி நிறுத்தி வைக்கப் பட்டதோடு, 51,115 ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது.

நலம்...
சிறக்க!

“ பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து ”

—திருக்குறள்.

நலம்...

சிறக்க!

சுகாதாரம்

மழை வளத்தால் நீர் பெருக, நீர்ப் பெருக்காலும் நில வளத்தாலும் மாருத விளையுள் கிட்டும். விளைவின் பயனுக மக்களின் ஊன் பெருகும். ஆனுல் இதனுல் மட்டும் நலஞ் சிறக்காது. உணவோ, உடையோ, உறையுளோ கொண்டு மட்டும் நலத்தை விலைக்கு வாங்கிவிட முடியாது. இவை யாவற்ருேடும் உடல் நோய்வாய்ப்படாது ஊக்கமுடன் இயங்கினுல்தான் உள்ளம் தழைக்கும்; வாழ்வில் வளம் கொழிக்க, நலம் சிறந்து ஓங்கும்.

உடல் நலம் என்றவுடன் நம்மையறியால் மருத்துவரும் மருந்தும் நம் கண்முன் தோன்றி விடுகின்றன. மண்ணிலே தோன்றும் உயிர் யாவும் நோய்க்கு ஆளாகித்தான் தீர வேண்டும் என்ற இயற்கைச்சட்டம் ஒன்றும் கிடையாது. எனவே உடல் நலம் குறைவதும் கெடுவதும் நாமாக நமது கவனக்குறைவினுலும் சோம்பலினுலும் விளைவித்துக் கொள்ளுவனவே. சுகாதாரம் பற்றிய பல பொது உண்

மைகளை அறியாமையும் அதற்கொரு முக்கிய காரணமாகும். இயற்கையாக நலத்துடன் உலவவேண்டிய உடலை நோய்க்கு ஆளாக்கிப் பின் மருந்துக்கும் அலைகிறோம். வருமுன் தடுப்பதை விடுத்து வந்தபின் தணிக்க முயற்சிக்கிறோம். வருமுன் காப்பதே சீரிய முறை. சுகாதார வழிகளை உணர்ந்து கடைப் பிடிப்பதே அதற்கு ஏற்ற வழி.

சுகாதாரத் துறையில் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அநேகம். தொத்து நோய்த் தடுப்பும், குடி நீர் வசதியும் அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. மலக்கழிவிடங்கள் அமைத்தல், கழிவு நீர்க் கால்கள் வெட்டி விடுதல் ஆகிய பணிகளும் சிறப்பாக நடந்தேறியுள்ளன.

நோய்ப்பட்ட இடங்களுக்குத் தாமாகச் சென்று எச்சரிக்கையான பல நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நடமாடும் வண்டிகள், ஊசி போடுவதற்கெனவே எப்பொழுதும் தயாராக வைக்கப்பட்டிருக்கும் மருத்துவர் ஆகியோரின் உதவியால் திருச்சி மாவட்டத்தில் காலரா பரவுதல் வெகுவாகக் குறைந்துள்ளது. 1950-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் 80 கிராமங்களில் சின்னம்மை பரவியது. சின்னம்மை கண்ட 590 பேர்களில் 151 பேர் இறந்தனர். 1955-ஆம் ஆண்டில் சின்னம்மை பரவிய கிராமங்கள் 17. சின்னம்மை கண்ட 64 பேர்களில் இறந்தோர் எண்ணிக்கை 13. இப்புள்ளி விவரத்தால் இம்மாவட்டத்தில் தடுப்பு முறைகள் எந்தஅளவுக்கு வெற்றியுடன் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவாக உணரமுடியும். சின்னம்மை வெகுவாகக் குறைந்திருக்கிறது.

கொசுவை அழிக்கும் வேலையில் ஏனைய மாவட்டங்களைப் போலவே திருச்சி மாவட்டமும் முனைந்து நின்றது. அரியலூர், ஜயங்கொண்டான், டி. பாலூர், லால்குடி, மணச்ச

நல்லூர், புவளூர், முசிரி, தோட்டியம், காட்டுப்புத்தூர், துறையூர், குளித்தலை, மணப்பாறை, ஆலங்குடி, ஆகிய ஊர் மன்ற ஆட்சிகளின் கீழ் மலேரியாத் தடுப்பு வேலைகள் மேற்கொள்ளப் பட்டன. பச்சமலைக் குன்றுகளில் கொசு ஒழிப்பு வேலை சிறப்பாக நடந்தேறியது. தெற்கு சேலத்திலுள்ள மலேரியாத்தடுப்பு அமைப்பு (Anti-malaria Unit) இக்குன்றிலுள்ள கிராமங்களில் மருந்து தெளிக்கும் பணியை ஏற்றுக் கொண்டது. இந்த அலுவலைக் கண்காணிப்பதற்காகத் துறையூரில் ஒரு சிறு நிலையமும் அன்றிலிருந்தே பணி செய்யத் தொடங்கியது. 1950-ஆம் ஆண்டில் 160 பேர் கொய்னு (quinin) மருந்தால் மருத்துவம் பெற்றனர். 1955-ஆம் ஆண்டில் இத்தகைய மருத்துவ வசதி 651 பேருக்குக் கிடைத்தது.

முசிரி வட்டத்திலுள்ள தோலூர் பட்டியில், மாவட்ட ஆட்சி மன்றத்தால் நடத்தப்பட்டு வரும் குட்ட நோய் மருத்துவ நிலையம் ஒன்று உள்ளது. நாற்பதுக்கு மேற்பட்ட நோயாளிகள் இங்கு தங்கியிருந்து மருத்துவம் பெறுகின்றனர்.

நரப்புச் சிலந்தி நோய் உயிர்வார்தை தரும் நோய்களில் தலைமை இடத்தைப் பெறத்தக்கது. நரம்புச் சிலந்தியுடையோர் படுந்தொல்லை எழுத்தில் அடங்காது. இந்நோய் பரவுவதற்கு மூலமாக வுள்ளது நீர். 1955-ஆம் ஆண்டில் பெரம்பலூர் வட்டத்தில் இதைத் தடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. குளங்களுக்குக் காவலாளிகளாக இருந்த ஆட்களே இவ்வேலைக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டனர். உடையார்பாளையம் வட்டம் சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு திட்டம் சுகாதாரத்துறை நெறியாளரின் ஒப்புதலையும் பெற்று செயல்பட இருக்கின்றது. இந்நெறியாளரின் அலுவலகத்திலுள்ள ஆராய்ச்சிக்குழு (Research unit) ஒன்று கரூர்,

பெரம்பலூர், அரியலூர், ஜயங்கொண்டான் சரிவுகள் ஆகிய இடங்களுக்குச் சென்று நரப்புச் சிலந்தி சம்பந்த மான கணக்கு ஒன்று எடுத்தது.

எலும்புருக்கி நோயின் கொடுமையினின்றும் தப்பிப் பிழைக்க தற்போதுள்ள சிறந்த சாதனம் பி சி ஜி. ஊசி போட்டுக் கொள்ளுவதே ஆகும். நம் மாநிலமெங்கும் இவ் வேலை நடைபெற்றது. திருச்சி மாவட்டத்தில் திருச்சி நகரிலும், நகரைச்சுற்றி 6 மைல் எல்லைக்கு உட்பட்ட பரப்பி லுள்ள ஊர்களிலும், ஊசி குத்தும் பணி சிறப்பாக நடை பெற்றது.

ஊசி குத்தும் மருத்துவருக்கு கோபம் நம்மீதில்லை ! நோய்மீதுதான் !



1950-ஆம் ஆண்டில் இம் மாவட்டத்தில் 11 தாய் சேய் நல விடுதிகள் (Maternity and Child welfare centres) இருந்தன. இவற்றில் 13 தாயர் (Midwives) வேலை செய்தனர். 1955-ஆம் ஆண்டில் மேலும் ஒரு விடுதி புதிதாகச் சேர்ந்துள்ளதோடு 16 மருத்துவ மனை உதவியாளரோடு (Maternity Assistants) கூடிய மருத்துவ மனை ஒன்றும் உள்ளது. நான்கு படுக்கை களைக் கொண்டிருந்த முசிரி நிலையம், தற்போது ஆறு படுக்கை களைக் கொண்டதாக உள்ளது.

1955-ஆம் ஆண்டில் மேலும் ஐந்து தாய்சேய் நல விடுதிகள் அமைக்கப்பட்டன. அரும்பாவூர், உப்பிலியபுரம், ஆகியவிடங்களில் இரண்டும், கரூர் பெரம்பலூர் ஆகிய வட்டா ரங்களில் மூன்றுமாக இவையுள்ளன. முன்னவை இரு விடுதிகளுக்கும் ஒவ்வொன்றுக்கும் நன்னான்காக எட்டு சிறிய நிலையங்கள் உள்ளன. இந்நிலையங்களில் எட்டு மருத்துவ மனை உதவியாளர் வேலைபார்க்கின்றனர். எல்லா நிலையங் களிலும் குழந்தைகளுக்குப் பால் உதவப்படுகிறது. பொறு க்கி எடுக்கப்பட்ட சில நிலையங்களுக்கு மட்டும் சோப்பு, வைட்ட மின் குளுகைகள், மீன் எண்ணெய்க் குளுகைகள் ஆகியவை அளிக்கப்படுகின்றன.

நாட்டுப்புறத்தில் சுகாதாரம் நல்ல் முறையில் பேணி வளர்க் கப்பட்டுள்ளது. அநேக மலக்கழிவிடங்கள் இந்த மாவட் டமெங்கும் கட்டப் பட்டுள்ளன. 1955-ஆம் ஆண்டில் 19,172 அடி நீளத்திற்குப் பக்கா கழிவு நீர்க் கால்வாய்கள் அமைக்கப் பட்டன. இந்த ஆண்டில் ஊராட்சி மன்றங்களால் 16 குடிநீர்க் கிணறுகள் தோண்டப் பட்டுள்ளன. இவற்றுள் இறை கிணறுகள் (draw wells) 3 ; புதை கிணறுகள் (bore wells) 3 ; குழாய்க் கிணறுகள் (tube wells) 7 ; இறைக்கும் யந்திரத்தோடு கூடிய கிணறுகள் 3. மேலும் இவ்வாண்டில் உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 225 குளங்கள் வெட்டப் பட்டுள்ளன.

முதல் ஐந்தாண்டுத் திட்டகால இறுதிக்குள் இந்த மாவட்டத்தில் மொத்தம் 1,013 குடிகிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன. இன்னும் 687 கிணறுகள் வெட்டப் பட்டு வருகின்றன. திட்ட காலத்தில் இதற்குச் செலவாகியுள்ள தொகை ரூ 27,77,110. 8 குழாய் நெடுகைகள் (pipe lines) அமைக்கப் பட்டு வருகின்றன இதற்குச் செலவு ரூ 17,413.

சுற்றுப்புறம் தூய்மையாகவும், வீடு துப்புரவாகவும், குடிநீர் சுத்தமாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுவதனுல் நோய் வராமல் ஓரளவு தடுக்கமுடியும். ஆனால் இவற்ருல் மட்டுமே நோயை முற்ற அழித்து விட இயலாது. உணவு, உழைப்பு, ஓய்வு இவற்றிலே ஒரு வரம்பின்றி முறை தவறுவதால உடல் நலங் கெடுகின்றது. மேலும் பருவ மாற்றத்தாலும் உடல்நிலை பாதிக்கப்படலாம். இப்படி இன்னும் எத்தனையோ காரணங்களால் மனிதன் பிணிப்புறுகின்ருன். எனவே சுகாதாரத்தோடு மருத்துவமும் இணைய வேண்டிய தாகின்றது. இயற்கைவழி நிகழும் எத்தனையோ நலக்கேடுகளைப் போக்க மருத்துவம் தவிர்க்க வொண்ணுதது.

ஆடு மாடுகளுக்கும் மருத்துவ சாலைகள் நிறுவிய அசோகனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே நமது நாடு கண்டது நல்வாழ்வுக்கு இன்றியமையாத மருத்துவத்தின் வளர்ச்சியில் நமது நாடு இன்று மிக்க கவனம் செலுத்திவருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் நமது மாநிலம் இத்துறையில் நன்கு முன்னேறி யுள்ளது. பலவிடங்களில் மருத்துவ விடுதிகள் புதிதாக அமைக்கப் பட்டிருப்பதோடு மதுரையில் ஒரு மருத்துவக் கல்லூரியும் புதிதாகத் தொடங்கப்பட்டது.

திருச்சி மாவட்டத்தில் நடந்தேறியுள்ள பணிகள் பலவாகும். இரண்டு மூலச் சுகாதார நிலையங்கள் (primary health centres) புதிதாகத் திறக்கப்பட்டன. இவையிரண்டும் தேசிய வளர்ச்சி வட்டாரங்களில் அமைக்கப் பட்டுள்ளன.

ஒன்று முசிரி வட்டாரத்தைச் சேர்ந்த டி. புதூரிலும், பிறிதொன்று ஆலங்குடி வட்டாரத்தைச் சேர்ந்த திருவரங்குளத்திலும் உள்ளது.

ஜெயங்கொண்டானி லுள்ள உள்ளூர் வளர்ச்சி நிதியால் நடைபெற்றுவரும் மருத்துவ விடுதிக்கு, நடமாடும் மருத்துவக்கூடம் ஒன்று அனுமதிக்கப் பட்டுள்ளது.

கரூரிலுள்ள அரசாங்க மருத்துவ இல்லத்தின் படுக்கைகள் 40 லிருந்து 52-க்கு அதிகரிக்கப் பட்டுள்ளன. லால்குடியிலுள்ள அரசாங்க மருத்துவ இல்லத்திலும் இவ்வாறே படுக்கைகள் சேர்க்கப் பட்டுள்ளன. முன்பு அங்கு பத்து படுக்கைகளே இருந்தன. ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் அவை 22-ஆக மிகுந்துள்ளன.

திருச்சி யிலுள்ள மாவட்டத் தலைமை காந்தி நினைவு மருத்துவ நிலையத்தில் அமைத்துள்ள பகுதியாகிய 67 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனை, திருச்சியிலுள்ள புதிய மாவட்டத் தலைமை மருத்துவ நிலையத்திற்கு மாற்றப்பட்டது. அதற்கெனத் தனியே ஒரு கட்டிடம் எழுப்பப் பட்டுள்ளது.

உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரியலூர், கீரனூர், ஆலங்குடி ஆகிய இடங்களிலுள்ள அரசாங்க மருத்துவ விடுதிகளில் மருத்துவ மனைப் பகுதிகள் தனியே அமைக்கப்பட்டு உள்ளன.

மருத்துவ விடுதிகளை விரிவு படுத்துவதற்கேற்ப மருத்துவர்களும் ஏனைய அலுவலரும் நிரம்ப இருக்க வேண்டும். இல்லையேல் மருத்துவம் செம்மையாக நடைபெற வியலாது.

நோயாளிகளுக்கெனத் தனியே நூலகமும் படிப்பகமும் திருச்சியில் அமைந்திருக்கின்றமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

எல்லோரும் கூடி...
இன்புற்றிருக்க

“ திங்கள்மும் மாரி பெய்க ! திருவறம் வளர்க ! செங்கோல்
நன்கினி தரச ஞள்க ! நாடெலாம் விளைக !—மற்றும்
எங்குள அறத்திஞேரும் இனிதூழி வாழ்க . . . . ! ”

எல்லோரும் கூடி இன்புற்றிருக்க!

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வே நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே"

என்று பாடினார் பாரதியார். பண்ணோடு கலந்து இசைப்பதற்காக அவர் இதைக் கூறவில்லை. ஒற்றுமை யின்றிப் பாழாகும் மனித இனம், எல்லாத் துறையிலும் பிற்போக்கில் தாழ்வுற்று நிற்கும் நிலை கண்டார். நெல்லிக்காய் மூட்டைகளைக் கண்டு கண்டு நெஞ்சம் உருகியதன் விளைவாகவே இந்த அறிவுரையை அவர் நமக்குக் கூற நேர்ந்தது. இதனை உணர்ந்தால்தான் உய்ய வழியுண்டு என்பதை நமது அன்றாட உலக நிகழ்ச்சிகள் நமக்கு புலப்படுத்துகின்றன.

பழங்கால வரலாற்றில் இந்தியாவின் தனிச்சிறப்பு, அதன் ஊராட்சி மன்ற முறையே. ஊராட்சி மன்றங்களே உண்மையில் நாட்டை ஆண்டன. ஊர்மக்கள் யாவரும் ஒன்றுபட்டு தம்முள் மனமொத்து தம்மைத்தாமே ஆண்டு கொள்ளும் அளவுக்கு அன்றைய மக்களிடையே ஒற்றுமை என்னும்



கூட்டுறவுப் பண்டகசாலைகளால் உழவர் பயன்பெறுகின்றனர்.

சீரிய பண்பு நிலவி யிருந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். வணிகத் துறையிலும் அவ்வாறே அவர்கள் ஒற்றுமையுடன் முன்னேறினர்கள் என்பதைப் பழங் காலத் தமிழ் இலக்கிய வாயிலாகவும், இடைக்காலக் கல் வெட்டுக்கள் மூலமாகவும் அறிகின்றோம். எனவே நமது பண்டையோர் நெறியைப்பின்பற்றி நாமும் வளர்ச்சியுறவேண்டும். ஒற்றுமையை முதலில் நமக்குள் நிலைநாட்டி, பின்னர் பாருக்கும் உழைக்க வேண்டும். அதற்கான வாய்ப்புகள் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நமது நாட்டில் பெருகி வருகின்றன. ஒவ்வொரு துறையிலும் கூட்டுறவு அமைப்புகள் தோன்றி நலமுறப் பணியாற்றுவதைக் இன்றுகண் கூடாகக் காணுகின்றோம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாநிலம் கூட்டுற வின் வளர்ச்சிக்கென பதினேழு லட்சம் ரூபாயை ஒதுக் கியது. இரண்டாவது திட்டத்தில் சுமார் 293 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப் பட்டுள்ளது. இன்றுள்ளதைக் காட் டிலும் இன்னும் வியத்தகு முறையில் இரண்டாவது திட்டத் தின் இறுதியில் இங்கு கூட்டுறவுகள் பணியாற்றும்.

நாட்டின் முன்னேற்றம், நாட்டுப் புறத்தின் முன்னேற்றம் என்பதை முன்னரே விளக்கினோம். அதற்கேற்றவகை யிலேயே முதல் ஐந்தாண்டின் பணிகளும் நிறைவேற்றப் பட்டு வந்தன. கூட்டுறவு வங்கிகளின் மூலம் உழவர் போதிய கடனுதவி பெற்றனர். குடிசைத் தொழில்கள் கூட்டுறவு முறையில் ஆக்கம் பெற்றன. நெசவாளரின் வாழ்வு வளம்பெறப் பெரிதும் துணையாக நின்றவை கூட்டுறவு அமைப்புகளே. இன்னும் பால் வழங்கும் சங்கம், மனையெ ழுப்பும் சங்கங்கள் ஆகியவையும் கூட்டுறவு முறையில் செம் மையாகப் பணியாற்றின. இவற்றின் விளைவாக மக்களின் வாழ்வு பலவகையிலும் தழைத்து ஓங்கியது.

திருச்சி மாவட்டத்தில் இரண்டு கூட்டுறவுத் தலைமை மா வட்ட வங்கிகள் உள்ளன. ஒன்று திருச்சியிலும், மற் றொன்று புதுக் கோட்டையிலுமாக இருக்கின்றன. இவை இரண்டும் உழவுக்கும் வாணிபத்திற்கும் ஆக்கம் அளிக்கின் றன. இதிலிருந்த உறுப்பினர் தொகை 1,122 லிருந்து 1,215-க்கு உயர்ந்துள்ளது. பங்குத் தொகையும் முதலில் ரூ. 5,60,510-ஆக இருந்தது, இப்பொழுது 7,77,650 ரூபா யாக இருக்கிறது. 1951-ஆம் ஆண்டில் இரண்டு கோடிக்குச் சிறிது அதிகமாகக் கடன் தரப்பட்டுள்ளது. 1955-ஆம் ஆண்டி லோ கடனாக வழங்கப்பட்ட தொகை மூன்று கோடியை நெருங்கியுள்ளது. இதிலிருந்தே இந்த வங்கிகளின் தொண்

டினை ஓரளவு உணரலாம். சுமார் 80 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட லாபத்தில் இவை வேலை செய்துள்ளன என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

வேளாண்மைத் தொடர்பான நாணயச் சங்கங்கள் இம்மா வட்டத்தில் விரைந்து பெருகின. 1955-ஆம் ஆண்டின் இறுதி யில் 748 நாணயச் சங்கங்கள் இருந்தன. 74,878 உறுப் பினர் இவற்றில் இருந்தனர். அவர்களின் பங்குத்தொகை ரூ. 15,05,247. நீண்டகாலக் கடனும் குறைந்த கால அளவுக் கடனுமாக ஆண்டுக்குச் சராசரி 45 லட்சம் ரூபாய் இவைகளி லிருந்து வேளாண் மக்களுக்குத் தரப்பட்டு வருகின்றது.

ஐந்து நில அடமான வங்கிகள் சிறப்புடன் பணிபுரிந்து வரு கின்றன. நிலத்தை வளப்படுத்தவும், பழங்கடனைத் தீர்க்க வும் அவை உழவருக்கு உதவி அளிக்கின்றன. இவற்றில் நாலாயிரத்துக்கு மேற்பட்டோர் உறுப்பினராக உள்ளனர்.

விறலிமலை, பூவாசக்குடி ஆகிய இடங்களிலுள்ள பல்பணி நாணயச் சங்கங்கள் (Multipurpose Credit Societies), கிடங்கு கள் (Godowns) அமைத்துள்ளன. சங்கங்களின் உறுப்பினர் கள் தம் பண்டங்களை நல்ல விலை வரும் வரையில் பாதுகாப் பாக இவ்விடத்தில் வைத்திருக்கலாம். இவற்றைக்கட்ட அரசாங்கம் 5,000 ரூபாயை உதவியுள்ளது. 6,000 ரூபாயைக் கடனாகத் தந்தது.

நீண்ட காலத் தவணையுமின்றி, குறைந்தகாலத் தவணை யும் இன்றி, ஒரு நடுநிலைப்பட்ட இடைக்காலத் தவணை முறை யில் கடன் வழங்குவதற்காக இரண்டு நாட்டுப்புற வங்கிகள், (Rural Banks) அமைக்கப் பட்டுள்ளன. குளித்தலை வட்டத் தில் உள்ள நங்கவரத்திலும், முசிறி வட்டத்திலுள்ள தொறை யூரிலும் இவை நிறுவப்பட்டு இருக்கின்றன.

கூட்டுறவு அங்காடிகள்

கூட்டுறவு அங்காடிகள் மிகவும் குறிப்பிடத் தக்கன. உண்டாக்கப்படும் பண்டங்கள் விலைபோகவில்லை யானால், அதனால் பாதிக்கப்படும் தொழிலாளர் பலராவர். தொழிலும் தேக்கமடையும். இம்மாவட்டத்தில் முதல் திட்ட காலத்திலிருந்து பத்து அங்காடிச் சங்கங்கள் (Marketing Societies) செவ்வனே தம் கடமையைச் செய்து வருகின்றன. இவற்றில் உறுப்பினராக உள்ள 6,235 உற்பத்தியாளரும் இதனால் நல்ல பயன் அடைகின்றனர். உற்பத்தியை ஈடாகக் கொண்டு உறுப்பினர்களுக்குக் கடனுதவியும் அளிக்கப்படுகின்றது. 1955-ஆம் ஆண்டில் மட்டும் இந்தச் சங்கங்கள் 93,366 ரூபாய் பெறுமான பண்டங்களை விற்பனை செய்துள்ளன. 32 நாட்டுப்புற வங்கிகள் இவற்றோடு இணைந்துள்ளன. இதன் மூலம் அவை தமது உறுப்பினர்களுக்கு ஓரளவு உதவ முடிகின்றது. திருச்சியிலும் புதுக்கோட்டையிலும் உள்ள தலைமை வங்கிகள் கீழுள்ள எல்லாச் சங்கங்களுக்கும் தேவையான பண உதவியைச் செய்கின்றன.

பாலைச் சேகரித்து வழங்கும் சங்கங்கள்

இத்தகையச் சங்கங்கள் திட்டத்தின் தொடக்கத்தில் 25 இருந்தன. ஐந்தாண்டிற்குள் மேலும் பதினெட்டு சங்கங்கள் புதிதாகத் தோன்றின. 5,519 பால்காரர்கள் இவற்றில் உறுப்பினராக உள்ளனர். இவர்களின் பங்குத் தொகை ரூ. 87,445. ஒரு நாளைக்குச் சராசரி 1,590 பட்டினம் படி பால் சேகரிக்கப்பட்டுவந்த இடத்தில் இன்று 2,983 பட்டினம் படி பால் சேகரிக்கப் படுகின்றது.

உறுப்பினராக இருக்கின்ற 1,196 பேருக்கும் கறவைகள் வாங்குவதற்காக 2,32,700 ரூபாயை அரசாங்கம் கடனாக அளித்தது. 1955-ஆம் ஆண்டில் மட்டும் 5,560 ரூபாய் பெறு

மான தீனியைப் பால்தரும் கூட்டுறவுகள் தம் உறுப்பினர் களுக்குத் கொடுத்துள்ளன. திருச்சியிலுள்ள தலைமைச்சங் கம், பால் சோதனைக் கூடம் ஒன்றினை நிறுவியுள்ளது. அத்தோடு புதூர், அரியலூர், திருவளர்சோலை ஆகிய இடங்களில் கறவைகளுக்குத் தீனியிடும் முறைகுறித்து விள க்குவதற்கான விளக்கப் பண்ணைகளையும் திறந்துள்ளது.

பலசமயங்களில் கண்காட்சிகளை நிறுவி கூட்டுறவுக்கு ஆக்கங் தேடப்படுகிறது. அல்லாமலும் இச்சங்கத்தின் வளர்ச் சிக்கெனத் தனியே உள்ள பாலின் பயனைச் சுட்டும் நாளிலும் (Drink more milk day) இந்தக் கூட்டுறவுகள் சிறப்பான பங்கு எடுத்துக்கொள்ளுகின்றன.

மாடு என்ற சொல்லுக்கே செல்வம் என்பதுதான் பொருள்

நெசவாளர் கூட்டுறவுகள்

திட்டகாலத்தில் பத்தொன்பது கூட்டுறவுச் சங்கங்கள் புதியனவாகத் திறக்கப்பட்டன. ஏற்கனவே இருந்த அடிப் படை நெசவாளர் சங்கங்கள் (primary weavers societies) 60. 7,568 பேரை உறுப்பினராகவும், 580439 ரூபாயைப் பங்குத் தொகையையும் இவைகள் கொண்டுள்ளளன.

இம்மாவட்டத்திலுள்ள 10761 தறிகளில் 4,600 தறிகள் கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டுவரப் பட்டுள்ளன. இவற் றில் 1,242 தறிகள், திட்ட காலத்தில் கூட்டுறவின் எல்லேக் குள் வந்தவை. 22,80,792 ரூபாய் பெறுமான நூலேயும், பிறபொருள்களேயும் நெசவாளர் சங்கங்கள் தம் உறுப்பி னருக்கு வழங்கி அவற்றின் மூலம் 40,71,379 ரூபாய் பெறு மான பண்டத்தை உண்டாக்கி உள்ளன.

துணிகளே விற்கும் சங்கங்களின் இன்றியமையாமைப் பற்றி உரைக்கத் தேவையில்லே. நெசவாளரின் வாழ்வு வளம் பெறுவதற்குப் பேருதவி புரிபவை என்று அவைகளேத் தான் சொல்லவேண்டும். திட்டத்தின் தொடக்க காலத்தில் மூன்றுக இருந்த இந்தச் சங்கங்கள் திட்ட கால முடிவிற் குள் பதினென்றுக வளர்ந்துள்ளன.

குடிசைத் தொழில்களில் கூட்டுறவு

இம்மாவட்டத்தில் குடிசைத் தொழில்களின் வளர்ச்சிக்காகப் பன்னிரண்டு கூட்டுறவுகள் இயங்கி வருகின்றன. பாய் பின்னுதல், கையால் நெல்லரைத்தல், தோல் வேலேகள், உலோகவேலேகள், பெண்களுக்கான குடிசைத்தொழில்கள், அவல் உற்பத்தி, தச்சு வேலே, தட்டான் வேலே ஆகிய பல தொழில்களும் கூட்டுறவுக்குள் இணேந்து வளர்ந்து வருகின் றன. கற்ருழை நாரினின்றும் கயிறு திரிக்கும் சங்க மொன்று கொப்பம் பட்டியில் தொடங்கப் பட்டுள்ளது.

பனை வெல்லத் தொழில்

இம்மாவட்டத்தில் 54 பனங்கற்கண்டு செய்யும் சங்கங்கள் உள்ளன. இவற்றில் 3,287 பேர் உறுப்பினராக உள்ளனர். இவர்களின் பங்குத்தொகை ரூ. 32,880. சுமார் நான்கு லட்சத்து முப்பத்தி ஆறுயிரம் மணங்கு எடையுள்ள பனங் கற்கண்டை இவை உற்பத்தி செய்துள்ளன. பதநீர் இறக்குதவற்காக 1955-ஆம் ஆண்டில் 1954 உரிமைச் சீட்டுகள் வழங்கப் பட்டுள்ளன.

அரசாங்கத்தைச் சேர்ந்த புறம்போக்கு நிலங்கள், சங்கத்தின் உறுப்பினர் சிலருக்கு உடைமை யாக்கப் பட்டிருக்கின்றன. குப்பம்பட்டி பனங்கற்கண்டு உற்பத்திச் சங்கத்தைச் சேர்ந்த நால்வருக்கு, சுமார் பத்து ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டது. இந்த இடம் முசிரி வட்டத்தில் உள்ளது. சீரங்கத்தில்

பனைவெல்லம் தயாரித்தல்.

உள்ள பனங்கற்கண்டு செய்யும் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர் எழுவருக்கு 14 ஏக்கர் நஞ்சை நிலம் கிடைத்துள்ளது. வேலை இழந்த முன்னாள் கள் இறக்கியோர் பதினைந்து பேருக்கு வாழ்வளிக்கும் வகையில் திட்டமொன்று நிறைவேறி உள்ளது. மறவ மதுரையில் அவர்களுக்கு 30 ஏக்கர் நிலம் வழங்கி இருப்பதோடு, குடிசைகள் அமைத்துக்கொள்ளவும், நிலத்தைப் பண்படுத்தவும் தேவைப்படும் பணமும் உதவித்தொகையாகவும் கடனாகவும் கொடுக்கப்பட்டது.

வேண்டாத மதுவும் விடாத மனமும்

குடித்துப் பழகியவர்களிடம் மனமாற்றத்தை உண்டு பண்ணுவது எளிதான காரியமல்ல. இதற்கென உள்ள பிரசார வண்டி, இம்மாவட்டத்தில் வெற்றியுடன் வலம் வருகிறது. 136 கிராமங்களில் படக்காட்சிகள் காட்டப்பட்டன. 12,488 பேர் அவற்றைப் பார்த்தனர். 183 கூட்டங்கள் போடப்பட்டு, சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பட்டுள்ளன. 69,855 பேர் இவற்றில் அறிவுரை பெற்றனர். இவர்களில் 11,035 பேர் குடிப்பழக்கத்தில் இருந்தவர்கள். குடிக்கு மாற்று மருந்தாக பஜனை, நாடகம், கிராம விளையாட்டுகள் ஆகியவை பயன்படுகின்றன. தேர்ந்தெடுத்த பகுதிகளில் இவற்றை அடிக்கடி நடத்தி, பரிசுகளும் வழங்குகின்றனர்.

பனைவெல்லம் செய்யும் புதிய முறைகளை அறிவுறுத்தும் அலுவலர் (Instructor) இந்த வண்டியிலேயே சென்று அங்கங்கே உள்ள சங்க உறுப்பினர்களுக்குப் புது முறைகளைச் செய்து காட்டுகிறார். பனைவெல்லம் இன்னும் அதுபோன்ற உண்ணும் பல பண்டங்கள் செய்வது, சிறந்த உலைகள் அமைப்பது ஆகியவைகளில் இவர் சங்கத்தக்ருக்குப் பயிற்சி கொடுக்கிறார். பதின்மூன்று சதை (Sets) வெல்லம் காய்ச்சும்

பாண்டங்கள் உதவியாகவும், பதினான்கு சதை பாதி விலைக்கும் தரப்பட்டுள்ளன. பத நீரிலிருந்து உண்டாக்கப்படும் பண்டங்களைப் பொருட்காட்சி நடைபெறும் இடங்களில் காட்சிக்காக வைப்பதுடன், அவை புதிய முறையில் எவ்வாறு தயாரிக்கப் படுகின்றன என்பதைப் பொதுமக்களுக்கு அவ்விடத்திலேயே விளக்கியும் காட்டுகிறார்கள்.

வட்டாரங்களில் கூட்டுறவு

நாட்டுப்புற வளர்ச்சி வட்டாரங்கள் கூட்டுறவுகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்து, அவைகளைத் தம் வட்டாரத்தில் ஊக்குவிக்கின்றன. தொக்குப்பட்டியில் பல்துறை சங்கம் ஒன்று (Multipurpose Sosiety) தொடங்கப்பட்டு• உள்ளது. ஸ்ரீரங்க கவுண்டன் புதூரில் தோல் பதனிடுவோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும், பவித்திரம் என்னும் ஊரில் பாய் பின்னுவோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் திறக்கப் பட்டுள்ளன.

1,200 ரூபாய் பெறுமான பூச்சி மருந்துகள் வழங்குவதற்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து 400 ரூபாய் தரப்பட்டது. மேலும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 1,21,490 ரூபாயைக் கடனாகக் கொடுத்துள்ளன.

முசிரி வட்டாரத்தில் 60 கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றி வருகின்றன. ஆமூரிலுள்ள கூட்டுறவு மருத்துவ விடுதிக்கு ரூ. 1,000-மும், பண்டலில் பொலிக்காளைகள் வாங்க ரூ. 1,000 மும் உதவப்பட்டன.

புதுக்கோட்டை வட்டாரத்தில் மூன்று கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டன. இவற்றில் 1,013 பேர் உறுப்பினராக உள்ளனர்.

—:o:—

முன்னேற்றப் . . .
பாதையிலே !

இரண்டாவது திட்டம்

உழவும், தொழிலும் ஒன்றி வளர்ந்தால்தான் நாடும் நன்னிலை அடைய முடியும். மக்களின் வாழ்வும் மடிமையும், பிணியும் இன்றி மாண்புடன் திகழும். எனவேதான் வேளாண்மையோடு, ஆலைகள் பலவற்றையும் நிறுவித் தொழிலை வளர்க்க வேண்டும் என்னும் பெரு நோக்கத்துடன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மேற் கொள்ளப்பட்டது.

பெருந் தொழில்களை நாம் வளர்க்க எண்ணும்பொழுது அதனால் அடையும் பயன் பொது மக்கள் அனைவரையும் சாரவேண்டும். இல்லெனில் பெரும் தொழிலால் ஒரு சிலர் ஆடம்பரமாக வாழவும், பலர் வறுமையால் நலிந்து வாடவும் நேரிடும். இப்பேருண்மையை உணர்ந்த நம் அரசாங்கமும், சோஷியலிஸ முறையில் அரசாங்கத்தை நடத்தத் தீர்மானித் தது. அந் நெறியிலேயே செயல்களையும் ஆற்றி வருகிறது.

பொது மக்களின் வளமான வாழ்வை எண்ணியே இரண் டாவது திட்டத்தின் பொது நோக்கங்கள் வகுக்கப்பட்டன,

கணிசமான அளவுக்குத் தேசீய வருமானத்தைப் பெருக்கி அதன்மூலம், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழி காணப்பட்டுள்ளது. அடிப்படையான பெருந் தொழிலுக்கு ஆக்கங் கொடுத்து நாட்டை விரைவில் தொழில் மயமாக்க வேண்டும். இவ்வாறு செய்வதால், நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் அளவுக்குக் குறையும். வேலை செய்வோருக்கும் எண்ணரிய புதிய புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பொருளாதாரத் துறையிலே தற்சமயம் இருக்கும் மலைக்கும், மடுவுக்குமிடையே உள்ள வேற்றுமையும் குறையும்.

இவையெல்லாம் நம்முடைய குறிக்கோளை அடைவதற்குரிய சில வழிகளாகும். சோஷியலிஸ சமுதாயத்தை உருவாக்குவதிலே இந்த வழிகள் நம்மை நீண்ட தூரம் அழைத்துச் செல்லுமென்பதில் ஐயம் இல்லை. ஆனால் நம்முடைய இறுதி லட்சியம் அதுதான். அந்த அமைப்பு முறையை நாம் அமைத்தால் ஒழிய ஏழைகளுக்கு இனிய வாழ்வில்லை என்பதையும் அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது. எனவே அத்துறையில் முழுவெற்றி அடையும் வரை அமைதியின்றிப் பல ஆக்கப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். தளர்வின்றித் திட்டங்களை வெற்றியோடு முடிக்கவேண்டும்.

நாட்டின் செல்வ வளம் ஓர் இடத்திலேயே குவிந்துவிடாமல் எல்லாப் பகுதிகளிலும் பரவலாக இருக்கும் வண்ணம் நாட்டின் பொருளாதார நிலை அமைக்கப்படும். அதற்கேற்ற வண்ணம் தொழில்களைப் பரவலாக அமைக்கும்படித் திட்டக் குழுவும் வற்புறுத்தி உள்ளது.

பின் தங்கிய பகுதிகளை முதலில் கவனித்து அவைகள் வளம் பெறும் வகையில் ஆவன செய்யப்படும்.

இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தின்படி நம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை 173 கோடி ரூபாய் ஆகும்.

இத்தொகையைக் கொண்டு நாம் கீழ்க்கண்டவாறு நம் மாநிலத்தை வளம்படுத்தத் திட்டங்கள் வகுத்துள்ளோம் :—

துறைகள்	ரூபாய் (லட்சக் கணக்கில்.)
மின்சாரம்	5,759·80
கிராம வளர்ச்சி	1,710·00
நீர்ப்பாசனம்	1,365·20
குடிசைத் தொழில்கள்	1,425·00
கல்வி (தொழிற் கல்வியும் சேர்த்து) ..	1,425·00
மருத்துவம்	879·40
வேளாண்மை	750·50
சுகாதாரம்	722·70
பாதைகள்	807·50
பின் தங்கிய வகுப்புக்களின் முன்னேற்றம்.	599·50
மனையிடங்கள்	341·70
கூட்டுறவு	292·90
கால்நடை வளர்ச்சி	236·00
காடுகள்	146·20
பால் பண்ணை	142·60
மீன்துறை	124·40
மண் வளம் பேணுதல் (Soil Conservation)	118·70
நகர் அமைப்புத் திட்டம்	95·00
நடுத்தரத் தொழில்கள் (Medium Industries)	95·00
உள்ளூர் ஆட்சி மன்றங்கள்	95·00
சமுதாய நலன்	86·25
ஒலிபரப்பு	28·50
புள்ளி விவரத் திட்டம்	19·30

துறைகள்	ரூபாய் (லட்சக் கணக்கில்.)
விளம்பரம்	14·30
உழைப்பாளர் நலன்	11·40
இதர வகைகள்	14·20
மொத்தம் ..	17,306·05

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவிலே நம்முடைய நாடு மகத்தான, இனிய மாறுதலை அடையும். உழவும், தொழிலும் உன்னத நிலையிலே விளங்கும். நாட்டின் வருமானம் நூற்றுக்கு இருபத்தைந்து பங்கு உயர்ந்திருக்கும். கோடி பேருக்குமேல் புதிய துறையிலே பணியாற்றுவார்கள். அதனால் மக்களின் வாழ்வும் பன் மடங்கு வளம் பெறும்.

இந் நன்னிலையை அடைய மக்கள் அனைவரும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பார்களாக! திட்டத்தின் வெற்றியே நாட்டின் வெற்றி. அதுவே மக்களின் வெற்றி. அதுவே வாழ்க்கையின் வெற்றி. இவ்வுண்மையை மறக்காமல் அனைவரும் ஒன்று பட்டு உழைப்போமாக! அப்பால் வெற்றி பெறுவோம் என்பதிலே தினையளவும் ஐயமில்லை.

சென்னை அரசாங்க அச்சுக்கூட சூப்பரின்டெண்டால் அச்சிடப்பெற்றது.

CONNEMARA PUBLIC LIBRARY
25 FEB 1957